
1—4—1949. 26-வது


வெள்ளிவிழா சிறுகதைப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்





ஸ்ரீய:பதியாய் எழுந்தருளியிருக்கும் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்
ஸ்வாமி ஸந்நிதி முன்கோபுரம் ரூ 45000 செலவில் ஜீர்ணோத்தா
சென்ற 24—3—49ல் மஹாஸம்ப்ரோக்ஷணம் மிகச்சிறப்பாக நடந்
அன்று வை, மு. ஸ்ரீ. எடுத்த போட்டோக்களுள் ஐந்து மேலே
யுள்ளன. அவை முறையே (1) தென் கிழக்கிலிருந்து ஒரு தோற்ற
கிழக்கிலிருந்து ஒரு தோற்றம். (3) தேர் நிலையிலிருந்து ஒரு தோற்ற
உள்புறத்தோற்றம்—த்வஜஸ்தம்பத்தின் இருபக்கங்களினின்றும் இ ற்
றங்கள். கீதோபதேச சிற்பத்தைக் கவனியுங்கள்.

JUL 1949


ஏப்ரல்
9உ
வெளிவரும்
பக்ஷிராஜாவின்
பவளக்கொடி
ஹாலிங்கம்...ராஜகுமாரி....வரதன்
சரோஜினி...கிருஷ்ணன்...மதுரம் நடித்தது
டைரக்ஷன்: ஸ்ரீராமுலு நாயுடு..
நாராயணன் கம்பெனி வெளியீடு

பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
– திருவள்ளுவர்

# ஜகன்மோகினி

ஜகன்மோகினியென்னுஞ்
சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி!
மனத்தைச் சார்ந்து
– வீரராகவ கவி

| Vol. 26. No. 4. | ஸர்வதாரி ௵, பங்குனி ௴ | சுதந்தர சகாப்தம் 21-ம் திங்கள். | April 1949 |
|---|---|---|---|

## புத்தாண்டுப் பாட்டு

காபி] [

சுதந்தர ஹிந்துஸ் தானம்—அதில்
சூழுக மங்கள கானம்
இதந்தரு புதுயுக வனமே—அதில்
இருப்பவர் யாவரும் ஓர் இனமே. (

சாதி மதநிற பேதம்—இல்லை
சத்தியமே எங்கள் வேதம்
ஆதி பகவனும் ஒன்றே—அவன்
அருளினில் யாவரும் வாழுக நன்றே


உடல்பொருள் ஆவியைத் தருவோம்—எங்கள்
உத்தம தேசம் இன்புறவே
கடல்கதிர் மழைநதி எனவே—நல்ல
கடமையைச் செய்குவோம் தினமே. (௩)

அச்சமின்றித் தலை நிமிர்வோம்—நாம்
ஆத்ம சக்தியினில் உயர்வோம்
உச்சக் குரலெடுத்து ஜேஹிந்த்—தென
ஓம் ஜயபேரிகை யடிப்போம்... (௪)

சுத்தானந்த பாரதி.

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
183148

| ஜகன்மோகினி | இந்தியா, ஸிலோன். | பர்மா | வெளிந |
|---|---|---|---|
| தனிப்பிரதி | அணா 4. | 0—4—6. | 0—5— |
| வருடச் சந்தா | ரூ. 3. | 3—8—0. | 3-12—0 |




## கனம் மந்திரி எம். பக்தவத்ஸலம் தலைமையில் மோகினி சிறுகதைப் பரிசளிப்பு விழா

மார்ச்சு மாதம் 30-ந் தேதியன்று ஜகன்மோகினி வெள்ளிவிழா சிறுகதைப் போட்டிப் பரிசளிப்பு விழா கனம் மந்திரி M. பக்தவத்ஸலம் அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

முதலில் தலைவரை வரவேற்றபின் மகாத்மாஜி ஸேவா சங்கத்தினர் பிரார்த்தனை கீதம் பாட, சிறுகதைப்போட்டிக் கமிட்டியின் காரியதரிசியான ஸ்ரீமான் வை. மு. ஸ்ரீநிவாஸன் சிறுகதைப்போட்டி விவரங்களை விரித்துரைத்து, பஞ்சாயத்தினரின் அபிப்ராயங்களைப் படித்துக் காட்டினர். சிறுகதைப்போட்டிப் பஞ்சாயத்தினரில் ஒருவரான ஸ்ரீமான் பி. ஸ்ரீ. சிறுகதை இலக்கியத்திற்குரிய லட்சிபங்கள் முதலியவற்றை இனிது விளக்கினர். வெளிநாடுகளில் எப்படி இருக்கின்றன, முன்பு எப்படி இருந்தன, என்றும், சிறுகதையோ, பெருங்கதையோ எதுவாயினும் சிறந்த கருத்துடனும் சீரியமுறையிலும் இருக்கவேண்டும் என்றும் கூறினர். "வறுத்த மணல், வெள்ளி கட்டிய முள்ளு, எடுத்து நிறுத்திய கோபுரம்" என்று ஒருவன் ஒரு ஊரில் தான் கண்டதாகச் சொன்னனம். அதுபோல் வறுத்த மணலும், வெள்ளிகட்டிய முள்ளும்தான் இன்று அதிகமாய்க் கதையுலகிலிருக்கின்றனவென்றும் எடுத்து நிறுத்திய கோபுரத்தின் சிறப்பும், அழகும் சிறுகதைகளில் அவ்வளவாய் இன்னும் ஏற்படவில்லை என்றும், ஆண்களைவிடப் பெண்கள் மிக நன்றாக எழுதுகிறார்கள் என்று தாம் படித்த கதைகளின்மூலம் அறிந்ததாயும், ஜீவன் ததும்ப எழுதப் பழகவேண்டும் என்றும், இம்மாதிரிப் போட்டிகள் இந்த ஆர்வத்தையும், உத்ஸாகத்தையும் தூண்டிவிடும் தூண்டுகோல் என்றும் இம்முயற்சிகளைத் தாம் மிகவும் பாராட்டுவதாயும் வெகு அழகாகப் பேசினர்.

பஞ்சாயத்தினரில் மற்றொருவரான ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி தேக அசுகம் காரணமாக வர இயலாததால் தம் அபிப்பிராயங்களை எழுதியனுப்பினர். அதை ஸ்ரீ. வை. மு. ஸ்ரீ படித்தார். அதில் தற்காலம் சிறுகதை மோகமுள்ள காலம் என்றும் அதற்கேற்ப ஏராளமான சிறுகதைகளும், சிறுகதை ஆசிரியர்களும் விருத்தியாகி இருக்கிறார்களேயன்றி, கதை சிறந்ததாக இன்னும் வளர்ந்து ஓங்கவில்லை என்றும், முக்யமாகப் பெண் எழுத்தாளர்களுக்கு உத்ஸாகமூட்டி அவர்களுடைய சக்தியை முன்னுக்குக் கொண்டுவந்து ஆதரவளிப்பதற்காகவே மோகினி ஆசிரியை, வை. மு. கோ. "நந்தவனம்" சிருஷ்டித்து உதவி வருகிறார் என்றும், பரிசுக்கதைகளின் முக்கிய கருத்துக்களைச் சுருக்கமாக விவரித்து இம்மாதிரியான உத்ஸாகத்துடன் ஏராளமான நல்ல சிறுகதைகளை எழுதி உதவவேண்டும் என்றும் தெளிவாகத் தெரிவித்தார்.

கனம் மந்திரியவர்கள் பரிசுகளை வழங்கிய பின், இம்மாதிரி போட்டிகள் மிக அவச்யமானவை, மோகினி 25 வருஷகாலமாக செய்துவரும்

தும், இப்

...ழுவைத்து உ... ...யும் உத்ஸாகத்தையும் ...சிறந்த உதவியாகும் என்றும், பி. ஸ்ரீ. கூறியது சிறந்த சிறுகதைகள் இன்னும் செழிக்கவில்லை என்றும், தமிழ் ...சிக் கழகத்திலும் இரண்டு வருஷங்களாக இம்மாதிரியே சிறந்த ...கள் இல்லாது இருப்பதை தாம் அறிவதாயும், ஏதோ தினமும் ஒரு பத்திரிகை,—அதிலும் மிக மோசமான மட்டரகப் பத்திரிகை—மோசமான சிறுகதைகளுடன் வந்தாலும் அதைப்படிக்கவும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்றும் அத்தகைய கீழ்த்தரமான கதைகளை எழுதவிடாமல் தடுத்து உயர்ந்த கதைகளை உற்பத்திசெய்யத் தூண்டவேண்டும் என்றும், மோகினி ஆசிரியை ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே பதக்கங்கள் வைத்துச் சம அந்தஸ்து காட்டிப் பரிசு அளிப்பதை தாம் வரவேற்பதாயும் பரிசு பெற்றவர்கள் சுவர்ண கங்கணத்தைப் பரிசுபெறும் அளவிற்கு விரைவில் சிறந்த கதைகளை எழுத முற்படுவார்கள் என்று நம்புவதாயும் அதி உசிதமாய் மிக நன்றாய்ப் பேசினார்.

முதல் பரிசு பெற்ற ஸ்ரீமதி மல்லிகை சுந்தரம் திருச்சியிலிருந்து வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அவர் தாம் மோகினியின் கதைகளைப் படித்தே தமக்கு எழுத ஆசை உண்டாயிற்று என்றும், மோகினியின் ஆசிரியர் அளித்த உத்ஸாகமே தமக்கு இன்று பதக்கம் பரிசுபெற தூண்டுகோலாயிருந்ததென்றும், மோகினிக்கும் மோகினி ஆசிரியருக்கும் தம் அன்பும் வாழ்த்தும் தெரிவித்துப் பேசினார்.

ஆண்களில் இரண்டாவது பரிசுபெற்ற ஸ்ரீமான் ப்ரபாகரன், தாம் எழுதியது இதுவே முதல் கதை என்றும் அம் முதல் கதைக்கு கனம் மந்திரியார் கரத்தினால் மோகினியின் பரிசுப்பதக்கத்தைத் தாம் பெற்றுக் கொள்ளும் பேறு தமக்குக் கிடைத்தது சந்தோஷம் என்றும் மோகினி தம்மை ஒருசிறு எழுத்தாளன் என்று புறக்கணியாது மதிப்புக்கொடுத்துப் பாரபக்ஷமின்றி நடத்தியதைப் பாராட்டியும் நன்றி தெரிவித்துப் பேசினார்.

வை. மு. கோ. வந்தனோபசாரம் கூறியபின் மகாத்மாஜி ஸேவா சங்கத்தினர் மங்களம் பாடக் கூட்டம் இனிது முடிந்தது.

---

இவ்விதழ் மேலட்டையை அலங்கரிப்பவர்கள்— முறையே, ஸ்ரீமதி T. C. K. மல்லிகைசுந்தரம் (திருச்சி), ஸ்ரீமதி K. ராஜேச்வரி பத்மநாபன் (ராயப்பேட்டை), ஸ்ரீமான் S. V. வெங்கடராமன் (மேட்டூர் அணை), ஸ்ரீமான் V. பிரபாகர் (பழைய மாம்பலம்).

---

## முக்கிய அறிவிப்பு

மோகினி வெள்ளிவிழா சிறுகதைப் போட்டிக்கு வந்த கதைகளில் பஞ்சாயத்தார்கள் பிரசுரத்திற்குத் தகுதி என்று குறிப்பிட்ட கதைகள் மோகினியில் வரிசையாக ப்ரசுரிக்கப்படும் என்று முன்பே அறிவித்திருந்தபடி சென்ற இதழில் ஒரு கதையை வெளியிட்டோம். இவ்விதழில் மலடியின் மனம் என்கிற சிறுகதையை அச்சுக் கோர்த்த பிறகு அதே கதை வேறு பத்திரிகையில் வெளியாகியிருந்ததைக் கண்டு வருத்தத்துடன் நிறுத்தினோம். போட்டிக்கு அனுப்பிய கதையையே மற்றொரு பத்திரிகைக்கு அனுப்பி நமக்கு வீண் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டாக்கியதைக் குறித்து வருந்துகிறோம். இம்மாதிரி இன்னும் யார் செய்திருக்கிறார்களோ? யாராவது தம் கதையை வேறு பத்திரிகைக்கு அனுப்பி இருந்தால் அவர்கள் தயவுசெய்து அதை எமக்குத் தெரிவித்துவிடவேண்டுகிறோம். அதை நாங்கள் ப்ரசுரிக்காது நிறுத்த உதவியாயிருக்கும். ஒரே கதை இரண்டு பத்திரிகைகளில் வருவது முறையல்ல; பத்திரிகைத்தொழிலுக்கு ஏற்றதல்ல.

தி

# மகமல் பல

அதுவரையில் வெகு ஸ்வாரஸ்யமாய் படித்துக்கொண்டிரு... நிதி' என்ற நாவலைப் பட்டென்று மூடிவைத்தாள் கருணை. அவ... சிமிழ் விழிகள் கண்ணீரின் கனத்தால் துடிதுடித்தன. "அப்பா! என்... உருக்கமான கதை! வார்த்தைக்கு வார்த்தை எப்படி உணர்ச்சி ததும்புகிறது! அம்மா இதைப் படித்தாளோ இல்லையோ கேட்டுப்பார்ப்போம்" என்று எண்ணி, குதிபோட்டுக்கொண்டே சமையலறைப்பக்கம் போனாள்.

அடுப்பண்டை வேலையாயிருந்த அலமு, காலடி யோசையைக் கேட்டதும் சட்டென்று புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஏனோ அவள் கண்களும் கலங்கிக் கிடந்தன!

ஆனால், கருணை அதைக் கவனிக்கவில்லை. அவள்பாட்டில்..."ஏம்மா நீ தயாநிதி என்ற புத்தகத்தை வாசித்திருக்காயோ? எவ்வளவு நன்றாயிருக்கிறது தெரியுமா? ஒரு குடுகுடு கிழவருக்கு வாழ்க்கைப்பட்டாளாம் ஒரு பதினாறு வயசுப் பெண். அவள் மனநிலையையும், அவள் தியாக புத்தியையும், அவள் கடமை யுணர்ச்சியையும் எவ்வளவு அழகாக சித்திரித்திருக்கு தெரியுமா அந்த நாவலிலே? ஆமாம், இப்படியெல்லாம் கதையிலே தானேம்மா நடக்கும்? வாழ்க்கையிலே நடப்பது என்பது—அதுவும் இந்த காலத்திலே சாத்தியமா அம்மா!" என்று மூச்சுவிடாமல் பேசிக் கொண்டேபோனாள்.

அலமுவின் முகம் வெளுத்தது. இதுவரையில் நீர் கசிந்த கண்கள் இப்போது மழையாகவே பெய்யத் தொடங்கிவிட்டன. அதற்கிடையே நெஞ்சு வெடிக்க வார்த்தைகள் வெளிப்பட்டன.

"ஐயோ அப்பாவிப் பெண்ணே! கதையிலே என்ன? வாழ்க்கையிலேகூட அதைவிட அநியாயமான காரியங்களெல்லாம் நடக்கத்தான் நடக்கின்றன. ஒருத்தர் வாழ்க்கையைப் போய்ப் பார்ப்பானேன்? உன் வாழ்க்கையே அப்படித்தாண்டி ஆகப்போகிறது. என் செல்வமே! நான் என்னத்தைச் சொல்வேண்டியம்மா! முந்தாநாள் வந்து பார்த்தாரே ஒரு கிழவர், அவருக்கு உன்னைக் கொடுக்கிறதுன்னு உங்கப்பா குடுகுடுவென்று நிச்சயம் பண்ணிண்டு வந்திருக்காரடி கருணை! நான் என்ன செய்வேன்? பாழும் தெய்வத்துக்கும் கண்ணில்லாமல் போய்விட்டதே" என்று அங்கலாய்த்தாள் அலமு!

கருணை அப்படியே ஸ்தம்பித்துப்போய் நின்றுவிட்டாள் ஒரு கணம். "என்ன! முந்தாநாள் வந்த கிழவரா? அவர் தன் பிள்ளைக்கோ, பேரனுக்கோ பெண்பார்க்க வந்திருக்கார் என்றல்லவா நினைத்தேன். கடைசியிலே, என் தலையிலேயா வந்து விடிந்தது? இந்த அப்பாவுக்குக் கூடவா இப்படி புத்தி போகவேண்டும்?" என்று எண்ணுந்தோறும் எண்ணிப் புண்ணாகியது அவள் உள்ளம். குதூகலத்தோடு குதித்துக்கொண்டு வந்தவள், பொங்கியெழும் குமுறலைக் சிரமப்பட்டு அடக்கியபடியே, தட்டித்தடுமாறியபடி தன்னறைக்குப் போனாள்.

2

அறையிலிருந்த நிலைக்கண்ணாடியின்மேல் அவள் பார்வை விழுந்ததும் அவள் துக்கம் பின்னும் அதிகமாகியது. களைபொருந்திய சிவந்து குழிந்த கன்னங்களுடன் கூடிய அழகிய முகமும், கடைந்தெடுக்கப்பட்ட

* வெள்ளிவிழா சிறுகதைப்போட்டிக்கு வந்த கதைகளுள் பிரசுரத்திற்குத் தகுதியெனத் தேர்ந்தெடுக்கப் பட்டவைகளுள் 6-வது கதை இது.

…மைப்பு
…கண்களில் … …வற… …ர்த்து…

…ரிக்கூடத்திலேயே பெரிய அழகி என்று பெயர் வாங்கியிருந்தாள் …ன்னஞ்சிறு வயதிலேயே. பள்ளி நாடகம், நடனம் இவைகளி… …ம முதல் ஸ்தானம் அவளுக்குத்தான். எட்டு வகுப்போடு அவள் படிப்பை நிறுத்தியபோது எவ்வளவு வருந்தினர் அவளுடைய வாத்தியார் அம்மாக்களெல்லாம்?

"உனக்கென்ன கருணா! உன் அழகுக்கும், பாட்டுக்கும் சமர்த்திற்கும் நான், நீ என்று எத்தனையோ பணக்கார வாலிபர்கள் உன்னைக் கொத்திக் கொண்டுபோக, போட்டிபோடமாட்டார்களா? அந்த ஆனந்தத்தில் இந்தப் பள்ளிக்கூடத்தின் நினைவு உனக்கு எங்கே இருக்கும்? ஆனால், இந்தப் பள்ளிக்கூடம் மட்டும் உன்னை ஒருநாளும் மறக்கவே மறக்காது'' என்று அவளுடைய தலைமை உபாத்தியாயினியே அவளைப் புகழவில்லையா? இத்தனைக்கும் காரணம் தன் அழகுதானே என்று அவள் எவ்வளவு பெருமிதங்கொண்டிருந்தாள்?

ஆனால்,… ஆனால்,… இன்று நடப்பதென்ன? அவள் இளமை, எழில், பாட்டு, குணம், அறிவு எல்லாம் ஒரு கிழவருக்கு அர்ப்பணமாகப் போகின்றன. காரணம் அவளுடைய ஏழ்மை நிலைதான். அழகை அளித்த கடவுள் அதிருஷ்டத்தை அளிக்க மறந்துவிட்டதுதான்—அதன்பலன்? கசங்காத கன்னிப் புதுமலரான அவள் வெம்பி வதங்கிய ரோஜாவாக வேண்டியதுதான். அவள் எழில், யௌவனம் யாவும் ஏழ்மை என்ற பலிபீடத்திலே அர்ப்பணமாகப்போகின்றன. இதுதான் விதி அவளுக்கு வகுத்துக் கொடுத்த வழி, இதுதான் பிரும்மமுடிச்சு, இதுதான் அவள் பிராப்தம்—ஏன் அவள் பிராரப்தமும்கூடத்தான்!

உன்மத்தம் பிடித்தவள்போல் கண்களை அகல விரித்துக்கொண்டு வெகுநேரம் உட்கார்ந்திருந்தாள் கருணா. அவள் முகத்தில் பிரதிபலித்த கோரமான விரக்தி பாவமும், துடிக்கும் உதடுகளும், நெற்றியில் துளிர்த்த வியர்வைத் துளிகளும், அவளது கொந்தளிக்கும் உள்ளத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டின.

## 3

தன் கழுத்திலிருந்த மஞ்சள் சரட்டை மெதுவாக நெருடினாள் கருணா. மஞ்சள் கருக்கழியாமல் பளபளவென்னும் மாங்கல்யமாக அது அவளுக்குத் தோன்றவில்லை. தன்னைப் பலவந்தமாகக் கிழவரான கிருஷ்ண சர்மாவுடன் பிணைத்துவைத்த ஒரு பெரிய தாம்புக் கயிறாகவே தோன்றியது அவள் கண்களுக்கு.

கடைசி நிமிஷம்வரையிலும் அவளுக்கு ஒரு குருட்டு நம்பிக்கை இருக்கத்தான் இருந்தது, எப்படியாவது இந்த கல்யாணம் நின்றுவிடாதா என்று. ஆனால், அன்று காலை எட்டு எட்டரைக்கு சுபயோக சுபமுகூர்த்தத்தில் பந்துமித்திரர்கள் அறிய, ஜாம்ஜாமென்று கொட்டு மேளம் முழங்க, அவள் அழகிய கழுத்தில் மூன்று முடிச்சுகள் விழுந்ததும், அவள் நம்பிக்கையிலும், இன்பக்கோட்டையிலும்கூட மண் விழுந்தது. அவளது ஆசை மாமும் ஆணிவேரற்று பெருஞ்சப்தத்துடன் தரைமேலே விழுந்தது.

அதுவரையில், சொல்வார் சொல்படி இயந்திரம்போல் இயங்கிக் கொண்டிருந்தவள் ஏதோ சாப்பிட்டேன் என்று பேர்பண்ணிவிட்டு, தனிமையை நாடி விடுவிடுவென்று தன்னறைக்கு வந்துவிட்டாள்.

...ல் கிம்ப...

...த்... ...ல்லாம், ... வளு... ...ய பாட்டி யால...
அங்கே வந்துசேர்ந்தாள் அவள் தனிமையைக் கெடுக்...

"கருணை, இதோ பாரம்மா! உன்பிள்ளை சுகுமாரும், மாட்டுப... ஸௌழகியும் வந்திருக்கா. அவள் குறைப் பிரசவமாகி இத்தனை நா... பத்திரியிலே படுத்துண்டிருந்தாளாம். இன்னிக்குத்தான் வீட்டுக்கு... ளாம். உடனே இங்கே ஓடோடியும் வந்திருக்கா பாவம்! அப்படியும் முகூர்த்தத்துக்கு இருக்கமுடியாமே போச்சு. நீ சித்த பேசிண்டிரு இவா கிட்டே. நான் போய் இலை போடச் சொல்றேன் உன்னே" என்று படபட வென்று சொல்லிவிட்டு நிற்காமல் போய்விட்டாள் பாட்டி!

## 4

கருணையின் பிரகாசமற்ற முகத்திலே ஒரு புன்னகையின் சாயல் தோன்றி மறைந்தது ஒருகணம். மெதுவாகக் கண்களைச் சுழற்றி ஏறிட்டுப் பார்த்தாள் வந்த இருவரையும்.

"ஸௌமுகி"..."ஸௌ...மு...கி"..."எங்கே கேட்டிருக்கிறோம் இந்தப் பெயரை?" என்று அவள் மனம் எண்ணமிடத்தொடங்கியது. இந்த கலவரத்திலும் குழப்பத்திலும் அவள் அவர்களை "உட்காருங்கள்" என்று கூடச் சொல்லவில்லை. பிரமை பிடித்தவள்போல நின்றுகொண்டிருந்தாள்.

அவளுக்கு ஏற்கெனவே தெரிந்த சமாசாரம்தான் இது. "இதோ பார் கருணை! "நான்காம் தாரம்" என்று பேரே தவிர அந்த மனுஷனுக்கு ஐம்பது வயதுகூட ஆகவில்லை. ஒன்றிரண்டு குறைவாகத்தான் இருக்கும். கடைசி இரண்டு பெண்டாட்டிகளுக்கும் குழந்தையே யில்லை. முதல்வள் மட்டும் ஒரே ஒரு பிள்ளையை விட்டுவிட்டுப் போயிருக்காளாம். அவனும் வளர்ந்து, படித்து பாஸ் பண்ணி வேலையிலே இருக்கான்; கல்யாணமும் ஆய்விட்டதாம். அதனாலே உனக்கு ஒரு பிடுங்கலுமில்லை. அத்தனை சொத்தும் சுதந்திரமும் உன் ஏகபோக சொத்துதான் போயேன்" அப்படி இப்படி என்றெல்லாம் அவளுடைய அப்பா அவளிடம் வேண்டியவரையில் குழையடித்துதான் இருந்தார். அதனால் அவர்களைப் பார்த்து அவள் பிரமித்துப்போய்விடவில்லை.

ஆனால்,......என்னதான் மனதைக் கடினமாக வைத்துக்கொண்டாலும், விரக்தி பாவத்தை வலுக் கட்டாயமாக வரவழைத்துக்கொண்டாலும், பாழும் மனது கேட்கிறதா!

"பதினாறு வயதான தனக்கு ஐம்பது வயதுக் கிழவரா கணவன்?" என்று பொருமிக்கொண்டிருக்கும் உள்ளத்திலே "அதோடு மட்டுமில்லை, இருபத்தைந்து வயதில் ஒரு பிள்ளை, இருபது வயதில் மாட்டுப்பெண் இவர்கள் வேறு இருக்கிறார்கள் தனக்கு" என்று அறிந்தால், பேதை உள்ளம் சற்று தவிக்கத்தானே செய்யும்.

அதோடு அப்படித் தன் மாட்டுப்பெண்ணாக உறவு கொண்டாடுபவள், தன்னோடு ஒருபள்ளியிலேயே நாலைந்து வகுப்புகள் மேலே படித்தவள், தன்னை விட நான்கு வயது பெரியவள் என்றும் அறிந்தால் எப்படியிருக்கும் அவளுக்கு?

சாதாரணமாக யாருமே தாங்கள் நல்ல நிலையில் இருக்கும்போது தங்களுக்குத் தெரிந்தவர்கள் தங்களைப் பார்க்கவேண்டும்மென்று விரும்புவார்களே தவிர, தாங்கள் நிலைதப்பி கூசிக் குறுகி வாழ்க்கை நடத்தும் போது தங்களுக்குத் தெரிந்தவர்கள் கண்களிலே பட விரும்புவார்களா?

அப்படிப்பட்ட மன நிலையிலேதான் இருந்தாள் கருணையும். ஸௌமுகி மட்டும் எடுத்த எடுப்பிலேயே, "அடேடே, கருணை தானே நீ? ஸரஸ்வதி வித்யாலயாவிலே நான் பத்தாவது படித்துக்கொண்டிருந்தபோது நீ ஆறாவது படித்துக் கொண்டிருந்தே இல்லே? என்னை ஞாபகம் இருக்கா உனக்கு?",

...ருந்தா...

...ாட்டிக்கொண்... ...ரு...

...ாமதோ சோபை குன்றிய முகத்தைக் கீழே தாழ்த்திய ஒரு சோகப் புன்னகையுடன், "ஞாபகம் இல்லாமலென்ன?" வேண்டாவெறுப்பாக ஒரு வார்த்தையுடன் நிறுத்திக்கொண்டாள்.

...முகியின் பாடும் கஷ்டமாகிவிட்டது. முதலில் தன் மாமனார் கல்யாணம் செய்துகொள்வதே அவளுக்குப் பிடிக்கவேயில்லை. அரை மனதுடன்தான் அவள் கல்யாணத்திற்கே வந்தாள். சுகுமாருக்கும் அப்படித்தான். காயலாவாய்க் கிடந்த மனைவியைக் கவனித்துக்கொள்வதில் முனைந்திருந்த அவனுக்குத் தகப்பனாரின் கல்யாண விஷயத்தை ...ன்றிக் கவனிக்க அவகாசம் இல்லை, ஆவலும் இல்லை.

"என்னமோ, அப்பாவுக்குக் கிறுக்கு பிடித்திருக்கு ஸுமு! நீயும் நானும் சொன்னா அவர் கேக்கப் போறாரா என்ன? ஏதோ முப்பத்தைந்தோ, நாற்பத்தைந்தோ வயதான ஒரு நர்ஸ் கிர்ஸ் அவர்மேலே சொக்குப்பொடி போட்டிருப்பாள், அதனால்தான் இப்படித் துள்ளறார் மனுஷர். ஏதோ, கண்டவளையும், காணாதவளையும் இழுத்துக்கொண்டு வராமல், அந்தமட்டும் கௌரவமாக ஒரு கல்யாணம்னு பண்ணிக்கிறாரே! அதற்கே சந்தோஷப் பட்டுக்கொள்ளவேண்டும் நாம்" என்று பாதி கிண்டலாகவும் பாதி வெறுப்புடனும் சொன்னதை ஸுமுகியும் ஆமோதித்தாள்.

ஆனால், இங்கேயோ அதற்கு நேர்மாறாக, பால் வடியும் வதனமும் அழகின் வசந்தம் மருவ, இளமையுடன் சோபிக்கும் பதினாறு வயதுப் பெண்ணைக் கண்டதும், கணவன், மனைவி இருவரும் திகைப்படைந்து போய்விட்டனர். நல்ல வேளையாக அந்த சமயத்தில் "இலை போட்டாய் விட்டது; சாப்பிடவாருங்கள்" என்று பாட்டி அழைக்கவே இந்த உணர்ச்சிப் போராட்டத்திற்கும் ஒரு முடிவு ஏற்பட்டது!

## 5

"சித்தி! நேற்று ராத்திரி இவருக்கும் எனக்கும் பெரிய சண்டை. ஏன் தெரியுமா? பிறக்கப்போகும் குழந்தை பெண்ணாயிருந்தால் லேகா என்றும், பிள்ளையாயிருந்தால் சந்தர் என்றும் பேர் வைக்கவேணுமென்று நான் சொன்னேன். இவர் கூடாதென்று பிடிவாதம் பிடித்தார். நான் அப்படித்தான் வைப்பேன் என்றேன். ஒரே சண்டையாப் போய் விட்டது போங்களேன்! ஏன் சித்தி! உங்களுக்கு இந்த தொல்லையெல்லாம் இல்லையோன்னோ? நீங்க என்ன பேர்வைத்தாலும், மாமனார் அதற்குக் குறுக்கே சொல்லமாட்டார். இல்லையா?" என்று பேச்சைத் துவக்கினாள் சாய்வு நாற்காலியில் துவண்டு படுத்துக்கொண்டிருந்த ஸுமுகி.

வாழ்க்கையைப் பூமணமும், புது மதுரமும் கொண்டு நிரப்பினார்கள் அவளும் அவள் கணவனும். அவனோடு சேர்ந்து வாழ்க்கைக் கரும்பின் இன்பக் கணுக்களை ஒவ்வொன்றாகச் சுவைத்த ஸுமுகிக்கு அவைகளை யாரிடமாவது சொல்லவேண்டும்போல் தோன்றியதில் வியப்பென்ன இருக்கிறது? துக்கமாகட்டும் ஆனந்தமாகட்டும், மனப் பேழையிலேயே வைத்து பூட்டப்பட்டு மக்கி மண்ணாகப்போகவேண்டிய வஸ்து அல்லவே!

ஆனால், அப்படிச் சொல்ல ஏற்ற பாத்திரமா கருணா? அவள் தான் வாழ்க்கைத் தீயிலே வெம்பி சாம்பரான மலரைப் போலிருந்தாளே. அவளிடம் ஸுமுகி தன் கணவனது கனிவு மொழிகளையும், ஸரஸப் பேச்சுக்களையும்பற்றிப் பேசுவது, ராப்பட்டினி, பகல் கோட்டாவி என்றிருக்கும் அஷ்ட தரித்திரன் ஒருவனிடம் புளியேப்பக்காரன் ஒருவன் தான் சாப்பிட்ட குலாப்ஜானையும் பாஸந்தியையும் ரஸகுல்லாவையும் பற்றி வர்ணிப்பதுபோல இருந்தது!

[முடிவு அடுத்த இதழில்]



# சோத

★

கவியோகி

சுத்தானந்த பாரதி

★

## 6. தாய் வழி

சிறுவயதில் நான் மதுரைக்கு அடிக்கடி செல்வதுண்டு; அங்கே தாளப்பழுதலித் தெருவில் பெரிய மாளிகையிருக்கிறது. அதுதான் எனது தாய்வீடு. தாயின் முன்னோர் விஜயநகரிலிருந்து விசுவநாத நாயக்கருடன் வந்தவர்கள். அவர்கள் பரம்பரையாக நீதிபதிகளாயிருந்து நாயக்கர் மன்னருக்கு உதவினர். அரசி மங்கமாளுக்கும் தளவாய் நரசையாவுக்கும் இந்தக் குடும்பத்திடம் அபிமானம் அதிகம். இந்த மரபில் நான் நன்றாய் அறிந்தவள் பங்காருப் பாட்டி, தொண்ணூறு வயதுக் கிழவி; குடுகுடுவென்று ஓடியாடி இளம் பெண்களுடன் போட்டிபோட்டுக் காரியம் செய்வாள். ஆட்டும் குளிர் காலத்திலும் வைகையில் நீராடிவந்து, சிவபூஜை செய்வாள். காதுகேளாது; செவியில் படும்படி "பாட்டி! மதுரையில் சந்தாசாகெபு வந்து என்ன பண்ணினான்?" என்றால் போதும், மங்கம்மா காலம்முதல் கோவையாகச் சரித்திரம் சொல்லுவாள். தான் கண்டதை மிக்க ரசமாக வர்ணிப்பாள். கும்பினிக்காரன் அடித்த கொட்டத்தை ஆத்திரமாகச் சொல்லுவாள்... அந்த வயதில் அவளே எனக்குத் தேசாபிமானம் தூண்டியவள். இந்தப் பாட்டிக்கு இரண்டு ரத்னங்கள் பிறந்தனர். ஒருவர் மஹாதேவர். மற்றொருவர் மணி(பூர்ணானந்தர்). மகாதேவர் நல்ல படிப்பாளி; பிரபல வக்கீல்; சட்ட நிபுணர். வாலிபத்தில் இவர் மலையாளம் சென்று மந்திரசித்தி பெற்றார். தேள் பாம்பு பேய் பிசாசுகளுக்கு மந்திரம் போட்டால், உடனே பலிக்கும். இவர் சௌந்தர்யலஹரியைப் பாராயணம் செய்து, சக்தியருளும் பெற்றவர்; தர்மவான், சமயோப

... மகனுக்குக் கலியாணம்; கலியாணமான மறு ...ளை வெளியே சென்றவன் திரும்பிவரவில்லை. எல் ...யலாகத் தேடினர். மாப்பிள்ளை ஒருபுதர் அருகே விறைத் ...ந்தான். உடம்பெல்லாம் நீலம் பூத்திருந்தது. பாம்புகடித்து மாப்பிள்ளை இறந்துபோனுன் என்று எல்லாரும் அழுதனர். மண வீடு பிணவீடானது. எனது பாட்டனுர் மகாதேவர் செய்தி கேட்டு வந்தார். "பயப்படாதீர்கள்" என்று எல்லாரையும் சமாதானப்படுத்தினுர். இரண்டு தாம்பாளத்தில் பால் கொணரச்செய்தார். மந்திரம் ஜபித்தார்; ஐந்தே நிமிஷம்; புதரிலிருந்து பாம்பு சரசரவென்று வந்தது...பாம்பிடம் "கடித்தவாயில் கடித்து இதில் உமிழ்" என்ருர். பாம்பு அப்படியே செய்தது...மாப்பிள்ளை உறங்கினவன்போல் விழித்தெழுந்தான். மந்திரவாதி "நாகா! இந்தப் பாலைக் குடித்துப் போ" என்ருர்; பாம்பு அப்படியே குடித்து விட்டு மின்போல் மறைந்தது மஹாதேவையரை ஊரெல்லாம் வாழ்த்தியது. இப்படியே இவர் பல விஷக்கடிகளையும் நோய்களையும் தீர்த்திருக்கிருர். இரவில் கொசுக்களைக்கூட வாயைக் கட்டி விட்டுப் படுப்பார்! காலையில் அவற்றிற்கு விடுதலை தருவார்! இவர் பச்சிலை வைத்திய நிபுணர். பதார்த்தகுண சிந்தாமணி, தேரையர் வாகடம், சரக சம்ஹிதையெல்லாம் இவருக்குப் பாடம். இவர் வக்கில் தொழிலில் வந்ததைக்கொண்டு, குடும்பத்தைக் காத்தார். வைத்தியம் மாந்திரிகங்களால் பொதுஜனங்களுக்கு உதவினுர். இவர் நீண்டகாலம் பிரமசாரியாயிருந்து, பிறகு வேணியம்மாளை மணந்தார்.

இவர் தம்பி மணி பிறவித் துறவி. அவர் நைஷ்டிக பிரமசாரியாக வேதாகமங்களையும் அத்வைத சாஸ்திரங்களையும் கற்று, காசிக்குச் சென்று, சந்யாசம் பெற்று, பூர்ணனந்தரானுர். அவர் பல துறவிகளுடன் இருந்து யோகம் பயின்ருர். இறுதிகாலத்தில் மதுரைக்கு வந்து, மாமா தோட்டத்தில் வசித்தார். அந்தக்காலமே நானும் அவருக்கு இளந்தொண்டனுனேன்.

மஹாதேவையருக்கு இரண்டு ஆண்மக்கள், மூன்று பெண் மக்கள் பிறந்தனர். மூத்தவர் ம. ராமசாமி ஐயர் ஆங்கிலப்புலவர், சட்டநிபுணர்,மதுரை தானப்ப முதலித்தெருவில் பிரபல வக்கீலாய் இருந்தார். நல்ல சொத்தும் சேர்த்தார். இவர் கீதையிலும் உபநிஷத்திலும் சிவபூஜையிலும் மிகவும் பற்றுதல் உடையவர். ஒருமகன், இரண்டு பெண்களை ஈன்றபிறகு, இவர் பிரமசரியம் பூண்டு, மாடியிலேயே படிப்பும் ஜபதபமுமாகக் காலங்கழித்தார். யாருடனும் அனுவசியமாகப் பேசமாட்டார். இவரைக் கண்டால் வீட்டில் எல்லோருக்கும் பயம். இவர் ஓர் அதட்டுப் போட்டால், வீடு கிடுகிடுக்கும். காலப்படி இவர் காரியங்களைச் செய்வார். நான்கு மணிக்கே எழுந்து தியானம் செய்துவிட்டு,ஐந்துமணிக்கு வெளியே சென்று காற்ருட உலாவி வருவார். உடனே குளிப்பார். பாராயணம் செய்வார்; பூஜை நடத்துவார். காலையில் சாப்பிடமாட்டார்.

…களெல்லாம் ஒரு மணிச்சத்தம் …
உட…றுசுறுப்பாக இலை போட்டுப் பரி…
போது இவர் பேசமாட்டார். வீட்டில் ஒரு சத…
மிதமாகவே உண்பார்; இவர் எழுந்து மாடிக்குச…
மணி நேரம் கழித்தே, வீட்டில் பேச்சுச் சத்தம் கேட்கு…
பெரிய தேசபக்தர்; கைத்தொழில் வளர்ச்சியில் ஊக்கமுடைய…
இவர் தாமே நார்ப்பட்டு நெய்யத் தொடங்கினார். வாழைமட்டை… யிருந்து மெல்லிய நார் இழுத்து, எங்களுக்கு உரிய கோச்சடை கிராமத்தில் தறிபோட்டு நெய்தார். காந்தீயம் வந்தபிறகு அவர் கதரையே அணிந்தார். காந்தியிடம் அதுவே அவருக்கு மிகவும் பிடித்தது. என்னிடம் இவருக்கும் மிகவும் அன்பு; இவரால் நான் அரிய பயன் அடைந்தேன்.

இவருக்கு அடுத்தவர் சுப்பிரமணியர். இவர் ஆள் ஆஜானுபாகு; மதுரையிலேயே இவரே அதிக உயரம். நல்ல பெருமன். அபார மூளை. பணம்காசு சேர்ப்பதில் பெரிய கை. இவர் செட்டிவீட்டில் பெட்டியடி வேலையில் தொடங்கி, படிப்படியாக உயர்ந்து, தேவகோட்டை அள. அரு. அண்ணாமலை செட்டியாரின் ஏஜெண்டானார். மாதச்சம்பளம் முந்நூறு. இவர் அறிவு இயற்கையறிவு. இவர் தாமே ஆங்கிலம் கற்றார். பெரிய மோஸ்தரில் இவர் பேசுவார். அனுபவச்சுரங்கமான இவர் சட்டநிபுணருங்கூட. மணி ஐயர், பாஷ்யம் ஐயங்கார் முதலியோரும் இவரது சட்ட அறிவை வியந்திருக்கிறார்கள். எடுத்த காரியத்தில் இவர் வெற்றிபெற்றே தீருவார். இவருக்கு ஒரே பெண் பிறந்து வளர்ந்து மணமாகி குழந்தைகளில்லாமல் இறந்தது. என்னைத் தத்தெடுக்க முயன்றார்; …அந்தக் கதை பிறகு.

மஹாதேவையருக்கு மூன்று பெண்குழந்தைகள் பிறந்தன— காமாக்ஷி, பாலாம்பாள், மீனாட்சி. பின் இருவரும் நல்ல இடங்களில் வாழ்க்கைப்பட்டுப் பெற்றுப்பெருகி, முத்தண்ணாவுடன் சம்பந்தமும் செய்துகொண்டனர். என் அன்னையின் குடும்பம் தனித்தே வளர்ந்தது. தெய்வபக்திதான் அதன் ஆணிவேர்.

## 7. எனது தாய்

என் அன்னை காமாக்ஷி குடும்ப ஞானி. துறவியான பூர்ணானந்தருக்கு இவளே பணிவிடை செய்தாள். மகா பரிசுத்தவதி; தகப்பனார் இவளுக்கு பஞ்சாக்ஷரி மந்திரமும், தேள் முதலிய விஷஜந்துக்களின் கடியைத் தீர்க்கும் மந்திரமும், பச்சிலை வைத்தியமும் அநேக அருட்பாடல்களும் கற்பித்தார். பூர்ணானந்தர் பக்தி சாதனமும் ஜப சாதனமும் பயிற்றி ஆசீர்வதித்தார். அம்மாளுக்கு வீட்டுக் கருத்து அதிகம். காரியத்தில் கப்பல். இந்தச் சிறிய உருவம் இவ்வளவு காரியங்களை எப்படிச்செய்கிறது என்று நாங்கள் வியப்பதுண்டு. வீட்டில் பெரிய சமாராதனைகள் நடக்கும். அம்மாள் ஒண்டியாக ஆராதனை நிவேதனங்களுக்கு வேண்டியதெல்லாம் தயாரித்து, எல்லாரையும் மகிழ்விப்பாள். அவள் ஒரு காரியத்தை மேற்

ம குற்றம் காண முடியாது. அவ்வ

ய பெண்ணுக்கு மகாதேவையர் மாப்பிள்ளை தேடி ...ராமல் அரங்கசாமி ஐயர் தமது பிள்ளை ஜடாதரனுடன் ...சேர்ந்தார். அந்தக்காலம் பிள்ளைவீட்டுக்காரரே பெண் கேட் ... பெண்ணுக்கு அவர்களே கன்யா தட்சிணை தரவேண்டும். வர தட்சிணை அந்தக் காலம் இல்லை. மகாதேவையர் 'எனக்கு எந்தத் தட்சிணையும் தேவையில்லை; மாப்பிள்ளை அழகன், குணம் தங்கம், பெண்ணுக்குப் பிடித்திருக்கிறது, ஜாதகம் பொருந்தியிருக்கிறது' என்று மறுவாரமே முகூர்த்தக்கால் நாட்டி, மேளம் கொட்டினர். கன்னிகை அழகை, தாய் பணத்தை, தந்தை அறிவை, பந்துக்கள் குலத்தை, மற்றவர் விருந்தை விரும்புவார்கள். காமாக்ஷி—ஜடாதர விவாகத்தில் எல்லாம் பொருந்தியிருந்தன. மகாதேவையர் தாம் அருமையாக வைத்திருந்த சட்டை, குல்லாய் முதலியவற்றை மாப் பிள்ளைக்குத் தந்தார். மாப்பிள்ளைக்கு மாமனாரிடம் பரமபக்தி. அவர் தந்த டர்கிக் குல்லாவை இவர் இறுதிமட்டும் வைத்துக் காப்பாற்றி னார். அதை நான் அடிக்கடி போட்டுக் கண்ணாடி பார்ப்பதுண்டு. ஏனென்றால் நான் தாத்தா போலிக்கை. இறுதிகாலத்தில் தாத்தா குடும்பப்பொறுப்பைப் பிள்ளைகளிடமே விட்டுவிட்டு, ஞான மார்க்கத்தில் திரும்பி, ஜபதபமும் ஈச்வர உபாசனையுமாகவே வாழ்ந்து, அயாசமரணம் எய்தினார். தந்தைவழிப் பாட்டனார் அரங்கசாமி ஐயரும் இறுதிகாலத்தை சிவபக்தியிலேயே கழித்தார். சாகுமுன் எந்தையை அழைத்து இவ்வாறு உபதேசித்தார்:

"ஜடாதரம்! நீ சாது, பக்தன், மானி. குலமதிப்பு உன்னால் உயரவேண்டும். நமது குலதனம் தெய்வபக்தியே. அதை வளர். சத்தியத்தைக் காப்பாற்று. எவரிடமும் எதையும் யாசிக்காதே. பாடுபட்டுப்பிழை. உள்ளதைக்கொண்டு மானமாக வாழ். எளி மையே செல்வம். உலகம் இருவிகாரக் காடு. இதில் அடிக்கடி துன்பப் புயல் மோதும்; சாவும் நோவும் தாவிப்பற்றும். கலங் காதே; என்ன வந்தாலும் இறைவனை நம்பு. அவனே பவரோக வைத்தியன். உலகின் உறவெல்லாம் இன்றிருந்து நாளைப்போகும். உலகச் செல்வம் வந்து செல்லும். நமக்கிருந்த பூர்வீக சொத்தெல் லாம் எப்படியோ கரைந்துபோனது பார். கனதன வாழ்வு கனவுபோலச் சென்றது. உனக்கு நான் சிவபக்தியையே குலதன மாக வைத்துச் செல்லுகிறேன். சிவகிருபை உனக்கு எல்லா நன் மையும் நாட்டும். ஓம் சிவம், சிவம்!"

எந்தை தமது தகப்பனார் உபதேசத்தை வேதமாகக் கொண்டு நடந்தார்.

## 8. இல்லற நல்லறம்

"முன் பிறப்பில் விட்ட குறையால் ஞானி தூயர் இல்லத்தில் பிறந்து, நிறைவெய்துகிறான்" என்பது கண்ணன் மொழி. என் வாழ் வில் இது மெய்யானது. நான் அப்படிப்பட்ட குலத்தில் பிறந்தேன். அத்தகைய பெற்றோர் எனக்கு வாய்த்தனர். அதற்காகவே நான்

வணங்குகிறேன். சிறுசிறு குறை...
தக் குறைகள். இருந்தாலும் எனது பெற்றோர் வ...
அனுபவ நீதிநூலாக விளங்கியது.

தாயார் வழி, செல்வச் சீமான்களால் செழித்தது, ...
வீடு எளிமையே உருவானது; வறுமை எங்களை அடிக்கடி சே...
தது...இருந்தாலும் எந்தை யாரிடமும் எதையும் யாசித்ததில்லை. இருப்பதை உகப்போம்; இல்லாததை மறப்போம். எந்தை கடன் கேட்க விரும்பினாலும் எனது தாய் ஒப்பவேமாட்டாள். தாதுவருஷப் பஞ்சத்தில்கூட என்பெற்றோர் "இறைவன் படியளப்பான், நமக் கென்ன கவலை" என்றே நம்பியிருந்தனர். அப்படியே சில சம்ப வங்களும் நடந்தன. தகப்பனார் சிவகங்கை தேவஸ்தானத்திலும் இளையாத்தங்குடி நித்யகல்யாணியம்மாள் கோயில் தேவஸ்தானத்தி லும் ஒரு வேலை தேடிக்கொண்டார். அப்போது அந்தக் கோயில் வழக்கு சிவகங்கை முனிசீபு கோர்ட்டில் நடந்துகொண்டிருந்தது. அதற்கு வேண்டிய கோர்ட்டு விஷயங்களையே தந்தை கவனித்தார். அந்தக் காலம் எங்கள் வீட்டுக்கு நாட்டுக்கோட்டைச் செட்டிமார் வருவர். அவர்கள் தன்மைகளையும் செல்வத் திறமைகளையும் நான் கவனிப்பேன். சம்பளம் சொற்பம், படிச்செலவுண்டு. நான் அவர் வாழ்வின் ஒவ்வோர் அணுவையும் கவனித்து வியந்திருக்கிறேன். சம்பளம் வாங்கியதும் நேராக நித்யகல்யாணியம்மன், நடராஜா, அல்லது பெருமாள் சந்நிதிக்குச் செல்வார். சம்பளத்தைச் சந்நிதி முன் வைத்துச் சூடன் தீபாராதனை செய்து, மந்திரங்கள் பாடுவார். "இறைவனே, வயிற்றுக் கவலை தீர சேவகாவிருத்தி செய்கிறேன். இதுவும் உன் காரியம். நீ கொடுத்த ஜீவனமிசம். இதை நான் உன் குடும்பமாகிய எனது மனைவிமக்களுக்குச் செலவிடுகிறேன். வேறு தீயவழிகளில் ஒரு பைசாகூட நான் செலவிடக்கூடாது. நீ தந்த இந்தத் தொகையைக்கொண்டு என் குடும்பம் மானமாகப்பிழைத்து, உனக்கே ஆளாக வாழச்செய்...என் குலம் உனது அன்புமயமாகி, உனக்கே ஆட்செய்து சுதந்தரமாக வாழட்டும்" என்று வேண்டிக் கொண்டு, அம்மாளிடம் கொண்டுவந்து தருவார்.

எங்கள் வீட்டைத் தாங்கும் மகாசக்தி தாய் காமாக்ஷியே. கட் டுச் செட்டாகச்செலவிட்டு அவள், மாதம் சிறிது மிச்சமும் காட்டு வாள். நான் இருந்தவரையில், என் வீட்டில் காப்பி டீ கிடையாது. காலையில் பழையதுதான் சாப்பிடுவோம். என் அன்னை கையால் சாப்பிடும் பழையதும் பழம் கீரையும் தேவாமிருதமாயிருக்கும். அவள் கையால் விளக்கெண்ணெய் தந்தாலும் நான் தேன் என்று குடிப்பேன். தகப்பனார் கொண்டுவரும் சொற்பத் தொகையை அவருடன் நன்றாகச் சிந்தித்து, செலவுகளைக் குறித்துக்கொண்டு, செட்டுக்கட்டாகச் சாமான்களை வாங்கிச் சீராகக் குடித்தனம் செய்வாள் என் அன்னை. மாதமுடிவில் அவளுடைய கஜானாவான அடுக்குள் பிறையில், இரண்டொரு ரூபா சேர்ந்திருக்கும். சமயத்தில் "இத்தாரும்" என்று தருவாள். அவளிடமே நான் சிக்கனம் கற்றேன். சிக்கனமாயினும் அவளுக்கு ஈகை இரக்கம்

யம். தனது செயலுக்கேற்றப...

...மந்திர வைத்தியத் திறமையால் காமாக்ஷியம்மாள் ...உதவிசெய்தாள். குழந்தை வைத்தியத்தில் அவள் தேர்ந் ... கணை, மந்தம், காய்ச்சல், வீக்கம் இவற்றிற்கெல்லாம் மந் ...ரிப்பாள், பச்சிலை தருவாள். எங்கள் தெருவில் ஒரு குழந்தைக்கு வயிற்றில் கட்டி விழுந்தது. உணவே செல்லவில்லை. என்ன தந்தாலும் வாயிலெடுத்தது. மார்பு எலும்பானது. வயிறுமட்டும் ஊதிப்போனது. எத்தனையோ வைத்தியம் பார்த்தும் பலிக்க வில்லை. எனது தாயிடம் குழந்தையைக்காட்டினார்கள். தாய் உடனே குடல் சுத்தியாகும்படி மந்திரித்து உருவிவிட்டாள்...மறுநாளே குணம் கண்டது. பிறகு ஓர் எண்ணெய் வடித்துத் தந்தாள். குழந்தை நன்றாகத் தேர்ந்தது.

ஒருநாள் ஒருவருக்குத் தேள்கடித்து அலறித் தவித்தார். ஏதேதோ மருந்துகள் கட்டிப் பார்த்தார்கள். பலிக்கவில்லை. இரவு ஒரு மணி; என் அன்னையை வந்து அழைத்தார்கள். பகலெல்லாம் தாத்தா சிராத்தத்திற்காக உழைத்து அலுத்துப் படுத்திருந்தாள் அன்னை. அழைப்பு வந்ததும், உடனே எழுந்து சுத்தம் செய்துகொண்டு, பஞ்சாக்ஷரி ஜபித்துப் புறப்பட்டாள். தேள் கடிக்கு மந்திரித்து விபூதி தடவினாள். உடனே நெறியிறங்கி, கொட்டுவாய்க்கடிகூட இறங்கிவிட்டது. இப்படி எத்தனையோ உதவிகளை அவள் செய்யக் கண்டிருக்கிறேன்.

தெருவில் பிச்சைக்காரன் வருவான்; பணக்கார வீடுகளில் ஒன்றும் கிடைக்காது; என் அன்னை "வாப்பா இங்கே" என்று அழைத்து, வீட்டில் உள்ள பழைய சோற்றைப் போட்டு, கடித்துக் கொள்ள ஒரு மிளகாயும் தந்து "இருந்து சாப்பிடும்"என்று உபசரிப்பாள். தொழிலாளர், வீட்டுக்கு வேலை செய்ய வந்தால், அவர்களுக்கு அவசியம் வயிறுகுளிரச் சோறுபோட்டுக் கூலிதருவாள். வேகும் வெயிலில் விறகுக்காரன் வருவான். தலைச்சுமையை இறக்கச் சொல்லி, அவன் கேட்கும் கூலியை நிதானித்து, நியாயமான கூலிதந்து, அவனுக்கு 'அப்பா! இந்தா குடி' என்று நீராகாரம் அல்லது மோர் தந்து அனுப்புவாள். விருந்தினர் வந்தால், எந்தை சமை என்று சொல்லத் தேவையில்லை. அவர்கள் திண்ணையில் உட்காருவதைக் கண்டதுமே அடுப்புமூட்டி விரைவில் உணவாக்கி, முக மலர்ச்சியுடன் அப்பாவை எட்டிப் பார்ப்பாள் அன்னை. அவர் உடனே "சாப்பிட்டு மறுகாரியம் பார்க்கலாமே" என்று வந்தவரை உள்ளே அழைத்துவருவார்.

குழந்தைகள்மேல் அவளுக்கு உயிர். வீட்டுத் திண்ணையில் அவர்களுக்கு வீடுகட்டி விளையாட வசதிசெய்து தருவாள். மண் செப்புகள் செய்து தருவாள்.

இவ்வாறு அன்பும் அறமும் விளங்கிய வீட்டில் ஒரு குறை இருந்தது—பிள்ளை யில்லாக் குறைதான். மூன்று குழந்தைகள் பிறந்து இறந்தன. அந்தத் துயரம் அன்னையை வாட்டியது; அப்

...ளத்தில் ஞானத்தீயை மூட்டியது. அ...
தாளையுப... யுமானவரையும் படித்து ஆறுதல் அடைந்த...
மகாதேவர் "அம்மா! கவலைப்படாதே, உனக்கு மண்...
பிறப்பர்" என்று அடிக்கடி சொல்லிவந்தார். மற்றொரு...
பிறந்து இறந்தது. அத்துடன் எனது தாயார் ஆசையும் ...
யானது. இந்த உலகத்தில் எது நிலை? பிள்ளைகுட்டிகளா...
பேரின்பம் வருமா? வாழ்வின் நோக்கம் திருவருள் அடைவது. பக்திசெய்வோம்; பகவான் சித்தம் நடக்கட்டும்—என்று கணவருடன் ஓயாது பஞ்சாக்ஷரி ஜபிப்பது, புண்ணிய நூல்களைப் பாராயணம் செய்வது, மந்திரங்களை உருவேற்றுவது, கதை புராணம் கேட்பது, கீதை கைவல்யம் பாடுவது, பஜனை செய்வது—இவ்வாறு இருவரும் காலம் கழித்தனர். தந்தை சிவபூஜையில் சிந்தை வைத்தார். இருவரும் கடுமையான விரதங்களை அனுட்டித்தனர். ஏகாதசி, அமாவாசை, பிரதோஷம், சிவன்ராத்திரி, பெரியவாள் திதி, கோகுலாஷ்டமி முதலிய புண்ணிய நாட்களிலெல்லாம் இருவரும் உபவாசமிருப்பர் அல்லது பல ஆகாரம் செய்வர். பக்தி சாதனத்தால் அவர்கள் முக்தியைத் தேடினர். விரதாதிகளாலும் தூய வாழ்வாலும் கருப்பையிலிருந்து சில கோளாறுகள் நீங்கின. அந்தக் காலம் எங்கள் துறவித் தாத்தா வடக்கிருந்து வந்தார். தாயார் அவருக்குப் பணிவிடைசெய்து, பல மந்திரோபதேசங்களும் பெற்றாள். எனதுதாய்க்கு அந்தத் துறவி "அம்மா! நீ வேங்கடாசலபதியை தியானித்து பக்திசெய்; நல்ல குழந்தை உண்டாகும்" என்றார். அம்மாள் அப்படியே தியானித்தாள்.

ஆண்குழந்தை பிறந்தது; பெற்றோர் அதற்கு வேங்கடராமன் என்று பெயரிட்டு மிகச் செல்லமாக வளர்த்தனர். அதற்குப் பிறகு அரங்கசாமி என்ற மணிப்பிள்ளை; மூன்றாவது ஒரு பெண், அரங்கநாயகி.

இந்தக் குழந்தைகள் சுகமாயிருந்தாலே போதும் என்று பெற்றோர் கடுமையான விரதங்களை மேற்கொண்டனர். ஆனால், நான் ஒருவன் பிறந்து இப்படியெல்லாம் வாழவேண்டுமென்றிருக்கிறதே ....கடைசிமுறை என்னை அன்னை கருத்தரித்தாள்... (தொடரும்)

---

குறிப்பு:—"ஆத்மசோதனை"யில் எனது தாயின் பெருமையை எழுதிக் கொண்டிருந்தபோது நண்பருடன் "என் அன்னை உடலைவிட்டுக் கிளம்புகிறாள்" என்று பேசிக்கொண்டிருந்தேன். உடனே தந்தி வந்தது—"அன்னை இறந்தாள்" 15—2—49. அவள் எண்பது வயது வாழ்ந்தாள். என் அண்ணா அரங்கசாமிக்கு ரூ. எண்பது அனுப்பி சுத்தானந்த சமாஜத்தில் அம்மா எலும்புகளைப்போட்டு ஒரு மாங்கன்று நடச்சொன்னேன். ஏனெனில் எனது தாய் நல்ல தெருவில் ஒட்டுமாமரம்போல் மலர்ந்து கனிந்து பரோபகாரத்துடன் வாழ்ந்தாள். அம்மாவைக் கண்டால் அம்மாவைக் காண்பேன்.

# ஸ்ரீ பகவத் கீதாஸாரம்

## பதினாறாவது அத்தியாயம்,

## தைவ அசுர விபாக யோகம்

17. ஆணை மறுதவர் தேவர் அல்லா வழக்கோர் அசுரர்
கோணை மருத குணச் செல்வ நீ குறிக்கோள் மறையை
பேணிய தத்துவமும் பிணியற்ற கிரிசைகளும்
காணிதனால் விசயா என்று கண்ணன் இயம்பினனே.

[கண்ணன் - ஸ்ரீ கிருஷ்ணன், 'ஆணை மறுதவர் - கட்டளையை மீறி நடக்காதவர்கள், தேவர் - தேவதைகளின் இயல்பு உடையவர்கள்; அல்லா வழக்கோர்- அப்படியில்லாது வழக்கு ஆடுபவர்கள், அசுரர்- அசுர சுபாவம் உள்ளவர்கள்; கோணை மருத - வக்கிர சுபாவத்தில் பகவானின் கட்டளையை மீறுத, குணச்செல்வ - நல்ல குணத்தை செல்வமாக உடையவனே! நீ மறையை குறிக்கொள்-நீ வேதத்தை பிரமாணமாக அங்கிகரி; பேணிய தத்துவமும் - பெரியோர்களால் ஆதரிக்கப்பட்ட உண்மையையும், பிணி அற்ற கிரிசைகளும்-துக்கம் தராத கரும அனுஷ்டானங்களையும், விசயா! - அர்ச்சுனா! இதனால் காண்-இந்த வேதத்தினால் தெரிந்துகொள்', என்று இயம்பினான்-என்று கூறினான்.]

### தேவதைகளின் இயல்பு உள்ளவர்கள்.

ஸ்ரீ கிருஷ்ணன் பின்வருமாறு கூறினார்:—"ஹே அர்ச்சுனா! அச்சமின்மை, சுத்தமான மனது, ஜீவாத்மாவை அறிவதில் ஆசை, தானம் செய்தல், மனதை அடக்குதல், பகவானை வழிபடல், வேதாத்தியயனம், தபஸ் முதலியவைகளைச் செய்தல், நேர்மையான பேச்சு, பிறரைத் துன்புறுத்தாமை, உண்மை பேசுதல், கோபமின்மை, தியாகம், அமைதி, கோள் சொல்லாமை, எல்லா ஜந்துக்களிடமும் தயவு, பேராசையின்மை, இனிய சுபாவம், தகாத காரியத்தில் வெட்கம், போக்ய வஸ்துக்களில் சபலமின்மை, பொறுமை, தைரியம், யோக்யதை, வஞ்சனை செய்யாமை, கர்வமின்மை, முதலிய நற்குணங்களை உடையவர்கள் தேவதைகளின் சுபாவத்தை உடையவர்கள் ஆவார்கள். இவர்கள் பகவானின் கட்டளையை நிறைவேற்றவே பிறந்தவர்களாவார்கள்.

### அசுர இயல்பு உள்ளவர்கள்.

தம்பம், கர்வம், கொழுப்பு, கோபம், கொடுமைத்தனம், அறிவீனம் முதலிய கெட்ட குணங்களை உடையவர்கள் அசுரர்களின் சுபாவத்தை உடையவர்கள். இவர்கள் பகவானின் கட்டளையை மீறியே நடப்பவர்கள்,

### இவ்விரு இயல்புகளின் பலன்.

தேவதைகளின் சுபாவத்தை உடையவர்கள் மோக்ஷத்தைப் படிப்படியாகப் பெறுகிறார்கள். அசுர சுபாவத்தை உடையவர்களோ படிப்படியாகக் கீழே விழுந்து கட்டுப்படுகிறார்கள்.

அர்ச்சுனா! கவலைப்படாதே. நீ தேவதைகளின் இயல்பு உடையவன்.

### அசுர இயல்பினரின் அனுஷ்டானங்கள்.

தேவதைகளின் சுபாவம் உள்ளவர்கள் கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம் முதலிய நல்ல கருமங்களைச்செய்வார்கள்.

(தொடர்ச்சி 33-ம் பக்கம்)

டி·கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

# எது வெற்றி?

"இமயத்தின் உச்சி, வாழ்க்கையில் முன்பு ஏற்பட்ட நினைவே" என்று டென்னிசன் மகாகவி கூறுகின்றார். அப்படியே யின் உச்சியும் புறவெற்றியல்ல, அகவெற்றியே என்பதுதான் உண்மை. இந்த எண்ணம் ஒரு அதிசயமான சம்பவத்திலிருந்து எனக்கு ஏற்பட்டது.

என்னுடைய நண்பன் மல்லி (மல்லிகேச்வரன் என்று அவனுடைய முழுப்பெயர்) இப்பொழுது முடிவடைந்த மகா யுத்தத்தில் விமானப்படையில் மாலுமி (Pilot) ஆகச் சேர்ந்தான். அவன் அறிவு, ஊக்கம், உழைப்பு நன்கு படைத்தவன். வெகு சுருசுருப்பான இயற்கையுள்ளவன். அவன் தன்னுடைய வேலையை இணையற்ற முறையில் நன்கு செய்ததால் அவனுக்கு பெரிய உத்யோகமும் பட்டங்களும் கிடைத்தன. அவன் பாராத போர்முனையில்லை. அவன் விமானம் செல்லாத இடமில்லை என்றே கூறலாம். எவ்விடத்திலும் அவன் வெற்றியுடனேயே விளங்கினான்.

அவன் மணஞ்செய்துகொள்ளவில்லை. சிற்றின்பத்திற்காக பெண்களை விரும்பும் இயற்கை அவனிடம் இல்லை. பணமுள்ளவர்களுக்கு அத்தகைய எண்ணம் வெகுவாக இருப்பதை நாம் காண்கிறோம். அனேகமாக பணம் படைத்த இளைஞர்கள் நேர்மையிலிருந்து நழுவி விடுகிறார்கள். அவன் பெண்களை தாய்மார்களாகவும், தமக்கை, தங்கைகளாகவும் கருதும் இயற்கையுள்ளவன். அவர்களிடம் நம்பிக்கையுடனும் நன்மதிப்புடனும் பழகும் தன்மையுள்ளவன். வேடிக்கைகள் விளையாட்டுகளில் கலந்து கொள்ளும்பொழுதும் தன்னறிவு மயங்க இடங்கொடுக்கமாட்டான்.

அவன் சிறுவனாக இருந்தபொழுது அவனுடைய தெருவிலேயே ராமநாதன் என்ற நண்பன் இருந்தான். இருவரும் இணை பிரியாத தோழர்கள். ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படித்தார்கள். மல்லி உயர்தரப்படிப்புக்குச் சென்னை சென்றபொழுது அவர்கள் பிரிந்தார்கள். வாழ்க்கையிலும் வேற்றுமை ஏற்பட்டது. ராமநாதன் ஏழையாக இருந்ததால் கீழ்தரப் படிப்புடன் நின்றுவிட்டான். அவனுடைய தாய்தந்தையர்கள் இருந்தார்கள். வெகு நேர்மையுள்ளவர்கள்தான். ஆனால், பூமகளுடைய அருளற்றவர்கள். அவர்களுடைய பெண் மரகதமும் நல்ல அறிவும் அன்பும் படைத்தவள். வெகு அழகு வாய்ந்தவள். குருகுரு என்று அறிவு ஒளி வீசுங்கண்களும் புன்சிரிப்பு தவழும் உதடுகளும் உள்ளவள். அவளுடைய ஆடைகளும், ஆபரணங்களும் வெகு சாதாரணமாக இருந்தாலும் அவைகளைப் பொருத்தமாக அணிவதால் மிக வசீகரமான தோற்றமுள்ளவள். அவள் அதே பள்ளியில் கீழ் வகுப்புகளில் படித்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு மல்லியிடத்தில் அன்பும் நன்மதிப்பும் இருந்தன. அவளுடைய மோகன உருவத்தின் வசீகரத்தை அவன் கண்டும் அவன் அவ்விடத்தில் மயக்கங் கொள்ளவில்லை. எப்பொழுதும்போல் மதிப்புடனும் கௌரவமாகவுமே நடந்துவந்தான். அவனுடைய பணமும் பதவியும் ஏறஏற மரகதம் அவனிடத்தில் வைத்திருந்த காதலை உள்ளடக்கிக்கொண்டாள். எத்தனை காதலர்களுடைய வாழ்க்கை இப்படியே சமூகம் பணத்தைப் பூசிப்பதால் அழிந்துவிடுகின்றது! இத்தகைய சிக்கல்களுக்குக் கணக்கும் இல்லை; எல்லையுங் கிடையாது.

இத்தகைய சமூகக் கோளாறுகளுடன் ஒவ்வொருவனுடைய முற்பிறப்புகளில் செய்யப்பட்ட வினைப்பயன்களுடைய கோளாறுகளும்

கைத் துன்பங்களுக்கு எல்லையே கிடை
என்று ஒரு சிறு சொல்லால் சொல்லிக் ... வரித்து,
யில் வைத்து வாயை மூடிக்கொண்டு இருந்துவிடுகிறார்கள்.
தலைவிதி யென்றால் என்ன, கருமம் என்றால் என்ன, கிருஹ
என்றால் என்ன, தற்செயல் என்றால் என்ன, அதிர்ஷ்டம் என்றால் என்ன, இயற்கை என்றால் என்ன, சுவபாவம் என்றால் என்ன, ஈசன் செயல் என்றால் என்ன, அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என்றால் என்ன—எல்லாம் ஒன்றுதான். இவை யாவும் நம்முடைய அறியாமையைத்தான் விளக்குகின்றன. இருதலைக் கொள்ளி எறும்புபோல் மனிதன் துன்பங்களின் நடுவில் தவித்துக்கொண்டு இருக்கிறான். இப்படியே வாழ்க்கை நாட்கள் எல்லாம் ஓடி மறைகின்றன. ஒவ்வொரு நிமிஷமும் நம்முடைய ஆயுள் ஓட்டைச் சட்டியிலிருந்து நீர் பெருகுவதுபோல் போய்க்கொண்டே இருக்கின்றது அல்லவா? என்ன விந்தை? என்ன துயரம்? பஞ்சம் ஒரு பக்கம், பிணி ஒரு பக்கம், மூப்பு ஒருபக்கம், மரணம் ஒரு பக்கம்,—இப்படி நாலுபக்கங்களிலிருந்து பகைவர்கள் தாக்குகின்றார்கள் அல்லவா?

ராமநாதனுடைய குடும்ப வாழ்க்கை இத்தகைய புயல்களால் தாக்குண்டது. அவனுக்கு க்ஷயரோகம் ஏற்பட்டது, அதற்கு நல்ல வைத்யம் செய்யவோ, அவனை ஆரோக்கியமான இடத்திற்கு அழைத்துச் செல்லவோ அவனுடைய தந்தையால் இயலாத காரியம். மரகதம் எவ்வளவோ நயந்து கேட்டுக்கொண்டும் ஒன்றும் நடக்கவில்லை. ஏதோ அந்த உள்ளூர் வைத்யனே மருந்து கொடுத்து வந்தான். மருந்து பிடிக்கவில்லை. இரண்டு வருஷங்களுக் குள்ளாகவே பிணி முற்றி மருந்துக்கெல்லாம் மீறிப்போய்விட்டது. உடல் மெலிந்து இருமல் ஏறி ஏறி உருக்குலைந்து போய் இறந்தான். அவனுடைய தந்தையும் தாயும் அந்தத் துயரத்தைத் தாங்கமுடியாமல் மாரடைப்பால் திடீரென்று இறந்தார்கள். மரகதத்தின் துயரத்திற்கு அளவேயில்லை. இளமையிலேயே கடுந்துயரம் அவளைச் சுற்றிக் கொண்டது. அவளுடைய அத்தைப் பாட்டி அவளுக்குத் துணையாக வந்து சேர்ந்தாள். மரகதத்தின் படிப்புக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டது. வீட்டிலிருந்த ஒரு பசுவும் எருமையும்தான் அவளுடைய உயிரைப்பாதுகாத்து வந்தன. பால் தயிர் விற்று வாழும் தாழ்ந்த நிலைமைக்கு அந்த குடும்பம் இறங்கிவிட்டது.

இப்படிச் சூழ்ந்துகொண்ட துயர—நள்ளிரவில் ஒரு நக்ஷத்திரப் பிரகாசம் மட்டும் அவளுக்கு இருந்தது. தன் தாய் பூஜித்து வணங்கிவந்த அன்னபூரணி விக்கிரகம் அவளைக் கருணையுடன் நோக்கிவந்தது. அப்படியே அவளுடைய உணர்ச்சி; தனக்கு ஏற்பட்ட துயரங்களை எல்லாம் அந்த தேவி விக்கிரகத்திடத்தில் அவள் கூறி ஆறுதல் அடைவாள். "அம்மா! நீதான் என்னைக் கண் திறந்து பார்க்கவேணும். நீ உலகத்திற்கே தாயல்லவா? நானும் உன் சேயல்லவா? என்னை உன் மடியில் வைத்து அணைத்துக்கொள்ளக் கூடாதா" என்றெல்லாம் புலம்புவள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாமல் உணர்ச்சி ததும்பும் முறையாக பஜனை செய்து வந்தாள். நம்முடைய ஹிந்து குடும்பங்களில் பெண்களுடைய மனப்போக்கு வெகு தூய்மையான பக்தியான முறையில் பரம்பரை பரம்பரையாக இருந்துவந்திருக்கிற தல்லவா?

இது இப்படி இருக்க, அவளுடைய வாழ்க்கைச் சக்ரம் துன்பத்தின் உச்சியைத் தொட்டிருந்தாலும் அது அவ்விடத்திலே நிற்காமல் மீண்டும் சுழல ஆரம்பித்தது. இன்பதுன்பம் சகடக்கால்போல் வரும் என்பது உண்மையல்லவா? இயற்கையோ, தற்செயலோ, தேவியின் அருளோ,

...விட்டு இடம் பேர்தலோ என்றெல்லா...
பசிக்... குடி... அடையலாம். அவளுக்கு என்னவோ, ...
...மானதாக உண்மையான உணர்ச்சி; திடமான நம்பிக்கை. ...
...ளுடைய மனச்சோர்வைப் போக்கடித்தது. 'அவள் சோர்விலிரு...
பட்டு பலவீனமற்றவளாகி மனக்கொதிப்படங்கி இன்பப் பெரு...
அளவற்ற அமைதியை அடைந்ததால் அவளுடைய முகம் "ராகுவினின்று விடுபட்ட சந்திரன் ஒளியால் விளங்கும் இரவுபோல் விளங்கிற்று" என்று சீதாதேவியைப்பற்றி வான்மீகி முனிவர் கூறுவது எவ்வளவு அழகும் பொருத்தமும் வாய்ந்தது என்று அவள் உணர்ந்தாள்.

"சீதைக்கு இடது கண், இடது தோள், இடது தொடை துடித்தன. அவளுடைய இடையிலிருந்து அவள் அணிந்திருந்த ஆடை கொஞ்சம் நழுவிற்று" என்று சுபசகுனங்களைக் கூறின கவிவசனம் அவளுடைய அகக்கண்முன் விளங்கிற்று. எதிர்பாராத மகிழ்ச்சியால் அவளுடைய மனம் நிறைந்தது.

அச்சமயம் அவளுடைய ஆருயிர்த் தோழி தங்கம் உள்ளே நுழைந்தாள். அவளுக்கு மணமாகி கணவன் வீட்டிற்குச் சென்று பிரசவத்திற்காகத் தன்னூருக்கு வந்திருந்தாள். அவளுடைய அன்பாலும் ஆதரவாலும் கனிந்த மொழியாலும்தான் மரகதம் உயிர்தரித்துவந்தாள். தங்கம் உள்ளே வந்து மரகதத்தைப் பார்த்த உடன் "என்ன மரகதம்! நல்ல செய்தி ஏதாகிலும் கிடைத்ததா" என்றாள். 'ஏன் அப்படிக் கேட்கிறாய்? எல்லாம் முன் போல்தான். என் வாழ்க்கையில் வேற்றுமை ஏது' என்று மரகதம் கூறினாள்.

அந்த சொற்களைக் கேட்டதும் தங்கத்தின் கண்களில் நீர் மல்கிற்று. ஆனாலும் உணர்ச்சியை அடக்கிக்கொண்டு "நீ ஆராதிக்கும் பரதேவதை உனக்கு வழிகாட்டுவள்" என்று கூறி ஆறுதலளித்தாள்.

அதே காலத்தில்தான் மல்லி—அப்பொழுது அவன் மேஜர்மல்லி—தன்னுடைய விமானத்தில் தன் ஊருக்குப் பறந்து வந்துகொண்டிருந்தான். அவன் அனேக போர்முனைகளில் வெற்றியடைந்து மகா வீரனாக விளங்கியதால் அவனுக்கு விக்டோரியா கிராஸ் என்ற சிறந்த வீரப்பரிசு அளிக்கப்பட்டது. அவன் இணையற்ற பணம், பட்டம், பதவி, புகழ்களுடன் விளங்கினான். தளகர்த்தனாக இருந்து போரில் ஒப்பற்ற தொண்டுசெய்து எதிரிகளைச் சிதற அடித்ததால் அவன் உத்தியோகத்தின் உச்சியை திண்ணமாக விரைவில் அடையக்கூடும் என்று யாவரும் எதிர்பார்த்தார்கள்; விரும்பினார்கள்; கூறினார்கள். அப்படியே அந்தப் பதவியையும் அடைந்தான். போரும் வெற்றிகரமாக முடிந்தது. அவன் விடுமுறை பெற்று தன் ஊருக்குப் போக எண்ணினான். அப்படியே அனுமதி பெற்று தன்னுடைய சொந்த விமானத்திலேயே தன் ஊரைநோக்கிப் புறப்பட்டான்.

அவனுடைய விமானம் வேகமாகச் சென்றுகொண்டிருந்தபொழுது எதிர்பாராதபடி அதில் யந்திரக் கோளாறு திடீரென்று ஏற்பட்டது. அவன் மட்டுந்தான் அதில் இருந்தான். விமான யந்திரத்தின் ரகஸ்யம் அவனுக்கு நன்குதெரியும்; ஆனால் விதிவசமாக கோளாறு மிதமிஞ்சி விமானம் நெருப்புக்கு இரையாயிற்று. அவன் விமானக் குடையை (பாரசூட்)த் தரித்து கீழே குதித்தான். ஆனால் அந்தக் குடை நன்கு வேலை செய்யாததால் ஒரு சிறிய மலையின்மீது விழுந்தான். விழுந்த அதிர்ச்சியால் அவனுடைய இரு கால்களும் முறிந்தன. அவன் மூர்ச்சை அடைந்தான்.

அவன் விழுந்த மலை அவனுடைய சொந்த ஊர் அருகில் இருந்த மலை. அந்த கிராமத்திலுள்ளவர்கள் விமானம் எரிந்ததையும், ஒரு ஆள் கீழே

...ர்த்து நடுநடுங்கிப் போனார்கள். அவ... ...கிடத்தி கிராமத்துக்குக் கொண்டுவந்தார்கள். அவனைக் ...ரகதத்தின் மனம் துடித்துத் துயரத்தில் ஆழ்ந்தது. அவளும் ...ரும் ஆரம்ப வைத்யஞ் செய்தார்கள். பிறகு டாக்டர் வந்து ...து எலும்பு முறிந்திருப்பதாகவும் ஆறுமாதங்களுக்குள் நன்மை ...ற்படலாம் என்றும் கூறினர். மயக்கந் தெளிந்தபின் வேறு இடத்திற்குப் போகவேண்டுமென்று நினைத்த அவனை ஊரிலுள்ளவர்கள் எல்லோரும் அவ்விடத்திலேயே இருந்து வைத்யஞ் செய்துகொள்ளவேணும் என்று வேண்டினார்கள். மரகதமும் அப்படியே விரும்புவதை அறிந்த அவன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கினான்.

கடவுள் அருளாலும் எல்லோருடைய ஆசியாலும் மரகதத்தின் அன்பாலும் பாதுகாப்பாலும் அவனுடைய கால்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடிவந்தன. மல்லி தனக்கு எட்டாத நக்ஷத்திரம் என்று மரகதம் நினைத்திருந்தாலும் அடங்கிக் கிடந்த காதல் மறுபடியும் பொங்கியெழுந்தது. அவனுக்கும் அவளிடத்தில் அளவுகடந்த காதல் ஏற்பட்டது. ஆனால், கால்கள் கூடி வந்தாலும் அவன் நொண்டியாய்விட்டான். அவன் மறுபடியும் விமானப்படையில் சேர்ந்து பெரிய உத்தியோகம் அடைவது கனவாகிவிட்டது.

ஒருநாள் தன் சூழ்நிலையை நன்கு கவனித்துத் தான் எப்படியாவது மரகதத்தை மணந்து, ஊரில் உள்ள தன் நிலங்களைப் பயிரிட்டு வாழ்வது என்று தீர்மானித்தான். மரகதத்தைக்கண்டபொழுது தன்னுடைய நிலைமையையும் விருப்பத்தையும் அறிவித்தான்.

"தேவிதான் என்னை இவ்விடம் கொண்டு விட்டிருக்கிறாள். நான் மேன்மையை நாடி, பக்கத்திலிருந்த அமுதத்தை மறந்து கானல் நீரைத் தேடிச் சென்றேன். ஒருவரும் எதிர்பாராதபடி உன்னிடமே நான் வந்துசேர்ந்தேன். ஆனால், நொண்டியாகிவிட்டேனே, உன்னை எப்படி என்னைக் கணவனாக ஏற்றுக்கொள்ளச் சொல்வது என்று நா கூசுகின்றது."

என்று தழுதழுத்தக் குரலுடன் தன்னுடைய விருப்பத்தை அறிவித்தான். அவளுடைய அழகிய முகம் நாணத்தால் சிவந்தது. அன்புப் பெருக்கால் உள்ளங் குளிர்ந்தது.

"என் இதயத்தில் வழிபட்ட நாயகனை நான் எதிர்பாராதபடி தேவி இவ்விடத்தில் அழைத்துவந்தபிறகு நான் சொல்வதற்கு என்ன இருக்கின்றது."

என்று விடையளித்தான்.

ஊரிலுள்ளவர்கள் இந்த இன்ப சமாசாரத்தைக் கேட்டு வியப்பையும் ஆனந்தத்தையும் அடைந்தார்கள். மல்லிக்கும் மரகதத்திற்கும் அவர்கள் மனமகிழ்ச்சியுடன் மணம் செய்துவைத்தார்கள். அவன் அன்புள்ள மனைவியுடன் கிராமத்தில் லக்ஷ்யபுருஷனாக இருந்து தன்னுடைய வாழ்க்கையையும் நன்கு நடத்தி, கிராம முன்னேற்றத்திற்காகவும் உழைத்து எல்லோருடைய நன்மதிப்பை அடைந்தான். எந்த வாழ்க்கை லட்சியத்துடன் அவன் ஊரைவிட்டுச் சென்றானோ அது மறைந்தது. எது அவன் எதிர்பார்க்கவில்லையோ அது அவனைத்தேடி வந்தது. ஆடம்பர வாழ்க்கை மறைந்தது. தூய்மையான உண்மையான வாழ்க்கை உதித்தது. எது வெற்றி?

# என் சுய சரிதை

## சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

தொண்டையார்பேட்டை ரோயினி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் மக்நீல் அவர்களை ஏற்பாடு செய்திருந்தோம். அக்டோபர் மாதம் 10 ஆந் தேதி மிகுந்த பிரயாஸையுடன் ஆயுதப்பிரயோகத்துடன் பாலத்துக்கு ஒரு பிள்ளைக்குழந்தை பிறந்தது. குடும்பத்துக்கு முதல் பேரன். எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷம். அவன் தாத்தா பெயர் ராமஸ்வாமி. அதை சற்று மாற்றி ஜயராமன் என்று குழந்தைக்குப் பெயர் ஏற்பட்டது. குழந்தைக்கு ஏழா நாள் காப்பு. வந்தவர்களுக்கெல்லாம் வெற்றிலை பாக்கு காப்பரிசியெல்லாம் சாவித்திரி சற்று உடம்பு சிரமத்துடனேயே கொடுத்தனுப்பியவுடனேயே டாக்டர் மக்நீல் வந்து அன்று இரவே அக்டோபர் 16 ஆந் தேதி சாவித்திரிக்கும் ஆயுதப்பிரயோகம் செய்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. சற்று அதிகமாகவே அழுதுகொண்டிருந்த பாலத்தின் குழந்தைக்கு எதிரிடையாக சாவித்திரி குழந்தை அதிகமாக அழாமலிருக்கவே, என் தகப்பனர் அந்தக் குழந்தையைவிட இந்தக் குழந்தை அழாமல் சாந்தமாக இருக்கிறதே யென்று சொன்னர். ஆகவே, அந்தக் குழந்தையை சாந்த சுந்தரி என்றே அழைக்கலானேம்.

## பிரெஸிடென்ஸி காலேஜ்-பி. ஏ. 1909-1911.

ஏற்கெனவே சொன்னபடி 1909 ஆம் வருஷம் ஜனவரி மாதம் இயற்கைப்பாடம் எடுத்துக்கொண்டு மறுபடி பி. ஏ. ஜூனியர் வகுப்பில் சேர்ந்தேன். முதல் வருஷத்தைப் போல அத்தனை பயமின்றி சற்று தைரியமாக, தெரியாத விஷயங்களை உபாத்திமார்களைக் கேட்டுக் கொண்டும், சற்று உத்சாகத்தையும் சந்தோஷத்தையும் வருவித்துக்கொண்டும், என்னுடன் கூட இருந்த மாணவிகளின் அன்பு நிறைந்த தூண்டுதலுடன் பாடங்களில் ஆர்வத்துடன் படிக்கலானேன். (Botany) என்பதன் கருத்து என்ன என்பதை டிக்ஷனரியிலிருந்து தெரிந்துகொண்டேன். தாவரநூல் (Botany), பிராணி நூல் (Zoology) இவ்விரண்டும் தனித்தனியாக பிரத்தியேகப் பாடமாக எடுத்துக்கொண்டவர்களுக்கு ஜீவ நூல் (Biology) வாரம் ஒரு பாடம் பொதுவாக நடக்கும். பிரதி தினமும் பிற்பகல் 2 முதல் 4 மணி வரைக்கும் தாவர நூல் பாடம்; காலையில் 2 மணி ஆங்கிலம், 1 மணி தமிழ்.

தமிழ் வகுப்பு எனக்கு மிகவும் விருப்பமானது. மகாமகோபாத்தியாயர் டாக்டர் ஸ்வாமிநாதய்யர் அவர்கள் எங்கள் தமிழ் குரு (Teachers are born, not made)—உபாத்திமைத் தொழில் பிறவியிலேயே அமைந்திருக்க வேண்டும். எத்தனை பழக்கத்தினுலும் உபாத்தியாயன் ஆக முடியாது என்று சொல்வது வழக்கம். ஆகவே, எங்கள் தமிழ் குரு ஒருவித உபாத்திமைத் தொழில் படிப்பும் படிக்கவில்லை. அவர் இயற்கையிலேயே உபாத்திமைத் தொழிலுக்கென்றே பிறந்தவர். அந்தணருக்குரிய ஓதல், ஓதுவித்தல் இவ்விரண்டும் அவரிடத்தில் சுபாவத்திலேயே அமைந்திருந்தன. தமிழ் நாடு முழுவதும் விடுமுறைநாட்களில் சென்று அலைந்து திரிந்து

…ரித்து இரவு நேரங்களில் அதிகநேரம் … …குகளின் வெளிச்சத்தில் அவற்றை ஆ… …ந்த …ள பல பாடபேதங்களுள்ள ஏட்டுப்பிரதிகள் உள்ள …பிரதிகள் எழுதி ஒப்பிட்டு தமிழ் மொழிக்கு அவர்கள் செய் …வையை யாவரும் அறிவர். சங்க காலத்து நூல்களையும், பிற் … நூல்களையும் உரையுடனும், விளக்க உரையுடனும் அவர்கள் …த்து ஆராய்ந்து எழுதி புத்தக ரூபமாக அச்சிட்டு மக்களுக்கு அளித்திருப்பது அனைவரும் அறிந்த விஷயமே. அன்னாரை நான் குருவாக அடைந்து அவர்களிடம் தமிழ்ப் பாடம் கேட்கும் பாக்கியத்தை யடைந்தது எனக்கு எத்தனை பெருமை! அதைச் சொல்லி முடியாது. அவர் வகுப்பில் 1 மணி நேரம் 1 நிமிஷம் போல ஓடிவிடும். இன்னும் சற்று நேரம் அந்தப்பாடம் நடக்காதா என்று இருக்கும். இந்தத் தமிழ் பாடத்துக்கு மட்டும் கால அட்டவணையும் மணிக் கணக்கான கட்டுப்பாடும், 1 மணி நேரம் ஆனவுடனேயே பியூன் மணி யடிப்பதும் இல்லாமலிருக்கக் கூடாதா என்று தோன்றும். அவர்களும் விஷயங்களை விரிவாகவும் பல உதாரணங்களுடனும் மற்ற நூல்களுடன் ஒப்பிட்டும் கற்பிப்பதில் ஒரு மணி நேரத்தில் 2, 3 பாடல்கள் கூட முடியாது. அவர்களுக்கு சங்கீதத்தில் மிகுந்த ஆர்வம்: புதிய பாடல் ஆரம்பிக்குமுன் பழைய பாடல்களை வகுப்பில் நல்ல சாரீரமுள்ள மாணவிகள் ஒருவர் இருவரை இசையுடன் படிக்கச் செய்து இன்புறுவர்—தவறு செய்யும் மாணவர்களை கோபித்துக் கொள்ளமாட்டார்—ஆனால், அவர்கள் குற்றத்தை உணரும்படி நயமாகவும், சில சமயம் ஹாஸ்யமாகவும் எடுத்துச் சொல்லித் திருத்துவார்.

அவரது "நினைவு மஞ்சரி" களிலுள்ள ஆஜானு பாஹு முதலான சில ஹாஸ்ய விஷயங்கள் நான் இருந்தபோது நடந்தவைகள். அவரிடம் கேட்ட பாடங்களை திரும்பத் திரும்ப நாம் படிக்கவேண்டிய அவசியமிராது. நன்றாக மறந்து போகாமல் மனதில் பதியும்படியாக எடுத்து விளக்கிச் சொல்வார். அவர்களிடம் பாடம் கேட்டபிறகு எனக்குத் தமிழ் மொழியில் பற்றும் மேன்மேலும் தமிழ் நூல்களைப் படிக்கவேண்டுமென்னும் ஆர்வமும் உண்டாயிற்று. எனது ஸகவகுப்பு மாணவி ஒருத்தி எனக்கு நேர் விரோதம். இந்திய கிறிஸ்தவப் பெண்ணாகிய அவளுக்குத் தமிழ் வகுப்பே கசப்பு. பரீக்ஷையான மறு நாளே தமிழ் புத்தகங்களையெல்லாம் சேர்த்து அடுப்பில்வைத்து எரித்துவிட்டாள். தமிழில் அத்தனை வெறுப்பு!! இப்படிப்பட்ட பிரக்ருதிகளுமிருக்கின்றன. நிற்க,

புதிய பாடமாகிய இயற்கைப் பாடத்திலும் எனக்கு மிகுந்த விருப்பம் ஏற்பட்டது. கணிதப் பாடத்தை விடும்படி நேர்ந்ததைப் பற்றி எனக்கிருந்த வருத்தமும் ஏமாற்றமும் இருந்தாலும், காலக்கிரமத்தில் தாவர வர்க்க நூலும் எனக்குப் பிடித்தமான பாடமாகவே ஆயிற்று. கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இயற்கையழகும் இயற்கைப் பொருள்களில் மறைந்துள்ள அதில் அற்புதமான ஆச்சரியமான சக்திகளும் ரகசியங்களும், ஸர் ஜே ஸி. போஸ் முதலான விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ள நம்பக்கூடாத இயற்கை உண்மைகளும் என் மனதைக் கவர்ந்தன. சூர்ய சந்திர மண்டலங்கள், ஒரு கணக்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் உள்ளடங்கிய அவற்றின் அசைவுகள், இயற்கையிலுள்ள ஜீவ வர்க்கங்களது பரிணாமமும் அவற்றின் உற்பத்தி ஸ்திதி லயமும் இவை யெல்லாம் மேன்மேலும் இயற்கையைப் பற்றியும், அதன் கர்த்தாவாகிய கடவுளைப்பற்றியும் அறிவதற்கு என்னைத்தூண்டின. பிரதி தினமும்

மணி நேரமும் அணுதர்சனி (Microscope) ஸை
கொண்டு தாவரங்களின் வேர், தண்டு, இலைகள் இவற்றின்
களையும், ஒரு சொட்டு ஜலத்திலுள்ள பலவிதமான நுண்
களைப் பரீட்சிப்பதும் நிரம்பவும் ஸ்வாரஸ்யமாயிருந்தது. சுமார
டங்களுக்குமுன் முதன்முதல் இப்பொழுதுள்ள மிகமிக நுட்பமான
தர்சனிகள் போலின்றி சற்று சாதாரணமான அணுதர்சனி கண்டுபிடிக்
பட்டு அதன் மூலமாக ஒரு ஜீவ அறைக்குள் (cell) இருக்கும் ஜீவ அணு
Protoplasm) அசைவதைப் பார்த்த ஒரு விக்ஞானி அப்படியே ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப் போனதுடன், இது கடவுளின் ரகசியம்; நம் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்துள்ள இந்த ஸூக்ஷ்மமான ரகஸ்யங்களை நாம் ஊடுருவிப் பார்க்க முயற்சிப்பது தெய்வ குற்றமாகுமோ என்றுகூட நினைத்தாராம். ஆகவே, இந்த 2 வருடமும் நான் எடுத்துக்கொண்ட இயற்கைப் பாடத்தை மிகவும் ரஸித்துப் படித்ததுடன் இது சம்பந்தமான பல நூல்களைப் பிற்காலத்தில் படித்து இன்புற்றிருக்கிறேன். மிஸ்டர் Fyson, மிஸ்டர் ராமுண்ணி மேனன், டாக்டர் ஏகாம்பரம் இவர்கள் இயற்கைப்பாடம் கற்பித்தவர்களில் முக்கியமானவர்கள்.

ஆங்கிலபாஷை பாடத்துக்கு எல்லாரும் சேர்ந்தே போவோம். தாய் பாஷைகளுக்கும் ப்ரத்தியேகப் பாடங்களுக்கும் சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்துபோவோம். இவ்விதமாக 2 வருஷம் படித்து முடித்தோம். 1910 ஆம் வருஷம்வரைக்கும் பெரிய பரிக்ஷைகள் எல்லாம்டிஸம்பரில் நடப்பது வழக்கம். சென்னை ராஜதானியிலிருந்தும் மைசூர் திருவனந்தபுரத்திலிருந்தும் பி. ஏ. எம். ஏ, முதலான பெரிய பரிக்ஷைகளுக்கு எல்லாரும் சென்னைக்குத்தான் வந்தாகவேண்டும். அந்தக் காலங்களில் க்ரமமாக நவம்பர் டிஸம்பர் மாதங்களில் மேகசஞ்சாரமும் மழையும் அதிகம், இதனால் வெளியூர்களிலிருந்து பரிக்ஷைக்காக சென்னைக்கு வரும் மாணவர்களுக்கு மிகுந்த அசௌகரியமும் கஷ்டமும் ஏற்படுவது ஸர்வ சாதாரணம்.

ஒரு வருஷம் (1902 என்று ஞாபகம்) அபரிமிதமாக மழைபெய்து மௌண்ட் ரோடு முதலான இடங்களில் 5, 6 அடி ஜலம் தேங்கி பரீக்ஷைக்குப் போகவேண்டிய இடங்களுக்குப் போகமுடியாமல் கஷ்டப்பட்டுச் சென்று பரீக்ஷை நடக்குமிடங்களில் பரீக்ஷைத்தாள்கள் விடை எழுதுவதற்கு வேண்டிய வெளிச்சமின்றி (அந்தக் காலத்தில் காந்தவிளக்குகள் கிடையாது) ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு மெழுகுவத்தி விளக்கை ஏற்றி எதிரில் மேஜைமேல் வைக்கும்படி நேர்ந்தது. மேலும் விடைத்தாள்களைத் திருத்துபவர்கள் கிறிஸ்துமஸ் விடுமுறை குறுகிய காலவரைக்குள் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடும் இடையில் அந்த வேலையை திருப்திகரமாய் நிதானமாய் செய்வதற்கும் அவகாசமில்லாமலிருந்தது. ஆகவே, வருஷப்பரிக்ஷைகளை டிஸம்பர் மாதத்தில் வைப்பது பல விதத்திலும் அனுகூலமில்லாதிருந்ததால், அவற்றை மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் வைப்பதாகத் தீர்மானித்து 1910 வருஷம் டிஸம்பரில் நடக்கவேண்டிய பரிக்ஷைகளை 1911-ஆம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் நடத்தினார்கள்.

ஆகவே, எங்களுக்கு பாடங்களைப் படிப்பதற்கு 3 மாதங்கள் அதிகமாகக் கிடைத்தன. பரீக்ஷைக்குமுன் பாடங்களை பரீக்ஷைக்குத் தயார் செய்து கொள்வதற்காக 20 நாட்கள் லீவு கொடுத்தார்கள். இந்த 20 நாட்களுக்கும் ஒரு பாட அட்டவணை வகுத்துக்கொண்டு, கௌஸல்யாவும் நானும் ப்ரதிதினமும் 10 முதல் 5 மணிவரைக்கும் மிகுந்த ஊக்கத்துடன் படித்தோம். திங்கட்கிழமை பரீக்ஷை. முதல்நாள் ஞாயிற்றுக்கிழமை நாங்கள் அதிகமாகப் படிக்கக்கூடாது என்று சங்கல்பம் செய்துகொண்டு

...ங்கள் சந்திக்கவில்லை. ஆயினும் எனக்குள்ள ... பாடப்புத்தகங்கள் அத்தனையையும் அன்று ஒருமுறை பே... ...ாகப் பார்த்தேன். அந்த அதிர்ச்சியினால் அன்று இரவுகூடிய ... நன்றாகவே தூங்கியிருந்தும் மறுநாள் காலை படுக்கையைவிட்டு ...திருக்கமுடியாமல் ஒரே மயக்கமாயிருந்தது. எழுந்து குளிர்ந்த ...லத்தில் ஸ்நானம்செய்தால் சரியாகிவிடுமென்று நினைத்து ஸ்நானம் செய்தபிறகும் மயக்கம் தெளியவில்லை. உடனே சாவித்திரி கணவர் ஒரு மருந்து கொடுத்தார். எங்கள் சித்தி மிகுந்த கவலையுடன் மோர் அன்னம் கலந்து குடிக்கச்செய்தாள். என் பெற்றோர்கள் அந்தசமயம் கோவையிலிருந்தனர். மணி 9 ஆகிவிட்டது. அப்பவும் மயக்கத்தினால் எழுந்திருக்க முடியவில்லை. என்னுடன் கூடவரும் மேரி ராஜம் வந்துவிட்டாள். பிறகு எப்படியோ சமாளித்துக்கொண்டு மேரி ராஜத்துடன் வண்டியிலேறி பரிக்ஷையிடமாகிய ஸெனட் ஹௌஸ் போய்ச்சேர்ந்தோம்—உலகமெல்லாம் சுற்றுவது போலிருக்கிறது. சொப்பனத்தில் நடப்பதுபோல என் வகுப்பு மாணவிகளைப் பின்தொடர்ந்தேன்.

மாடியில் ஒரு சிறிய அறையில் ஒரு வரிசையில் என் வகுப்பு மாணவிகளின் 5 பெயர்கள் இருந்தன. என் பெயர் மாத்திரம் இல்லை. பிறகு அவர்கள் உதவியுடன் முக்கிய மேற்பார்வையாளர் மேடைக்குப் பக்கத்தில் தனியாக இருந்த என் பெயருள்ள மேஜைக்குப் போய்ச்சேர்ந்து நாற்காலியில் உட்கார்ந்து 10 நிமிஷம் கண்மூடி மௌனியாகி கடவுளை தியானித்தேன். எங்கள் இருப்பிடங்களைத் தேடி உட்காருவதற்குள்ளேயே கேள்வித்தாள்களை எங்கள் மேஜைகள்மேல் வைத்தாகிவிட்டது. பிறகு நிதானமாக அதை எடுத்துக் கேள்விகளை ஒருமுறை படித்தேன். எல்லாம் தெரிந்தவைதான். நன்றாக விடையெழுதக்கூடும். ½ மணி நேரம் ஒன்றும் எழுத முடியவில்லை. பிறகு எப்படியோ சமாளித்துக்கொண்டு, ஒரு மனோதிடத்துடன் 2½ மணி நேரம் விடை யெழுதினேன்.

இடைவேளை 1 மணி நேரம் பேசாமல் பிரமை பிடித்தவள் போல உட்கார்ந்திருந்து, சூடாக காபி சாப்பிட்டேன். 2 மணிக்கு சற்று தெளிவாயிருந்தது. பகல் பேபர் ஞாபகத்துடன் திருப்தியாகவே விடை யெழுதினேன். வீட்டுக்கு வந்து உடனே கொஞ்சம் ஆகாரம் செய்துவிட்டு 7 மணிக்கே படுத்து நன்றாக தூங்கி மறுநாள் காலை எழுந்தபோது மயக்கமெல்லாம் நீங்கி நல்ல தெளிவு உண்டாகிவிட்டது. மற்ற பரீக்ஷைகள் எல்லாம் திருப்தியாகவே செய்தேன். ஆயினும் ஆங்கிலத்தில் தவறி விடுவேனோ, இன்னும் ஒரு வருஷம் மாகாணக் கல்லூரியில் அதே வகுப்பில் சென்றுபடிப்பது அவமானமாயிற்றே என்று மிகுந்த கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்லவேளையாக அம்பிகையின் அனுக்கிரகத்தினால் இயற்கைப் பாடத்தில் இரண்டாவது வகுப்பிலும், பாஷைகளில் 3 வது வகுப்பிலும் தேறிவிட்டேன். நான் தமிழில் முதல்வகுப்பே எதிர்பார்த்தேன். இரண்டாவது வகுப்புக்கூட இல்லாமல் 3வது வகுப்பில் தேறியது எனக்கு மிகுந்த ஏமாற்றம். தமிழை வெறுத்து தமிழ் புத்தகங்களை நிக்கிரையாக்கிய என் கூட்டாளி மாணவி இரண்டாவது வகுப்பில் வந்தாள். அது அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது, எப்படியோ பி. ஏ. படிப்பு முடிந்துவிட்டதில் வீட்டில் என் பெற்றோர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் அளவில்லாத திருப்தி. என் 12 ஆவது வயதில் தைரியமாக அநேகம்பேருடைய விரோதத்துடன் என்னை ஆங்கிலம் படிக்க ஏற்பாடு செய்து 23-ஆவது வயதில் B. A. முடித்து ஜயத்துடன் ஒப்பேற்றியது எங்கள் எல்லாருக்கும் ஒரு நிம்மதியும் திருப்தியும் உண்டாக்கிற்று.




பி. ஸ்ரீ.

# நகை எது? நாகரிகம் எது?

'நகை செய்தார் நாகரிகம் செய்தார்' என்று சொல்வதுண்டு. 'ஆடைக்கு முந்தியது ஆபரணம், பாவைக்கு முந்தியது பாட்டு' என்றும் சொல்வதுண்டு. சரியாக உடை உடுக்கவும் தெரியாத அநாகரிக நிலையிலேயே காட்டுமிராண்டிகளும் காட்டிலே கிடைக்கும் விநோதப் பொருள்களால் தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள். அத்தகைய நகைகளை அவர்கள் அணிந்து கொள்கிறார்கள் என்று சொல்வது சரியன்று; அந்த நகைகளை அவர்கள் சுமக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

சென்னை—ஒரிஸ்ஸா எல்லைப்புறத்தில் இன்றும் சுமார் 4000 காட்டுமிராண்டிகள் வசித்து வருகிறார்கள். இவர்கள் வசிக்கும் இடம் கடல் மட்டத்திற்குச் சுமார் 3000 அடி உயரமான மேட்டுப்பிரதேசம். இந்த வகுப்பினர் 'பாண்டோ' ஜாதியார் என்று சொல்லப்படுகிறார்கள். இந்த ஜாதிப்பெண்கள் சுமந்து திரியும் நகைகளைப்பார்த்தால் பரிதாபமாயிருக்கும். பத்துப் பவுண்டு நிறையுள்ள உலோக வளையங்களையும், பலநிறமுள்ள கண்ணாடி மணிகளையும் சங்கிலிகளையும் [illegible] பொறுமையுடன்—[illegible] எவ்வளவு மகிழ்ச்சியுடன் — அணிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நகைகள் இவர்களுடைய உடல் வளர்ச்சியையே பாதித்துவிடுகின்றனவாம், சீனப் பெண்களின் அடிகளைச் சோடுகள் சிற்றடிகளாக்கிவிடுவதுபோல.

நாகரிகம் வளர வளர நகைச்சுமை குறைந்து வருகிறது. 'நகை சுமையல்ல, நகை நகைதான், அழகிற்குத்தான், ஹிம்சைக்கு அல்ல!' என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. சுமார் 5,000 ஆண்டுகளுக்குமுன்பே—சுமார் 6,000 ஆண்டுகள் என்றுகூடச் சொல்லலாம்—நமது தேசம் நகைக்கும் நாகரிகத்திற்குமுள்ள தொடர்பைக் கண்டிருந்தது. சிந்துநதிப் பள்ளத் தாக்கில் இரண்டு அதி புராதன நகரங்களைப் புதைபொருள் ஆராய்ச்சிக்காரர் கண்டுபிடித்திருக்கிறார்களல்லவா? அங்கே அந்த ஆதிகாலத்தில் குடியிருந்தவர் திராவிடர்களின் முன்னோர் என்பதாக ஊகஞ்செய்கிறார்கள். அந்த நாகரிகம்தான் உலகத்திலேயே மிகப் பழைய நாகரிகம் என்று கருதுவோரும் உண்டு. அந்த நாளிலேயே நிலத்தைப் பண்படுத்தி நகர நிர்மாணம் செய்து அழகான வீடு கட்டி வாழத் தெரிந்துகொண்டிருந்த நம் மக்களில்



183148

...கள், அழகான ஆடைகளைத் ...துக்கொண்டதுடன், அழகான ...கைகளையும் அணிந்து கொண் ...ந்தார்கள்.

திராவிடர்களுக்குப் பின் இந்தியாவுக்கு வந்தவர்களென்று கருதப்பெறும் ஆரியர்களும் நாளடைவில் திராவிடர்களுடன் கலந்து இந்து நாகரிகம் என்ற ஒரு கலப்பு நாகரிகத்தை உருவாக்கத் தொடங்கினர்களென்பதும் ஒரு முக்கியமான சரித்திர ஊகம். இந்த நாகரிகத்திலும் நகைகளுக்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. ராமாயணம் என்ற நமது தேசியப் பேரிதிகாசத்திலே, ராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற வழி ராமன் முதலானவர்களுக்குத் தெரிந்ததே, சீதை அங்கங்கே கழற்றி வீசியிருந்த நகைகளினால்தான் என்பதை அறியாதார் யார்?

இப்படி நகைகள் சீதையைக் கண்டு பிடிக்க உதவியது குறித்துக் கம்பராமாயணத்திலே அனுமன் காவியநாயகியை நோக்கி, 'அம்மா, பெண்களுக்கெல்லாம் மங்கலம் என்ற தாலிதான் மற்ற நகைகளை அணிந்துகொள்ளும் உரிமை தருகிறது; ஆனால், உனக்கோ மற்ற அணிகளல்லவா மங்கலம் என்ற தாலியைக் காப்பாற்றித் தந்திருக்கின்றன?' என்கிறான். இந்த ரீதியில் நகை நாகரிகத்தையும் காப்பாற்றிக் கொடுத்திருக்கவில்லையா?— என்று யாரோ ஆராய்ச்சி-அனுமன் கூறுவதுபோல் ஒரு குரல் என் காதில் விழுகிறது.

ஆனால், சீதாதேவியின் ஆபரண ஜாபிதாவைக் கம்பராமாயணத்திலே பார்க்கும்போது, 'நகைகளெல்லாம் நாகரிகமாகத்தான் அணிந்துகொண்டாளா? அல்லது கழற்றி எறியவேதான் அத்தனை நகைகளையும் அணிந்துகொண்டாளா காட்டுக்குவந்தபின்பும்?' என்ற பிரமிப்பு ஏற்படுகிறது என்னைப்போன்றவர்களுக்கு.

கம்பனே, பா... மணப்பெண்ணாகிய சீ...த...கு நகைகளைப் பூட்டிய தோழிகள், பாவம், 'தேவியின் அழகையல்லவா இந்த நகைகளால் மறைத்துவிடுகிறோம் என்பதை மறந்துவிட்டார்களே!' என்று பரிதாபப்படுகிறான். அதுகொண்டு 'என்ன பைத்தியக்கார உலகம்!' என்று பொதுவாக உலகத்தையும், சிறப்பாகப் பெண்ணுலகத்தையும் சுட்டிக்காட்டவும் துணிகிறான்.

அதிக நகை அழகைக் கெடுக்கும் என்பது எவ்வளவு உண்மையானது! 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்தானே' எனினும் ராமாயண காலத்தில் வழங்கிய நகைகளைக்கொண்டும் (கம்பன் கூறும் நகைகளைக் கொண்டல்ல, வால்மீகி கூறும் நகைகளைக் கொண்டுதான்) இதிகாச காலத்தில் வழங்கிய நாகரிக நிலையை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். பிற்காலத்திலும் நாகரிக நிலையை ஊகிப்பதற்கு நகையும் ஒரு சாதனம்தான்.

நாளடைவில் நகைச்சுமை குறைந்து வந்தபோதிலும் நகைச்சுவை அதிகரித்தது. இங்கே ஹாஸ்ய ரஸத்தைக் குறிப்பிடவில்லை; நகைகளைச் சுவையுடன் அணிந்து அழகுசெய்து மகிழ்ந்த நாகரிக மனப்பான்மையைத்தான் குறிப்பிடுகிறேன்.

பொன்னாலும், முத்து வைரம் நீலரத்தினம் மரகதம் முதலியவற்றாலும் செய்த நகைகளால் தங்களை அழகு செய்து மகிழ்வதில் இந்தியாவின் நாகரிக நங்கையர் வேறு எந்த நாகரிக நாட்டுப் பெண்களுக்கும் சிறிதும் பின்வாங்கவில்லை. வடமொழியிலும் தமிழ் முதலான மொழிகளிலும் கவிகள் பாடியிருக்கும் நூல்களைப் பார்த்தாலே போதும்; இந்திய நங்கையரின் நகைக்காதலை மட்டுமல்ல, நகைப் பைத்தியத்தையும் கண்டுகொள்ளலாம்.

...ால் - சிலம்பே ...யத்திரம் என்ற தமிழ்நூலுக்குப் பெயர் தந்திருக்கிறதல்லவா? சூளாமணி (வடமொழியில் சூடாமணி) என்ற சிரோரத்தினம் சூளாமணி என்ற காவியத்திற்குப் பெயர் தந்ததுடன், கம்பராமாயணத்தின் சிறந்த படலங்களில் ஒன்றாகிய சூடாமணிப்படலத்திற்கும் பெயர் தந்திருக்கிறதல்லவா?

சித்திரப் பொற்பட்டாடைகள் அணிந்து பொன்னகைகளும் இரத்தின நகைகளும் தகதகவென, ராமன் பவனி வரும் வீதியிலே, அங்கும் இங்கும் திரியும் மிதிலைப் பெண்களை,

மயிலினம் வருவ போன்றும்

அதாவது மயில்கள் தோகை விரித்தாடியவண்ணம் திரிவதுபோலவும்—என்று வருணிக்கிறான் கம்பன். வைரமணிகளால் தங்களை அலங்கரித்துக்கொண்டு மேல்மாடத்தின் உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பெண்களையும், மேல்மாடத்தின் தாழ்ந்ததொரு பகுதியில் கண்ணைப் பறிக்கும் இரத்தின நகைகள் ஜொலிக்க ஒருவரோடு ஒருவர் நெருங்கி நிற்கும் பெண்களின் சிறுகூட்டம் ஒன்றையும்,

மீனினம் மிளிர வானின்
மின்னினம் மிடைவ போன்றும்

[மீனினம் - நட்சத்திரக்கூட்டங்கள், மின்னினம்-மின்னற் கொடிகளின் கூட்டம், மிடைவ - நெருங்குவன.] என்று வருணிக்கிறான்.

காமவல்லியாக வேடம் பூண்டு வந்த சூர்ப்பணகையோ நகைகளால் ஒருபுதிய பிறவியே எடுத்து விட்டாளென்று சொல்லத் தோன்றுகிறது. இவளுடைய மேகலாபரணமும் நூபுரங்களும் 'அழகு ராணி வருகிறாள்' என்று கட்டியங்கூறி அறிவிப்பதுபோல் அந்த வருகையை ராமனுக்கு அறிவித்தன, அவனும் அத்திசையை நோக்கி விழித்தான்—என்று பாடுகிறான் கவிஞன்.

சுருங்கச்சொன்னால் வேதகா... தொட்டு—ஏன், மோஹெஞ்சதா... வின் அந்த ஆதியான திராவ... யுகம் தொடங்கி—இந்தியாவி... வழங்கி வந்திருக்கும், இந்தி... மங்கையர் பாதாதி கேசமாக அணிந்துவந்திருக்கும் நகைகளை வருணிப்பதற்கே ஒரு 'கலைக்களஞ்சியம்' தொகுக்கவேண்டியதுதான்.

ஆனால், நகைகளுக்கெல்லாம் நகையாக விளங்கியவர் நங்கைதான் என்பதை நம்மவர் மறந்துவிடவில்லை. 'ஆபரணங்களுக்கெல்லாம் ஆபரணமான திருமேனி' என்று பகவானுடைய 'அழியா அழகு' என்ற அந்தத் திருமேனியைக் கூறுவதுண்டு. பெண்மையின் இயற்கையழகும் ஆபரணங்களுக்கெல்லாம் ஆபரணமாகவே மதிக்கப்பெற்றது. இந்த இயற்கையழகும் உள்ளத்திலுள்ள சௌந்தரியத்தின் பிரதிபிம்பமாகவே இருக்கவேண்டு மென்பது கம்பனின் கொள்கை.

சூர்ப்பணகையின் போலி யழகு குறித்துக் கம்பன் என்ன சொல்லுகிறான் பாருங்கள்:

வஞ்சியென நஞ்சமென
வஞ்சமகள் வந்தாள்.

[வஞ்சி-காட்டுக் கொடி, நஞ்சம்-இங்கே நஞ்சுடைய பாம்பு.] சீதையின் குண சௌந்தரியத்தைப் பிரதிபலிக்கும் திருமுகமே மெய்யழகு கவிஞனுக்கு. ராமனுடைய 'அழியா அழகும் மெய்யழகுதான்.

காதலித்த உருவாகி
அறம்வளர்க்கும் கண்ணாளன்

அல்லவா ராமன் என்றதிவ்யசௌந்தரியம்? அறம் வளர்க்கும் அழகே அழகு: இதுவே ஆபரணங்களுக்கெல்லாம் ஆபரணம்.

ரூப சௌந்தரியம் இல்லாதவர்களும் குண சௌந்தரியத்தால் கண்ணிலும் முகத்திலும் வசீகர ஒளி பெறலாம். கவலைக்காவது, அச்சத்திற்காவது, மனச் சோர்விற்காவது இடங் கொடுக்கலாகாது.

...ணையே, தன்னலத்தையே எப் ...தும் எண்ணிக்கொண்டிருக்கும் ...ண்ணோ ஆணோ உண்மையில் ...ரு பெற முடியாது.

ஒவ்வொருவரும் தமது ஆத்ம சரித்திரத்தை முகத்திலே எழுதிக் கொள்கிறார். புஸ்தக ரூபமாக ஆத்ம சரித்திரம் எழுதக் கூடியவர், எழுதத்தகுதியுள்ளவர் காந்தியடிகள், ஜவஹர்லால் போன்ற சிலரே யாவர். ஆனால், முகங்களில் ஆத்ம சரித்திரம் ஒவ்வொருவரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எழுதித் தீரவேண்டியதுதான். ஆத்ம சரித்திரம் அழகாய் இருந்தால் முகத்திலும் உண்மையான அழகைக் காணலாம். இந்த ஆத்ம அழகை வயதும் கிழமாக்க முடியாது. இத்தகைய அழகைப் பரிபூர்ண நிலையில் ராமன், கண்ணன் முதலான தெய்வ வீரர்களிடம் காண்கிறோம்; பு[illegible] முதலான ஞானவீரர்க[illegible]த்தி[illegible] காண்கிறோம். சத்திய அஹிம்ஸை வீரரான காந்தியடிகளிடத்திலும் கண்டோமே, அந்தப் புன்னகைக்கும் சிரிப்பிற்கும்தான் எந்தப் பொன்னகையை, எந்த இரத்தின நகையை ஈடாகச் சொல்லமுடியும்?

கள்ளங் கவடற்ற ஆத்ம அழகும் உள்ளத்தின் சௌந்தரியமும் சமாதானமும் முகத்திலே மகிழ்ச்சியாகவோ, இள நகையாகவோ அரும்பும்போது, சிரிப்பாக மலரும் போது வேறு நகையும் மிகையன்றோ?

இத்தகைய மனப்பண்பிற்கு ஒவ்வொருவருக்கும் சமுதாய வாழ்விலும் குடும்ப வாழ்விலும் வசதி செய்து கொடுப்பது எதுவோ, அதையே நாகரிகத்தின் ஸாரமாகவும் மதிக்கக்கூடுமல்லவா?




## மஞ்சள் குங்குமம்

[ஸ்ரீ. வசுமதி ராமஸ்வாமி]

“அதென்ன கையில் பொட்டலம்? கலா, எனக்கு ஏதாவது அபூர்வ பொருள் கொண்டுவந்தாயா?” என்றாள் சாவித்திரி.

“அபூர்வம்தான் மாமி! கிடைக்கத் தகுந்ததல்ல. வருஷக்கணக்கில் வைத்துக்கொள்ளலாம். தேவையான பொழுது சாப்பிடலாம். உடம்புக்கு இன்றியமையாதது. சிறந்த மூலிகை; நறுமணம். பார்க்க அழகு.

“கலாவுக்கு தற்பெருமைதான். என்ன அப்படிப்பட்ட நூதன பொருள் உன்னிடமிருக்கிறது? பிறர் செய்வது அற்பம். உன் செய்கை அபாரம். பிறர் பொருள் தூசிக்குச் சமானம். உன்னிடமிருக்கும் குப்பை கூட கோஹினூர் வைரம் அல்லவா?” என்றாள் பர்வதம்.

“ஆனாலும் நீ இப்படி விதண்டாவாதம் பேசக்கூடாது பர்வதம்! கலாவைக் கண்டாலே எல்லாருக்கும் அவளிடம் ஒரு தனிப்பட்ட மதிப்பு. அதனால் அவள் இரும்பினால்கூட பிரமாதம். தும்மினால் அபூர்வம். எல்லாவற்றிக்கும்மேல் வேப்பம்பூவைக் கொண்டுகொடுத்தால்கூட சாவித்திரி மாமிக்கு திரட்டிப்பாலாக தித்திக்கும்?’ என்றாள் கமலா.

“அடாடா கமலா! நான் நினைத்தபடி நீ புத்திசாலிக் கொக்குதான். சந்தேகமே இல்லை. நீ சற்றுமுன் சொன்ன வேப்பம் பூதான் நான் சாவித்

...கொண்டுவந்திருக்கிறேன், உனக்கு ஜோஸ்யம் தெரியு
... ந அபார மூளையின் வேகமோ? பார்வதம் விதண்டாவாதமாக பேச
லும் தேவலை. நீ பேசுவதில் நிறைய நகாசுவேலைப்பாடு இருக்கிறதே."

"உங்கள் சண்டை எல்லாம் மூட்டைகட்டிவையுங்கள். வேப்பம்
பூ என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். என் இஷ்டத்தை அறிந்து
கொண்டுவந்தாயே"

"பூ! இவ்வளவு மகத்துவமெல்லாம் இந்த வேப்பம் பூவுக்கு வர்ணிப்
பானேன்? ஏதோ கொண்டுவந்தேன் என்று சொல்லுவதுதானே."

"பார்வதம்! 'நாட்டியம் ஆடுவதற்கு நட்டுவனர் இது மட்டுமா? இன்ன
மும் சொல்லட்டுமா?' என்று ஒரு பதம் பாடுவார்கள். அதுபோல்
அதனுடைய மகிமையைப்பற்றிக் கேட்கவேண்டுமா? எங்கள் தோட்டத்
தில் இரண்டு வேப்பமரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. வருஷப் பிறப்பு
வருகிறதே, வேப்பம்பூ பச்சடி சாப்பிடவேணுமே என்றுதான் கொண்டு
வந்தேன்."

"கலா! வருஷப்பிறப்பென்றால் பாயஸம், வடை, போளி முதலிய அறு
சுவை விருந்தில் கசப்பான இதை ஏன் செய்கிற வழக்கமாக வைத்திருக்
கிறார்களோ தெரியவில்லை."

"நம் பெரியோர்கள் எந்த சிறிய விஷயமோ பெரிய விஷயமோ
ஆராய்ந்து வேலைகளைக் குறுக்கி அறிவைப் பெருக்கி வாழ வாழ்க்கைப்
பாதையைப் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆகார விஷயத்திலும் மூன்று
பாகமாகப் பிரித்தார்கள். சரீர பலத்தைவிட ஆத்ம பலத்தைப் பெரிதாகக்
கருதினர்கள். சத்துவ, ரஜோ, தமோ குணங்கள் எனப் பிரித்தார்கள்.
அந்த திட்டப்படி எந்தவிதமான ஆகாரம் எத்தகைய குணத்தை எடுத்துக்
காட்டுமென்று வகுத்தார்கள். திரிகுணத்மகத்தையும் சேர்க்கும் ஆகார
மென சிலவற்றை நிர்ணயித்தார்கள்."

"கலா! உன் குணமே இப்படித்தான். வருஷப்பிறப்புக்கு வகைவ
மான இனிப்புப் பொருள்கள் தயார்செய்வதைவிட்டு வேப்பம் பூ பச்
சடியை ஏன் வைத்தார்கள் என்று கேட்டால், பெரியவர்களைப்பற்றி
பிரசங்கமாரி ஆரம்பித்துவிட்டாயே. அதிலும் வேப்பம் பூ பச்சடியில்
வெல்லத்தைப் போட்டு ஒரு அசட்டுத் தித்திப்புதான் பிடிக்கவில்லை, ஒரே
கசப்பாக இருந்துவிட்டுப் போகட்டுமே."

"அதைத்தான் சொல்லவந்தேன். பூமிதேவிகூட உன்னிடம் பொறு
மையை யாசகம்கேட்டு வாங்கவேணும் போலிருக்கிறது. ஆற அமர
விஷயத்தைக் கேட்டுவிட்டுப் பேசு. வேப்பம் பூ பச்சடியில் உள்ள
இனிப்பு, புளிப்பு, தித்திப்பு மூன்று சுவைகளும் ரஜஸ், தமஸ், ஸத்துவ
மான மூன்று குணங்களுடைய விசேஷத்தை காட்டுகின்றன. மும்மூர்த்தி
களுக்கு ப்ரியமான நைவேதனப் பொருளாகப் பெரியவர்கள் செய்
திருக்கிறார்கள்.

சிறந்த மூலிகைப்பொருள். பெரியவர்கள் ஆசாரம் என்ற கட்டு
திட்டத்தில் சுகாதாரம், சுத்தம் இவைகளை உட்பொருளாக ஏற்படுத்தி
யிருக்கிறார்கள். வீட்டை அலம்புவது, ஸ்நானம் செய்வது எல்லாமே
ஒன்றை ஒன்று பிணைத்து அதிலும், எளியமுறையில் இயற்கைப் பொருள்
களைக்கொண்டே சிக்கனமாக வாழ்க்கைப் பாதையை வகுத்திருக்கிறார்கள்.
அப்படியே விரதம், நியமம், கடவுள் வழிபாடு என்றெல்லாம் முறைகள்
வகுத்து உடல் நலனை இணைத்துவிட்டார்கள்."

"கலா! பெரியோர்களின் சாமர்த்தியத்தையும், நுட்பத்தையும் ஆராய்ந்
தால் ஆச்சர்யமாகத்தானிருக்கிறது. அதைப்பற்றித் தனியாகப் பேசுவோம்.
வருஷப்பிறப்பைப்பற்றி மட்டும் சொல்லு."

“எதையும் நல்ல ஏற்றம் கொடுத்து நல்லெண்ணம், [illegible]னங்களுடன் வரவேற்பது மகான்களின் நோக்கம். இந்த ம[illegible], வாசா, ஹஸ்தாப்யாம், என்றபடி வரவேற்கும் நாட்களுக்கு ஒரு சக்தி இருக்கும். ஆத்ம பலம் பெரிதல்லவா? எனவே என்வரைக்கும் வருஷப்பிறப்புத்தான் தலைசிறந்த பண்டிகை. அன்றைய தினம் மனம் நிரம்பி நல்வாழ்வு வாழ ஆரம்பிக்கிறோம். விஷு புண்ய காலமென்று போற்றுகிறோம். வருஷம் முழுதும் பூர்ண ஆனந்தமாக வாழ அறிகுறியாக முதல் தினத்தைக் கொண்டாடுகிறோம்.

“ஆமாம் கலா! வருஷப்பிறப்பன்று குடும்பத்தில் சச்சரவு ஏற்பட்டால் வருஷம் பூராவும் துவந்த யுத்தம்தான். காலில் வருஷப்பிறப்பன்று காயம் பட்டுக்கொண்டேன். இந்த வருஷம் பூராவும் ஓயாமல் காலில் சுளுக்கு, எலும்பு முறிவு இப்படியேதான்.

“பார்வதம்! இப்படி குறுக்கே பேசுகிறாயே; சுபமாகக்கொண்டாட வேணுமென்று பேசும்பொழுது அசம்பாவிதமாக ஆரம்பிக்கிறாய். என்னவோ சொல்லட்டுமே கலா. பார்வதம்! குழந்தைமாதிரி. அவளை ஒன்றும் சொல்லாதே. புதன்கிழமையில் பிறக்கிறது. எல்லாம் நன்மையாகவே இருக்குமென்றுதான் நம்புகிறேன்.”

“என்ன நன்மை வரப்போகிறது. வருஷத்தின் பெயரைப் பாரு. விரோதி என்று. இருக்கிற விரோதமும்,யுத்தமும், கலகமும் போதவில்லை. வருஷத்தின் பெயர்கூட இப்படி இருக்குமோ!

“அப்படி நினைக்காதே பார்வதம்,விரோதிஎன்றால் இன்னும் தேசத்தில் விரோதம் அதிக்கிரமமிருக்காது. காமக்குரோத, மத மாச்சர்யத்திற்கு இவ்வருஷம் விரோதி, சண்டை, பூசல், பொய், கொலை, களவு இவைகளுக்கு விரோதி. அகால மரணம்,அக்கிரமம்,நம்பிக்கைத் துரோகம்,இவைகளுக்கு விரோதி. பசி,பிணி,துக்கம்,இத்தகைய கொடுமைகளுக்கு விரோதி. அசோகன் என்று பெயரிடுகிறோம். ஆனந்தன் என்று பெயரிட்டால் என்ன? அசோக சக்ரவர்த்தியைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அசோகன் என்ன பெயர் என்று கேட்கமுடியுமா? சோக மற்றவன், சோகத்தை விட்டவன், சோகத்தை ஜெயித்தவன் என்று இன்னும் அழுத்தமாக சொல்லும் பாவம்போல், விரோதி என்றால் மனித வர்க்கம் இன்னும் விரோதம் கொண்டு உழன்று தவிப்பார்களென்று அர்த்தமில்லை. விரோதத்திற்கு விரோதி அவ்வளவுதான்!

“கலா, பஞ்சாங்கத்தில் மட்டும் ஒரே மாதிரியாக போடுகிறானே. அதிலும் ஒரு வேடிக்கை. மழையினால் சேதம். மழையில்லாமல் தானியங்களுக்கு விளைவு. ராஜா, மந்திரி இவர்களுக்கு நன்மை. ராஜாவுக்கு துர்சம்பவம். பசு, பிராமணன் மத்திமம். காசம், வியாதி... இப்படி அர்த்தமின்றி ஒரே சமயத்தில் இரண்டையும் போட்டிருக்கிறார்களே எதை எடுத்துக்கொள்வது எதை விடுவது?”

“அதுதான் கலா, உலகதத்துவம். வாழ்க்கையில் கஷ்டம் சுகம், நன்மை தீமை மாறி மாறித் தானே வருகிறது. அழுகிறோம்-சிரிக்கிறோம். கஷ்டமின்றி சுகமிருந்தால் மகிமையில்லை. இரவு பகல்போல் எல்லாம் மாறிமாறித்தான் வரும். ஷேக்ஸ்பியர் மகாகவி மனிதஇயல்பு—உணர்ச்சி மாறிமாறி இருக்கிறார்களென்ற தத்துவத்தை வைத்து ஹாஸ்யமாக எழுதியிருக்கிறார். வாணிபுர வர்த்தகன் (Merchant of Venice) என்ற நாடகத்தில் ஷைலாக் (Shylock) என்றவனிடம் ஒரு நண்பன், அவன் பெண் ஓடிப்போன வேதனை தரும் விஷயத்தையும், அன்டோனியோ (Antonio) கப்பல் மூழ்கிய அவனுக்கு ஆனந்தச் செய்தியையும் மாறிமாறி ஹாஸ்

...ஆலுகிருன் அந்த கட்டம் அதி அற்புதமாக லைபிக்கும் ... ...ரும்!''

"கலா, உன்னிடம் ஒரு பலவீன குணம். விஷயத்தை விட்டு பாகவதாள் கதை சொல்லுவதுபோல் உபகதை சமுத்திரத்தில் இறங்கி விடுகிருய். அதிலிருந்து உன்னைக் கரையேற்ற நான்தான் வேண்டியிருக்கிறது. வருஷப்பிறப்பை விட்டு ஷேக்ஸ்பியருக்குப்போய்விட்டாய். பஞ்சாங்கத்தில் போடுகிறமாதிரி கஷ்ட சுகம் இருக்குமென்பதற்கு அறிகுறி வேப்பம் பூ பச்சடிதான் என்று சொல்லுகிருய்போலும். வருஷப்பிறப்பின் மகிமை அதுதானல்லவா!''

"பர்வதம்! உன் விஷமப் பேச்சு அதிகரித்துவிட்டது. உபமான, உபமேயத்துடன் சொன்னுலே உன் மூளையில் ஏறவில்லையே. போகட்டும் நான் விடியற் காலையில் என்னவோ கனவு கண்டேன். அதிகாலை கனவு பலிதமாகுமென்று சொல்வதுண்டு. ஒருயௌவன சுந்தரி தோன்றினுள். "யாரம்மா நீ'' என்றேன். 'புது வருஷப் பெண், நான் புதுமைப்பெண்' என்ருள். எனக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. திறந்த வாயை மூடாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். மேலும் அந்த சுந்தரி தன் பவள வாயைத் திறந்து முத்துப் போல் சில வார்த்தைகளைப் பாட்டுபோல் பாடினுள்.

இதைநாம் காணப்போவது
மகாத்மா மறைந்தாரு அவர் ஜோதி காந்தி மறையவில்லை
சத்தியம் ஓங்கப்போவது, மாந்தர் நித்தியமாகப் போவது
இதை நாம் காண்போமே
அன்பு தெய்வம் வருமாம்—அது
அனைவரையும் ஆட்கொள்ளுமாம்
மாதம் மும்மாரி மழை பொழியுமாம்—தான்யம்
முத்தாக வளமாகுமாம்
இதைநாம் காண்போமே
ரேஷன் ஒழிந்து போமே—அத்துடன்
கருப்புமார்கட் அழிந்துபோமே.
யந்திர சாலைகள் நிரம்புமே—உற்பத்தி
பொருள்கள் குவிந்து போமே
சாப்பிட சாப்பாடும், உடுக்க துணியும்,
நிற்க நிழலும், குடிக்க தண்ணீரும்—இதுமட்டுமா ?
படிக்க பள்ளியும் பாடுபட வேலையும்
வருமே ராமராஜ்யம்—இதை நாம் காணுவோமே

இப்படியாக வார்த்தைகளை அடுக்கிப் பாடினுள். எனக்கு மெய்யானந்தம் விழித்துக் கொண்டுவிட்டேன். இந்த கனவு பலிதமாகும் பாரு.

கலா:—இந்த பாட்டை என்ன ராகத்தில் சுந்தரி பாடினுள் ?

"கேட்கவேண்டுமா பர்வதம், பூபாளத்தில் ஆரம்பித்து சுருட்டியில் முடித்திருப்பாள். இல்லையா கலா. உனக்கு வேண்டியதெல்லாம் கனவாக வருகிறதேஅதுதான் பேராச்சர்யம்.''

"சிறுசுகள் கிண்டல் செய்கிருர்கள். கலா, கோபித்துக்கொள்ளாதே கனவு தூக்கும்பொழுதா காணவேணும்? விழித்திருக்கும் பொழுதே காணமுடியுமே. பாரதியார் உணர்ச்சியின் வேகத்தில் கனவு காணவில்லையா? அது இப்பொழுது பலிதமாகவில்லையா !

"சாவித்திரி மாமி கலா கட்சிதான் பேசுவது வழக... ...னக்கு இதொன்றும் சிந்தை இல்லை. வஸந்தகாலம், கல்ய..., ...ம மல்லிகை, சந்தன மணம், ஊர்வலம் இவைகள்தான் ஞாபகம் வருகிறது.," என்றாள் கமலா.

ஆமாம். கமலாவுக்கு கல்யாண ஞாபகம் வந்துவிட்டது. மூஞ்சியை மாப்பிள்ளை பக்கம் திருப்பாமல் உட்கார்ந்துகொண்டிருந்தவள் கல்யாண ஊர்வலத்தில் தூங்கி வழிந்து மாப்பிள்ளை மடியில் விழுந்தாள் கமலா. எனக்கு இருபத்தைந்து வருஷமாயும் மறக்கவில்லை.

இனி இருப்பது உசிதமன்று என்று தீர்மானித்த கமலம் "நேரம் போனதே தெரியவில்லை. போய்வருகிறோம் மாமி" என்றாள். 'அப்படியே செய்யுங்கள்; வருஷப்பிறப்பன்றுகூட வந்து மஞ்சள் குங்குமம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றாள்" சாவித்திரி.

---

(16-வது பக்கத் தொடர்ச்சி)

அசுர சுபாவம் உள்ளவர்களோ, வேதகருமங்களை அறியமாட்டார்கள். அவர்களிடன் பரிசுத்தி, உண்மை முதலியவை கிடையாது. பரமாத்மாவே இவ்வுலகத்தைத் தாங்குகிறார் என்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பகவானே ரக்ஷிக்கிறார் என்றும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். உலகம் முழுவதும் காமத்தையே காரணமாக உடையது என்று சொல்வார்கள். பிராணிகளைத் துன்புறுத்தி உலகத்தை அழிக்க ஆரம்பிப்பார்கள். இவர்களே ஆசை என்கிற நூற்றுக்கணக்கான கயிறுகளால் கட்டுண்டு காமமும் கோபமும் மேலிட்டவர்களாய் நியாயமின்றி செல்வம் சேமிப்பவர்கள். "என் சாமர்த்தியத்தினால் பூமி, புத்திரன், செல்வம் முதலியவைகளைப் பெற்றுவிட்டேன், பகைவரை கொன்றுவிட்டேன். மற்றுமுள்ளோரையும் கொன்று விடுவோம்; நானே ஆளுபவன், பலவான், செல்வந்தன், உயர்ந்தவன்" எனப் பலவாறு அறிவின்மையினால் மயக்கப்பட்டவர்களாய், காமத்தில் ஈடுபட்டு நரகத்தில் விழுகிறார்கள்.

மேலும் அசுர சுபாவமுள்ளவர்கள் தற்புகழ்ச்சியில் பெருமை கொண்டு யாகம் முதலியவைகளைச் செய்வார்கள். அஹங்காரம், பலம், கர்வம், காமம், கோபம் இவைகளை அடைந்தவர்கள், தனது தேஹம், பிறர் தேஹம் இவ்விடங்களில் உள்ள என்னையே துவேஷிக்கிறார்கள். இவ்விதம் கொடூர சுபாவமுடைய கீழ்த்தர ஜனங்களை உடனே அசுரப் பிறப்பையே எடுக்கும்படிச் செய்கிறேன். அசுரப் பிறப்பை எடுத்தெடுத்து என்னை அடையாது தாழ்ந்த கதியையே அடைகிறார்கள்.

### அசுர இயல்பின் மூல காரணம்.

நரகத்திற்கு மூன்று வழிகள் இருக்கின்றன. அவை காமம், கோபம், பேராசை என்பன. இம் மூன்று குணங்களையும் ஒழிக்கவேண்டும். அப்பொழுதுதான் நற்கதி பெறலாம்.

எவன் வேதத்தின் கட்டளையை மீறி நடக்கிறானோ, அவனுக்கு சித்தி, சுகம், மேற்கதி ஒன்றும் கிடையாது.

ஆகையால், இது செய்யலாம், இது கூடாது என்று அறிய சாஸ்திரமே உனக்குப் பிரமாணமாகும். ஆகவே, சாஸ்திரத்தின் விதியை அறிந்துகொண்டு ஒவ்வொரு காரியமும் செய்யவேண்டும்.

இந்த அத்தியாயத்தின் கருத்து:—சாஸ்திரங்களுக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டும் என்பதாம்.

# 17

கோகுலத்தில் கணக்கற்ற பசுமாடுகள் இருந்ததாயும் அவற்றைக் கண்ணன் கூட மேய்த்ததாயும் அப் பசுமாடுகளைத் தரிசிப்பதால் பகவானையே தரிசிப்பதுபோன்ற உணர்ச்சியும் பலனும் உண்டாகிறது என்றும் படித்து அறிந்திருக்கிறோம். அந்த ஆனந்த உணர்ச்சியின் வேகந்தான் இன்றும் ஒரு பசுமாட்டைப் பார்த்தாலும் கை எடுத்துக் கும்பிடுகிறோம். பாலைக்கொடுத்து மக்களை வளர்க்கும் தாயைப்போல் பசுமாடுகளின் கூட்டமே உதவுகிறது. பசுமாட்டின் சரீரம் பூராவும் தேவதைகள் ஒவ்வொரு அவயவத்திலும் இருப்பதாகவும் புராணம் கூறுகிறது.

காமதேனு என்ற பெயரால் பசுவை பூஜிக்கின்றோம். சேர்ந்தார்ப்போல் பத்து பசுமாடுகள் உள்ள கிராமத்து வீட்டைப் பார்த்தால் உடனே "அடாடா! கோகுலம்போலல்லவா பசுக் கூட்டத்தின் காட்சி பிரகாசிக்கின்றது!" என்று பெருமை பேசுகிறோம். க்ருபானந்தஸ்வாமிகளின் மடத்தில் உள்ள கோசாலையைப்பார்ப்பதற்காகவும் அந்த கோ ஸம்ரக்ஷணத்தின் விசேஷத்தை அறிவதற்காகவும் சதா சர்வ காலமும் வெளியூர் வாஸிகள் வந்து பார்த்து மகிழ்ந்து தம் தம் ஊரில்போய் இதை ப்ரமாதமாகப் பத்ரிகையில் எழுதுவார்கள். அத்தகைய இடமோ, அடாடா!...நிர்மலமான ரிஷிஆச்ரமம் என்றால் மிகையாகாது. பல குடிசைவீடுகளும் மாட்டுக்கொட்டகைகளும்தவிர, பசுமை நிறைந்த மரங்கள் வராளமாகக் கூடாரம்போட்டு நிழல் கொடுப்பதுபோல் அடர்ந்து வளர்ந்து ப்ரம்மானந்தத்தை அள்ளிக்கொடுக்கும் முறையில் அமைந்திருந்தன.

சிறிது தூரத்தில் வரும்போதே—இந்த அதி மனோகரமான இடத்தைப் பார்க்கும்போதே—சுசீலாவுக்கு அவளையறியாது ஒரு விதமான ஆனந்தமும் அதிர்ச்சியும் உண்டாகி, அந்த உணர்ச்சியைத் தாங்கமுடியாது இத்தகைய மிகப்பவித்திரமான இடத்தில்தான் காலை வைப்பதற்கு யோக்யதை உண்டா! என்கிற ஒரு அபூர்வ எண்ணம் அவளது ஜென்மத்திலேயே இந்த நிமிடம்தான் உதித்துத் திக்குமுக்காடச் செய்தது. இதுவரையில் இம்மாதிரியான ஒரு எண்ணம் அவள் கனவில்கூட தோன்றியதே கிடையாது. அவளையே ப்ரமிக்கச் செய்யும் இவ்வெண்ணம் தோன்றியதும் சரீரமே கிடுகிடென்று நடுங்குவதுபோல் தோன்றியது.

கும்பல் கும்பலாகப் பசுக்கள் நிற்கின்றன. அவைகளுக்குச் சில பெண்மணிகள் மஞ்சள் குங்குமமிட்டுப் புஷ்பார்ச்சனை செய்து ப்ரதட்சணம் செய்தவாறே கோ மாதாவின்மீது பாடும் இனிமை இவள் இதயத்திற்குள் புகுந்து ஆழமாகத் துளாவியது. இன்னொரு புறம் பசுக்களுக்குச் சில பழுத்த புத்த சன்யாசிகள் புல்லும் ஆகார

மும் ஊட்டியவாறு மாட்டைத் தடவிக்கொண்டே ஆனந்த பரவசர்களாய்க் காணப்பட்டார்கள்.

மற்றொரு புறத்தில் ஏராளமான ஏழைக் குழந்தைகள் பாலை வாங்கிப் பருகும் காட்சியும், அவர்களுக்குச் சில பெண்மணிகள் பாலை உத்ஸாகத்துடன் வார்ப்பதும் தூரவிருந்து பார்க்கப்பார்க்க இத்தகைய புனிதமான இடத்தை மிதிக்கத் தனக்கு சற்றும் யோக்யதையில்லை...."ஏ பாபீ! சண்டாளி! நீ இந்த பவித்ரமான இடத்தை அபவித்திரமாக்கிவிடாதே! நீ கேவலம் சாக்கடைக்குச் சமானமானவள். இந்த இடத்தை மனத்தினால் நினைப்பதற்குக் கூட உனக்கு அருகதையில்லை. போ! போ! போய்விடு" என்று மனச்சாட்சியொன்று ஈட்டியால் குத்துவதுபோல் குத்துகிறது. உள்ளேயும் போவதற்கு அச்சமும் அதிர்ச்சியும் பாதிக்கிறது. தன்னைச் சுற்றி நிற்கும் பேராபத்திலிருந்து தான் தப்புவதற்கும் தன் பெற்றோர்களைத் தேடிப்பிடித்து அவர்களுக்குத் தான் பணிவிடைகள் செய்து தன் பாபத்தை ஓரளவாவது கழித்துக் கொள்வதற்கும் ஆதாயம் இத்தகைய இடத்தில் மறைந்திருப்பது தான் சரியானது...

"இந்த புனிதமான இடத்தில் என்னைச் சேர்த்துக்கொள்வார்களா? நான் அதற்கு ப்ரயத்தனம் செய்வதுதான் சரியா? இந்த ப்ரமாண்டமான தோட்டத்தில் வேலை செய்யவும், மாட்டுக் கொட்டகை சுத்திசெய்து வரட்டி தட்டுதல் முதலிய வேலைகளைச் செய்வதற்கும் எனக்கு பாக்யம் கிடைக்குமா? அதற்காவது முயற்சி செய்து பார்த்துவிடுவோம்" என்று தூரவிருந்தபடியே பலவிதமாக எண்ணித் துடித்தவாறு மெல்லத் தள்ளாடித் தடுமாறிக்கொண்டு வைக்கோல்வண்டிகள் வரிசையாக நின்றவிடத்தில் சோர்ந்துபோய் ஒரு மூலையாக வந்துநின்றாள்.

மடத்திலுள்ள பல சாமியார்களில் ஒருவர் வைக்கோலை வாங்க வந்தார். கூசிக் கூசியவாறு ஒரு ஓரமாக ஒட்டிக்கொண்டு நிற்கும் ஸுசீலாவைப் பார்த்து வெகுவெகு சாந்தத்துடன் "நீ யாரம்மா? என்ன வேண்டும்? அல்லது யாரைப் பார்க்கவேண்டும்?" என்றார். அந்த குரலில் த்வனித்த சாந்தமும் அந்த முகத்தில் ப்ரகாசித்த தேஜஸ்ஸும் அந்த பார்வையில் ஜ்வலிக்கும் கருணையும் அந்த பிம்பத்தின் அபூர்வத் தோற்றமும் காவி உடையின் முக்ய தத்துவத்தின்படி த்யாகத்தின் ஜ்வாலை கொழுந்துவிட்டு எரிவதுபோன்ற ப்ரமிப்பும் கண்ட ஸுசீலாவுக்கு தேகம் திடுக்கிட்டு நடுங்கியது. இத்தகைய உணர்ச்சி தோன்றத்தோன்றத் தன்னுடைய அசுத்தத் தன்மையின் அவலமும் சீர்கேட்டின் பரிபவமும் நன்றாகத் தெரிந்து இதயத்தில் ஈட்டிகுத்துவதுபோலும் ஆயிரம் தேள் கொட்டி வதைப்பதுபோலும் தோன்றியதால் தலை சுற்றியது.

கேட்டதற்குப் பதில் சொல்லமுடியாது துவண்டுபோய் கால் வெடவெடவென்று உதறியதால் சமாளிக்கமுடியாது சாய்ந்து விட்டாள். ஏற்கெனவே அதிகதூரம் நடந்ததும், பசியினால் தவித்

தனும் ஒன்று சேர்ந்ததுடன் தனது நிலைமையைத் தன் கண் முன்பு காலக்கண்ணுடியில் கண்ட அதிர்ச்சியில் அப்படியே மயக்க மடைந்து விழுந்துவிட்டாள்.

இதைக்கண்ட பிட்சு ஓடிச்சென்று இரண்டு பெண்மணிகளை அழைத்துவந்து இவளைத் தூக்கி ஒரு நிம்மதியான இடத்தில் படுக்கச்செய்து ஆச்வாசப்படுத்தினர். சிறிது நோத்திற்கெல்லாம் சற்று கண் திறந்த ஸுசீலா எழுந்து பார்க்கும்போது இவளைச்சுற்றி புனித ஸ்வரூபிகளான இரண்டு மூன்று ஸிலவதிகள் உட்கார்ந்து ஒருத்தி விசிறுவதும் ஒருத்தி மடியில் தன்னைப் படுத்துக்கொள்ள வைத்திருப்பதும் இன்னொருத்தி பாலை வாயில் வார்ப்பதுமான சோடசோபசாரத்தைக் கண்டு தேகம் கூசிக் குன்றி ஏதோமாதிரி உணர்ச்சி பாதித்ததால் சடக்கென்று எழுந்து அம்மூவரையும்காலைத் தொட்டு வணங்கிப் பேசத்தெரியாது தேம்பித்தேம்பி அழுதாள்.

இவள் செய்கையைக்கண்டு ஒன்றுமே புரியாது அந்த நாரீ மணிகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். "அம்மா! ஏன் அழுகிருய்? நீ யாரு? எங்கிருந்துவந்தாய்?" என்று அன்பாகக் கேட்டார்கள்.

என்றைக்கு அந்த ஸினிமாவை விட்டு வெளியில் வந்தாளோ அன்றே அவளுடைய பழய ஜென்மம் மாறிப்போய்ப் புதிய புனர் ஜென்மம் எடுத்துவிட்டாளாதலால் அந்த நிமிடம்முதல் தனது மகத்தான குற்றத்தை விநாடிக்கு விநாடி நன்றாக உணர்ந்து இதயம் அடிப்பதால் தனது அவகேட்டைச் சொல்லிவிடலாமா என்று ஒரு தரம் நினைத்தாள். அப்படிச் சொல்லிவிட்டால் தன்னை முகம் எடுத்தும் பார்க்கமாட்டார்களோ என்னவோ! நமக்கு இனி பந்தோபஸ்தான புகலிடத்தை யார் கொடுப்பார்கள்... அதிலும் இவர்களிடம் சொல்லிய உடனே, ஸினிமாக்காரனின் விளம்பரப்படி யாராவது காட்டிக்கொடுத்துவிட்டால் என்ன செய்வது, கெட்டகாலம் மாறி நல்லகாலம் பிறக்கும் என்று நினைத்திருக்கும் ஆசையில் மண் விழாதபடி புளுகு சொல்லியாவது தப்பித்துக்கொள்ளவேண்டும் என்று தோன்றியதால் பதில் பேசத்தெரியாது நின்றுள்.

பிறகு சற்று சமாளித்துக்கொண்டு "புனிதவதிகளே! நான் பரதேசி! திக்கற்ற அனுதை! எனக்குப் புகலிடம் கொடுத்துக் காப்பாற்றவேண்டும். இந்த பவித்திரமான இடத்தில் இந்த அடிமை குப்பை வாரிச் சுத்தம் செய்யவும் தயாராக இருக்கிறேன். கருணை பாலிக்கவேண்டும்" என்று விம்மி விம்மி அழுதுகொண்டே சொன்னுள்.

எத்தனைதான் வைராக்யப் பழங்களையும் த்யாகத்தையே உணவாகக் கொண்டவர்களாக இருந்தபோதிலும் சில பெண்களின் இயற்கையான குணங்கள் மாறுவதில்லை. அதுபோல் அங்கிருந்த ஒரு பெண்மணி ஸுசீலாவைப் பார்த்து "அம்மா! எப்போது உலகத்தில் பிறக்கிருேமோ அப்போதே தாயும் தந்தையும் இருப்பது நிச்சயம். அவர்களைச் சேர்ந்த யாராவது மக்கள் மனிதர்கள் இல்

லாது போகமாட்டார்கள். அம்முறையில் உனக்கு யார் யார் எங்கே இருக்கிறார்கள்?" என்று சடக்கென்று கேட்டாள்.

ஏற்கெனவே பல இடங்களில் சமயோசிதமாகப் பேசும் திறமைபெற்றிருந்த சிறந்த அறிவாளியாகையால் சற்றும் தியங்காமல் யோசிக்காமல் "தாயே! பெற்ற தாயும் தந்தையும் பந்துக்களும் இல்லாமலில்லை. ஆனால், காலவிதியின் கொடுமையில் திடீரென்று உண்டாகிய காலரா நோயால் எங்கள் க்ராமம் பலியாகிவிட்டது! வீட்டுக்கு ஒருவர் இருவர்கூடத் தேறிப் பிழைக்கவில்லை. அம்முறையில் மகாபாவி நான் மட்டும் பிழைத்துக்கொண்டேன். உலகம் போகிறபோக்கில் பிழைக்க வழிதெரியாது தவிக்கையில், இந்த கோகுலத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு இங்கு வந்தேன். எனக்கு ஏதாவதொரு தொழில் கொடுத்து ஆதரித்தால்போதும். எனக்கு உலகமே இருண்டு வெறுத்துவிட்டது." என்று சமயோசிதமாய் அழுத்தந்திருத்தத்துடன் கூறினாள். சிறந்த நடிகையின் சாமர்த்யத்தைப் பலவிதத்தில் தன் வாழ்க்கையில் கண்டுகொண்டிருக்கும் உண்மையை இப்போதும் கண்கறிந்தாள்.

இம்மட்டுடன் விடாமல் மேலும் பேசத்தொடங்கி..."தாயே! இப்பாழும் உலகத்தில் கட்டிக்காத்து ஆதரிக்க சொந்தமனிதர்களும் இல்லாது...பணமும் இல்லாமல் எப்படி வாழ்க்கையைச் செம்மையாய் நடத்தமுடியும்?....பலருடைய எண்ணங்கள் பலமாதிரிதிய வழியில் சிதறியதன் வேகம் பேராபத்தை விளைவிக்கக் கூடியநிலைமையில் என் கதி ஆகிவிட்டதால், என் மனம் முறிந்துபோய் உலகையே வெறுத்துவிட்டது. தற்கொலைக்கும் உள்ளம் துணிந்தது. ஆனால், என்பிதா அதன் பயங்கரத்தைப்பற்றியும் கொடியபாபத்தைப் பற்றியும் பலமுறை சொல்லியது என் நினைவுக்கு வந்ததால், உலகையே வெறுத்து சன்யாசினியாய் வாழ்க்கையை நடத்திப் பயனடைவதற்கே என்னுள்ளம் துடித்ததால் இங்குவந்தேன்" என்னும் ஒருபொருத்தமான புளுகைக் கொட்டி அளந்தாள்.

அதேசமயம் இவளை இங்கு கொண்டுசேர்த்த சாமியார் இவள் எப்படியிருக்கிறாள் என்று பார்ப்பதற்காக வந்தார். இவள் பேசிய வேதாந்தவார்த்தைகளும் நடிப்பும் கேட்டும் கண்டும் வியப்புற்றபடியே..."சரி, பிழைத்துக் கொண்டாள்...என்றதை அறிந்து மவுனமாகத் திரும்பிவிட்டார். ஷீலாவின் கண்களில் வழியும் ப்ரவாகத்தை அடக்கவே முடியாது பொங்கியது.

அங்கிருந்த ஸ்த்ரீகளில் ஒருத்தி "அம்மா! இன்று நீ இங்குள்ள நதியில் ஸ்நானம் செய்துவிட்டு வா. சற்று பொறுத்து ப்ரார்த்தனையும் பஜனையும் நடக்கும். அதன் பிறகு ஆகாரம் கொடுப்பார்கள். அதன் பிறகு கீதா பாராயணமும் ஸ்ரீராமாயண காலக்ஷேபமும் பெரியஸ்வாமிகள் நடத்துவார்கள். அதையும் கேளு. எதற்கு இதை எல்லாம்சொல்கிறேன் என்றால், இந்த கோகுலத்தின் சட்டதிட்டமே வேறு அலாதியானது. இதை நீ நன்றாக அறிந்து உன்னையே நீ தெளிவுபடுத்திக்கொண்டு இங்கிருக்கச் சம்மதப்

பட்டால் நான் பெரிய ஸ்வாமிகளிடம் சொல்லி உனக்கு ஏதாவ
தொரு ஆதரவளிக்கச் செய்கிறேன். ஏதோ பொங்கிவரும்
துக்கத்தின் வேகத்தில் ஆசைப்பட்டுவிட்டுப் பிறகு இதை விட்டுப்
போக நினைப்பதோ, ச்ரமமாக நினைப்பதோ கூடாது. இன்று பூரா
வும் இங்குள்ள சகலமான நடவடிக்கைகளையும் பார்த்துக்கொள்ளு.
எல்லாம் உன்னுடைய நன்மைக்கே சொல்கிறேன். உலகவாழ்க்
கைக்கு எள்ளளவும் ஆசைப்படாது முற்றுந்துறந்த துறவியாக
இருப்பவர்கள்தான் இந்த இடத்தில் இருக்க முடியும்'' என்றாள்.

"தாயே! உலகத்தைத் துச்சமாகக் காரிஉமிழ்ந்த என்னுள்ளத்
தில் இனி அந்த ஆசாபாசத்திற்கிடமே இல்லை. இது சத்யம் தாயே!
இதை நம்புங்கள்'' என்று பூமிதேவியின்மீது அடித்து ப்ரமாணம்
செய்தபோது ஸுசீலாவின் முகத்தில் எங்குமில்லாத ஒரு வீரம், நம்
பிக்கை, உறுதி முதலியவைகளின் ப்ரகாசமும் பளிச்சென்று
தெரிந்தது.

## 18

பூகம்பத்தின் விசித்திரத்தை...விபரீதத்தை நேரில் கண்ட
வர்கள் அதிகமிருக்க முடியாது; சொல்லக் கேட்டும் படிக்க
அறிந்தும்தான் தெரிந்திருக்கக் கூடும்: ஆனால், இன்று தடபுடல்
கம்பெனியைச் சேர்ந்த ஒரு சாதாரண கூலிகூட இந்த பூமி
அதிராத...பிளவுபடாத பூகம்பத்தின் விபரீதத்தின் விளைவு எத்
தகையது என்பதை நன்கு அறிந்துகொண்டான்.

அம்ஸாதேவியின் ஆக்ரோஷத் தாண்டவத்தினால் ஏற்பட்ட
பூகம்பத்தின் பலன் பெருத்த நஷ்டத்தை மட்டும் உண்டாக்காமல்
அதன் முதலாளிக்கு மூளைக் குழப்பமும் டைரெக்டருக்கு கை ஊன
மும் குயிலிக்கு கால் ஊனமும் உண்டாகினதானது அம்ஸாதேவியை
எப்படியாவது தேடிப்பிடித்து அவளைப் பழிக்குப் பழிவாங்கி அவ
ளுடைய உயிரைப் போக்காமல் சித்திரவதை செய்து, தங்களைப்
படுத்திய பரிபவத்திற்கு வெஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டும்
என்று டைரெக்டர்முதல் பங்குதாரிகள் வரையில் தீவிரமான
ஆத்திரத்தை யடைந்து...இதற்காகத் தங்களுக்கு என்னசெலவானா
லும் சரி, எத்தனைதூரம் இதற்குப் பாடுபடவேண்டுமானாலும் சரி,
சளைப்பதில்லை. ஒரு கை பார்த்தே தீருவது. ஏரியில் பிணம் மிதந்
தது எந்த அழுகப்பிணமோ! இவளுடையதாக இருக்கவே முடி
யாது. சட்டைக்காரி வேஷத்தில் பார்த்ததாகச் சொல்வதுதான்
சரியானது. ஆகையால் நாம் இதை இப்படியே விடாமல் சகல
மான தகவல்களுடனும் துப்பறியும் ராஜாராம் நாயுடுகாருவிடம்
தெரிவித்து அவரைக்கொண்டு தேடிப்பிடித்துச் சரியானபடி அவளை
வாட்டி வதைக்கவேண்டும்...என்று சினிமாக் கூட்டாளிகள்
எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு ரகஸியமான கமிட்டிக் கூட்டம்
போட்டுத் தீர்மானித்தார்கள்.

இதைப் பத்ரிகையில் வெளியிட்டால் எங்கே இதைப் பார்த்து அந்த ஸாகஸக்காரி முன்ஜாக்கிரதையாகக் கப்பலேறிச் சென்றுவிடுவாளோ என்கிற பயத்தினால், ரகஸியத்திலேயே நாயுடுவைக்கண்டு சகல விஷயங்களையும் விவரமாகத் தெரிவித்து எப்படியும் இவளைத் தேடித்தரவேண்டும் என்று மிகவும் தீவிரமாகக் கேட்டுக்கொள்ள யார் செல்வதென்று முதலில் யோசனை எழுந்தது.

"ஒருவேளை அம்ஸாதேவியே தன்னைப்பற்றி நாயுடுவிடம் கூறி நம்மையே காட்டிக் கொடுத்திருப்பாளோ?" என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பிவிட்டார் ஒருவர்.

"வாஸ்தவம்! அந்த கிராதகி அப்படியும் செய்தாலும் செய்திருக்கலாம். இதற்கு என்ன செய்வது?" என்றார்கள்.

மற்றொரு:—எல்லாம் வாஸ்தவந்தான். நேற்றய தினம் நான் இன்னொரு விஷயம் கேள்விப்பட்டேன். அதாவது ஆதியில் இந்தச் சண்டாளியை இழுத்துக்கொண்டுவந்து நம்மிடம் சேர்த்த பாட்டு வாத்யார் சுந்தரத்தைப்பற்றிய நினைவே உங்களுக்கு மறந்திருக்கலாம். அவன் சிறையிலிருந்து விடுதலையாகி வந்துவிட்டதாயும் அவனை இக்கதிக்கு ஆளாக்கிய முதலாளி முதலியவர்கள்மீது கடுமையான வஞ்சங்கொண்டு பழிதீர்க்கப்போவதாயும் அவன் இதற்காக ஒரு சதியாலோசனைக் கூட்டத்தைக்கூட்டி ரகஸியமாக வேலைசெய்வதாயும் ஆதியில் பழகிய வாஞ்சைக்காக இந்தத் திருட்டுக் கள்ளியும் அவனுடன் சேர்ந்துகொண்டுவிட்டதாயும் சரியான மனுஷ்யர்களின் மூலம் தகவல் கிடைத்திருக்கிறது. இதைத் தெரிவிப்பதற்காகவே நான் இன்று அவசரமாக இக்கூட்டத்தைக் கூட்டச் செய்தேன். துப்பறியும் புலியும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்; நமது ஆட்களைக்கொண்டு ரகஸியமாக வேலை செய்தால்தான் பலன் இதில் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

இன்னொருவர்:—கிணறுவெட்டப் பூதம்கிளம்புவதுபோலல்லவா விஷயமிருக்கிறது. அந்தப் பாட்டு வாத்யாரா திரும்பி வந்துவிட்டான்? எமகாதகப் பேர்வழியாயிற்றே. இந்த விஷயம் உண்மையாகத்தானிருக்கும் என்று எனக்கும் தோன்றுகிறது. கொலைக் குற்றத்திற்காகச் சிறையிலிருந்த மனிதன் திரும்பிவந்து பழிதீர்க்க அவனுக்கு அத்தனை தைரியம் வருமா என்று சந்தேகித்து சற்று அசதியாக இருந்துவிட்டேன். இனி நாம் கண்ணை மூடிக்கொண்டிருக்கக்கூடாது. சரியானபடி வேலைசெய்து இந்தக் கூட்டத்தை அப்படியே பிடித்துவிடவேண்டும். நம் கூட்டாளிக்கு மூளை கலங்கி இருக்கிறது என்பதை வெளியாரறிய பகிரங்கப்படுத்தாமலிருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். நம்முடைய பலத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடாது.

வேறொருவர்:—சார்! நாம் விஷயங்களை அலசிப் பேசும்போதுதான் புதியபுதிய யோசனை தோன்றுகிறது. அந்த மாயக்காரி அம்ஸாதேவிக்கு வேலைக்காரியாக இருந்தாளே வள்ளி அவளை நாம்

எப்படியாவது கைக்குள் போட்டுக்கொண்டு ரகஸியங்களை விசாரித்தால் இன்னும் எதாவது அந்தரங்கமான தகவல் கிடைத்தாலும் கிடைக்கும் என்று தோன்றுகிறது. அவளை அழைத்துவரச் சொல்லுங்கள்—என்றார்.

உடனே ஆள் சென்று வள்ளியை அழைத்துவந்தான். வள்ளிக்கு விவரம் புரியாததால் எதற்கோ என்னவோ என்கிற பயம் உதறுகிறது. மெல்ல நடுங்கியவாறு வந்து நின்றாள். இங்கு உட்கார்ந்திருப்பவர்களில் மிகவும் சாமர்த்தியசாலியான ஒருவர் வள்ளி வந்தவுடனே வெகு தடபுடலாக அவளை உற்று உற்றுப்பார்த்தார்.

"அடாடாடா!......என்ன முகவெட்டு! என்ன கம்பீரமான பார்வை! ஏன் சார்! இத்தகைய வசீகரம் பொருந்தியவளையா அந்த அம்ஸாதேவி எக்ஸ்ட்ராவாக நடிக்கச்செய்துவிட்டு, தானே ப்ரதான பாகமேந்தி நடித்தாள்? சே! சே! அது மிகவும் அனியாயம்......நயவஞ்சகக்காரியான அவளுடைய எண்ணம் தெரியாது அவளுக்கு அடிமைபோல் வேறு உழைத்துவந்தாயா! பாவம், அத்தனை அன்பாக அவளிடம் பழகினுயே! அவள் உனக்கு ஏதாவது நன்மை செய்தாளா? ஏம்மா! உண்மையாகவே அவளுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதா? அன்றி சும்மா வேஷம் போட்டுக் கம்பெனியை த்ரோகம் செய்தாளா! உனக்கு ஏதாவது தெரிந்தால் சொல்லு. அவளிருந்த ஸ்தானத்தில் நான் உன்னை நியமித்து அவள் வயிறெரியச் செய்துவிடுகிறேன். அவள் அந்தரங்கமாக உன்னிடம் எப்போதாவது ஏதாவிஷயமாயினும் சொல்லியிருக்கிறாளா?" என்று வெகு தந்திரமாய்க் கேட்டார்.

எப்படியாவது தனக்கு ஒரு முக்ய பாகத்தைக் கொடுத்து நடிக்கச்செய்தால் போதும் என்கிற ஒரே பேராசையுடனிருந்த வள்ளிக்கும், தன்னை அம்ஸாதேவி மோசம்செய்துவிட்டது மிகவும் விசனமாயும் ஏமாற்றமாயுமிருந்ததால் இப்போது அவர்கள் கேட்டவுடனே முடுக்கிவிட்ட மெஷின்போல் ஆரம்பித்தாள்.

"ஸார்! எனக்கு எப்படியும் ப்ரதானநடிகை வேஷந்தருவதாக ஏமாற்றிக்கொண்டே வந்தாள். அன்றொரு நாள் கோயிலுக்குப் போனதிலிருந்து அவளுக்கு ஏதோ திடீரென்று மாறுதல் உண்டாகிவிட்டது. தனக்கு ஏதோ சொப்பனமாயிற்று என்றும் முதல் நாள் சென்ற கோயிலில் ஒரு குருட்டுப் பிச்சைக்காரனைக்கண்டு 100 ரூபாய் பணம் வேஷ்டி முதலியன கொடுத்துவரும்படியாகச் சொல்லியனுப்பினள். நான் போய்ப் பார்த்தேன். அந்த குருட்டுப் பிச்சைக்காரனையே காணவில்லை. முதல் நாள் இத்தம்மாள் கோயிலில் அந்த பிச்சைக்காரனுக்கு 5 ரூபாய் கொடுத்தார்களாம். அதை அவன் உடனே கிழித்து சுக்கல்சுக்கலாக வீசி எறிந்தானும். இதில் என்ன அந்தரங்க ரகஸியமிருக்கிறதோ அதை நான் அறியமாட்டேன். அன்று முதல்தான் அவர்களுக்கு மனக்கலக்கம் உண்டாயிற்று. கொஞ்ச நாளாகவே முதலாளி ஐயாவுக்கும் அம்மாளுக்கு ஏதோ சரிப்படவில்லை இந்த சம்பவத்தை முன்வைத்து அம்மா

வுக்குப் பிசாசு பிடித்திருப்பதாயும், பயித்தியம் பிடித்திருப்பதாயும் கூறி அவரே வேண்டுமென்று தடபுடல் செய்துவிட்டார். அதனுல் தான் அம்மாவுக்கு அசாத்ய ஆத்திரம் வந்துவிட்டது. அன்று அத்தகைய ரகளை நடந்தது. இதுவரையில் எனக்குத் தெரிந்தது சகலமும் உண்மை. முதலாளியும் டைரெக்டர் ஐயாவும் சேர்ந்து ஒரு மந்திரவாதியையும் டாக்டரையும் கூட்டிக்கொண்டு வந்து என்னமோ செய்தார்கள். பிசாசு பைத்தியம் என்று வீணுகத்தான் சொன்னுர்களேயன்றி உண்மையில் ஒன்றுமே இல்லை. அதையோர் சாக்காக வைத்துக்கொண்டு அம்ஸாதேவியின் சகலமான நகைகள், உடைகள் முதலிய எல்லாவற்றையும் முதலாளி எடுத்துச்சென்று விட்டதனுல்தான் அவளுக்கு இத்தனை கோபம் வந்துவிட்டது...

என்று இவள் சொல்வதைக் கேட்கக் கேட்க உண்மையில் முதலாளிகளில் ஒருவன் தங்களுக்கு த்ரோகம் செய்து கம்பெனிக்கு நஷ்டத்தை உண்டாக்கித் தான்மட்டும் லாபத்தை யடையவேண்டும் என்று சுயநலத்துடன் செய்திருக்கும் சதியாலோசனைதான் இது என்று நன்ருகத் தெரிந்துவிட்டதும், இவர்களுக்குள்ளே பெருத்த குழப்பமும் கலவரமும் உண்டாகிவிட்டன.

அம்ஸாதேவியின் விஷயம் ஏதாவது ரகஸியமாகத் தெரியுமோ என்று தந்திரமாக அழைத்துக்கேட்டதில் மிக முக்யமான விஷயங்கள் வெளியானதைக் கண்டு ஒருபக்கம் சந்தோஷப்பட்டார்கள். மூளை கலங்கியுள்ள மீனிதனின் கூட்டுறவால் இனி என்னசெய்வது?....இவன் செய்த சதிக்குத் தக்கபடிதான் அவள் வெஞ்சம் தீர்த்திருக்கிருளேயன்றி வெறுமை செய்யவில்லை என்ற வதேதோ சந்தேகங்கள் உண்டானதால் எல்லோருடைய முகமும் மாறுபட்டது.

---

## 19

எந்த விஷயத்தையும் தத்ரூபமாக நடித்து மனிதர்களின் மனத்தில் பதியச்செய்யும் அபூர்வ சக்தி வாய்ந்த ஸுசீலா தற்சமயம் இதயபூர்வமான நம்பிக்கையுடன் உண்மையாகச் சொல்லிய வார்த்தைகளைக் கேட்ட அங்கிருந்தவர்களுக்குச் சகலமும் உண்மை என்று இவளிடத்தில் ஒரு அனுதாபமும் உண்டானது. ஸுசீலாவை அணைத்து உட்காரச் செய்தார்கள்.

இவ் வுத்தமிகளின் ஸ்பர்சம் பட்டவுடனே பாபசரீரத்தில் ஒரு கூச்சமும் தன்னை யறியாத நடுக்கலும் உண்டாகியது. இவளை பரிசுத்தமாக ஸ்நானம் செய்யச்செய்து வயிருர ஆகாரத்தைக் கொடுத்தார்கள். இவளுடைய ஜென்மாவில் இம்மாதிரியான சுத்தமான சாப்பாட்டைக் கண்டதே இல்லை. ஸ்டுடியோவைவிட்டு வந்த நாள்முதல் சரியான சாப்பாட்டைக் கண்ணுல் பார்த்ததே இல்லை. ஆகையால் பசியினுடைய கொடுமையினுல் வெட்கத்தைக் கூட மறந்து சாப்பிட்டாள். உண்ட களைப்பு தோண்டைமானுக்கும்



உண்டு என்றபடி, சாப்பிட்டவுடனே உடம்பு தெரியாது களைத்துப் போய் படுத்துவிட்டாள்.

உண்மையறிந்தால் இத்தனை தடபுடலான மதிப்புடன் உபசரிப்பும் அன்பு காட்டலும் நடந்திருக்குமோ! களைப்பினால் அயர்ந்து தூங்கும் சுசிலாவை உற்று உற்றுப் பார்த்தார்கள். இவள் சொல்வது உண்மையாக இருக்குமா என்கிற சந்தேகம் எதனாலோ மற்ற இருவருக்கும் உண்டாகியது. "நல்ல அழகி, முகத்திலுள்ள களையோ அபாரமாயிருக்கிறது; ஆனால், கண்களின் பார்வையில் பரிசுத்தம் காணப்படவில்லையே! களங்கத்தின் ரேகை சிறிது காணப்

படுவதால் எனக்கு ஏதோ சந்தேகமாயிருக்கிறதே!"...என்றாள் ஒருத்தி.

நன்றாக உடம்பு தெரியாது தூங்கும் ஸுசீலா தன்னை மறந்து "தாயே!...லோகமாதா! என்னுடைய பாபஜன்மத்திற்குப் பரிகாரம் உண்டாகுமா?...இந்த பவித்திரமான இடத்தில் என் சண்டாள ஜென்மத்தை நிலைக்கச் செய்வாயா?"...என்று வாய்ப் பிதற்றினாள். இந்த வார்த்தைகள் முன் குறித்த இருவருடைய சந்தேகத்தைப் பின்னும் கிளறிவிட்டன. எனினும் தூங்குகிறவளை எழுப்பாமல் தம்தம் வேலைக்குச் சென்றார்கள்.

சுமார் இரண்டு மூன்று மணி நேரங்கழித்து சுசீலா தூங்கி எழுந்து திடுக்கிட்டாள். "இத்தனை நேரமா நான் இப்படி அயர்ந்து மவுட்டீகத்தனமாகத் தூங்கிவிட்டேன்? ஐயோ! கூட இருந்தவர்கள் என்ன நினைப்பார்கள்? ஏற்கெனவே பொய்யைச்சொல்லி என் கேடுகெட்ட நிலைமையை மறைத்துப்பேசி ஏமாற்றி இருக்கிறேனே! அதற்கு நேர் விரோதமாக இப்படித் தூங்கிவிட்டதில் ஏதாவது உளறியிருப்பேனோ?" என்ற ஒரு பயமும் உண்டாகியது.

இதற்குள் பெரிய மணியடிக்கும் ஓசை கேட்டது. முன்பின்னறியாத இவளுக்கு எதற்காக அடிக்கிறது என்பது புரியாததால் நாற்புறமும் சுற்று முற்றும் பார்த்தாள். மாலை நேரத்தின் மனோஹரமான காட்சி இவள் இதயத்திற்கு ஓர் ஆறுதலளித்து இன்புறச் செய்வதுபோல் தோன்றியது.

சினிமாவில் ஏதாவதொரு கோயில்காட்சி, மடத்துக் காட்சி முதலியவைகளை எடுக்கும்போது வேண்டுமென்று தயாரிக்கப்பட்ட காட்சிகளும் மணியின் ஓசையும் திருவிளக்குகளின் திவ்ய ஜோதியின் அழகும் இதயத்திற்கு இன்பமளிக்காது, 'காட்சி ஜோடனைகள் சரியாக இருக்கிறதா, இன்னும் ஏதாவது குறைவுகள் உண்டா? இக்காட்சிக்கு ஏற்றவாறு முகபாவத்துடன் நடிக்கிறோமா?'...என்ற எண்ணத்துடன் அதே கண்களால் அதைப்பார்த்தாளேயன்றி, உண்மையான சொரூபத்துடன் ஈடுபட்டுப் பார்க்கவில்லை. இன்று மணியின் ஓசையும், கலகலவென்று பசுமாடுகளின் கழுத்துமணி ஓசையும், சாம்பிராணி வத்திகளின் வாஸனையும், கோமாதாவைப்பற்றிய பூஜாகானத்தின் பேரொலியும் ஒன்று கூடி கரையாத மனத்தையுங் கரைத்துக் குவியாத கரத்தையும் குவித்து வணங்காத சிரத்தையும் வணங்கும்படியாகச் செய்துவிட்டன.

ஓசைவரும் திக்கை நோக்கி வேகமாக நடந்தாள். என்ன ஆனந்தம்! என்ன அத்புதக் காட்சி! சுமார் 100 பசுமாடுகளுக்கு மேலாக சரியான கறவைப் பசுக்களும் கன்றுக்குட்டிகளும் ஒரே மைதானத்தில் கூட்டமாக நிற்கின்றன. அதன் மத்தியில் ஸ்ரீக்ருஷ்ணன் கோவர்த்தன கிரியை எடுத்துக் கோக்களைக் காத்த தத்ரூப தரிசனத்தை சலவைக்கல் சிலையினால் செய்துவைத்து புஷ்பமாலைகளால் அலங்கரித்துச் சுற்றிலும் தீபாலங்காரம் செய்திருக்கிறதையும், பெண்களும் ஆண்களும் தனித்தனியே நின்று பாடுவதையும் கண்ட சுசீலாவின் உள்ளத்தில் எங்குமில்லாத ஆனந்தவெள்ளம்

பொங்கிவழிந்தது. கண்களில் தடைகட்டமுடியாத ஆனந்த பாஷ்பம் அருவிபோல் பாய்ந்தது. கைகளைக் குவித்தவாறு அப்படியே மெய்மறந்து நின்றாள்.

அவளுடைய ஜென்மாவில் இந்த நிமிடம் அனுபவிக்கும் தூய்மையான இன்பத்தைப்போல் இதுவரையில் அனுபவித்ததே இல்லை. "ஆகா! உண்மையான தேவாமிருதம் கண்முன்னே சிதறிக் கிடப்பதையறியாது விஷத்தை அமுதமென எண்ணி என் ஜென்மத்தையே வீணாக்கிக்கொண்டேனே! என்னையே தீயில் ஸ்புடம் வைத்தால்கூட நான் செய்துள்ள பாதகமும், சண்டாளத்தனமும் என் மாத்ரு பித்ரு த்ரோகமும், கற்பழிந்த கொடிய களங்கமும் மறையுமா? ஒருநாளும் மறையாது மறையாது" என்று தனக்குள் இதயம் வெடிக்கும் உணர்ச்சியுடன் எண்ணி விம்மினள். 'பேரானந்தம் ப்ரம்மானந்தம்' என்றெல்லாம் உச்சரிக்கும் பதங்களின் உண்மை உணர்ச்சி இப்போதல்லவா தெரிகிறது! என்னப்பனே! ஸ்ரீ க்ருஷ்ணா! இந்த நிமிடமே என்னுள்ளத்தில் உதயமாயிருக்கும் இந்த உத்க்ருஷ்டமான எண்ணம் இனி மறையாமல், அநித்யமான மாயையில் மீண்டும் சென்று உழலாமல் இத்துடன் நிலைநிறுத்திக் காப்பாற்று...காப்பாற்று" என்று உண்மையான இதயத்துடிப்புடன் எண்ணிக் குமுறியவாறு இந்த பசுக்களின் பூஜையை வெகு இன்பத்துடன் பார்த்து மகிழ்ந்தாள்.

கற்பூர ஆரத்தி செய்து புஷ்பங்களால் அர்ச்சனை பண்ணி நைவேத்யம் செய்தபின் அத்தனை பசுக்களையும் சேர்த்து ப்ரதக்ஷண நமஸ்காரம் செய்தபிறகு கூட்டம் கலைந்து, உள்ளே சென்று பூஜா மண்டபத்தில் ப்ரார்த்தனை நடத்தவாரம்பித்தார்கள்.

வெளியில் தோட்டத்தில் நடந்த கோபூஜையைப் பார்த்துப் பரவசமுற்ற சுசீலாவுக்கு அந்தப் புனிதமான மடத்திற்குள் கால் வைப்பதற்கும் உடல் நடுங்கியது. "ஏ பாவி! பதிதை! அந்த புனித ஆலயத்திற்குள் போகாதே; காலை வைக்காதே. பவித்ரமான இடத்தை அபவித்திரமாகச் செய்துவிடாதே." என்று மனச்சாட்சி ஏதோ ஒன்று குத்திக்காட்டி சித்திரவதை செய்தது. உள்ளே போகவேண்டும் என்று ஆசையொருபுறம் அழைக்கிறது. அதை எதிர்த்து த்வம்ஸம்செய்து ஏசிப் பேசிப் போராடுகிறது மனம். இந்த தர்மசங்கடமான நிலைமையில் தத்தளித்தவாறு வெளிப்புறமே நின்றுவிட்டாள்.

"தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே, சமவேதா யுயுத்ஸவ:
மாமகா: பாண்டவாச்சைவ கிமகுர்வத ஸஞ்சய!"

என்ற கீதா ச்லோகத்தின் ஆரம்பம் கணீரென்று காதில் கேட்டதும் ஏற்கெனவே புதிய ஆனந்த உணர்ச்சியினால் நிரம்பிக் கொந்தளிக்கும் உள்ளத்திற்குப் பின்னும் தன்னையறியாத பேரானந்தம் உண்டாகியது.

நந்தனார் சரிதத்தைப் படமெடுத்தபோது,தான் கோயில் தேவதாசியாக ஆடிப்பாடி நடித்ததும், நந்தனார் விலகி விலகி தூரநின்று பக்தி

யுடன், வீதியில் நடந்த தில்லையம்பலத்தரசனான சிவபிரானின் திவ்யசரிதைக் காலக்ஷேபத்தைக் கேட்டதும் இவள் மனத்தில் காலக் கண்ணாடியில் காட்சியளித்தது. "ஆகா! அந்த மகானுபாவன் ஜாதியில் நீசகுலத்தில் பிறந்த ஒருதோஷத்தைத்தவிர மகாபவித்ரமான பிறவி எடுத்தவனாயிற்றே. நானோ?...குலத்ரோகி! உயர்ந்த குலத்தில் பிறந்தும் கேவலத்திலும் கேவலமான நீசக் குப்பைக்கும் உதவாத பாவியாகவன்றோ ஆய்விட்டேன்? அந்த சிவபக்தனுக்கும் இந்த உதவாக்கரை த்ரோகிக்கும் மனத்தினால் நினைப்பதுகூட பாதகமாயிற்றே...ஆகா! லோபி என்ற படத்தில் நான் எந்த பாகத்தை ஏந்தி நடித்து வீதியில் பிடித்துத் தள்ளப்பட்டேனோ அதுவே என் வாழ்க்கையின் பலிதமாக ஆய்விட்டது. அடாடா! காலக் கண்ணாடியில் எத்தனை விசித்திரங்களைத்தான் எனக்குக் காட்டி என்னைத் திகைக்க வைப்பாய்? 'கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல்' என்று சொல்லும் உண்மையை என் வாழ்வில் பலதரம் ப்ரத்யக்ஷமாகப் பார்த்தாகிவிட்டது. இனியாவது இந்த வைராக்ய புத்தி நிலைத்துநின்று மிச்சமுள்ள காலத்தையாவது நெறியான முறையில் கழிக்க அருள் புரிவாயா?" என்று தனக்குள் தான் எண்ணி மிக்க விசனமும், வெட்கமும் அடைந்தாள்.

உள்ளத்தில் பரிசுத்தமான எண்ணமும் த்யாக நினைவும் உண்டாகும்போதுதான் அதன் ருசியும் இனிமையும் நன்றாக மனத்தில் பட்டு வேலைசெய்கிறது. கல்மஷமும் அழுக்காறு பிடித்த எண்ணமும் இதயத்தில் நிறைந்திருக்கையில் இத்தகைய தூய விஷயமெல்லாம் பரிகாஸமாயும் ஏகத்தாளியாயும் ஆகிவிடுகிறது. இதே ஸுசீலா ஹம்ஸாதேவியாயிருந்த காலத்தில் இதே விஷயங்களை நடித்தபொழுது நடிப்பிலும் ஏளனமாயும் சிரிப்பாயும் அலக்ஷியமாயும் தோன்றியது. அதே விஷயம் இன்று வெகு வெகு அத்புதமான உணர்ச்சியுடன் பரிசுத்தமாயும் பேரானந்தமாயும் தோன்றுகிறது. இதுதான் மக்களின் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் அவ்வப்போது காலக் கண்ணாடியில் பார்க்கும் ப்ரத்யக்ஷ உண்மையாகும். இவைகளை எல்லாம் மாறிமாறி எண்ணியபடியே ஒரு சிலைபோல் அசைவற்று நின்றுவிட்டாள். உள்ளிருந்து வரும் கீதா ச்லோகத்தின் இனிமையான சப்தம் அவள் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து மயிர்க்கூச்செறியச் செய்தது.

## 20

ப்ரதிதினமும் போதஜனங்கள் இந்த மடத்தில் ப்ரார்த்தனைக்கும் உபன்யாஸத்திற்கும் வந்து கலந்துகொண்டு போவார்கள். அதுபோல் மாலை கீதா பாராயணம் ஆரம்பித்தவுடனே கூட்டங்கூட்டமாக ஜனங்கள் வரத்தொடங்கினார்கள். தன்னை மறந்த பேரானந்த நிலையிலிருக்கும் ஸுசீலா ஒன்றையும் கவனிக்காது, வெகுவெகு அத்புதமான இனிய சப்தத்துடன் வரும் கீதா ச்லோகத்தையே கேட்டுக்கொண்டு நின்றிருந்தாள்.

உள்ளேபோகும் மனிதர்கள் சிலர் வெகு ஆர்வத்துடன் ப்ரார்த்தனையில் கலந்துகொள்வதற்காகவே சென்றுர்கள். சிலரோ, ஏதோ பொழுதுபோக்கிற்குச் செல்வதாக சாதாரண உணர்ச்சியுடன் சுற்றுப்புறங்களின் காட்சியில் மனமும் கண்ணும் எண்ணமும் சிதறியவாறு சென்றுர்கள். பின்னும் சிலருக்கோ வேண்டுமென்று வேடிக்கை பார்க்கும் எண்ணத்துடனேயே விஷமக்கண்களுடனும் திருட்டுப்பார்வையுடனும்வரும்வழக்கமே தொழிலாகிவிட்டது.இந்த செய்கை எப்படி இருக்கிறது என்றுல்,மிகச்சிறந்த தாமரை,நீலோத்பலம், செங்கழுநீர், குமுதம் முதலிய புஷ்பங்களுடன் ஒன்றிற்கும் உதவாத புல்லு, பூண்டு, விஷப்பூண்டுகள் முளைத்து அந்த உத்க்ருஷ்டமானபுஷ்பங்களுடன் காட்சிஅளிப்பதுபோல் இந்த பவித்திரமான ஆத்மசுத்திபெற்ற த்யாகிகளின் ப்ரார்த்தனைக் கூட்டத்தின் மத்தியில் இப்பாவிகளின் தோற்றம் காட்சியளிக்கின்றது.

தன்னை மறந்து வடநாட்டு உடையிலேயே நிற்கும் ஸுசீலாவை அங்கு செல்லும் இரண்டுபேர்கள் பார்த்ததும் மற்றவர்களைப் போல் நேரே உள்ளே செல்லாமல் இவளையே கூர்ந்து கவனித்து ஆங்கில பாஷையில் "டேய்...இந்த பிம்பத்தை உற்றுக் கவனி... சினிமாக்காரி அம்ஸாதேவிபோல் சாயலிருக்கிறது; நன்றுகப்பாரு" என்று குசுமுசு வென்று சொன்னுன்.

இதைக் கேட்ட மற்றவன் "அவளாகவே இருக்குமோ... நில்லு, போகாதே...நம் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்டு போகலாம்" என்று கூறினுன்.

தன்னெதிரில் இருவர் நின்று ஏதோ பேசுவதைத் தற்செயலாக அறிந்த ஸுசீலா திடுக்கிட்டு முக்காட்டை இழுத்து மூடிக்கொண்டு தனது தொழிலை உடனே ஆரம்பித்து..."ஏ பகவான்! என்னுடைய மகனுக்கு உடம்பு ஒன்றுமில்லாது நீதான் காப்பாற்ற வேண்டும். என் வயிற்றில் பாலை வார்க்கவேண்டும். என் கணவன் ஊமை என்றதையும் பாராது, நான் என் பெற்றுேரின் ஏழ்மை நிலையை எண்ணி, மணந்துகொண்டு உன் பாதசாட்சியாக வாழும் ஏழையைக் காப்பாற்றுங்கள். அந்தக் குழந்தையினுல் என் மனக்குறையைத் தீர்த்துக் காப்பாற்று" என்று தன் குரலையும் மாற்றிக்கொண்டு ப்ரார்த்தனை செய்வதுபோல் செய்துவிட்டு, கால்நொண்டி போல் நொண்டி நடந்து அந்த இடத்தைவிட்டு சற்று ஒதுக்குப்புறமாகச் சென்றுள்.

எத்தனைதான் சாமர்த்தியமாக நடித்துவிட்டபோதிலும், உடம்பு பூராவும் வெயர்வையால் நனைந்து நடுங்குகிறது. 'என் வாழ்நாள் கெட்டதுபோக மிச்சமுள்ளதையாவது இனி சிறப்புறநடத்துவதற்கு இப்போதுதான் சற்று வழிகாட்டுவாய்போல் தோன்றுகிறது. இதற்குள் இதை அழித்து என்னைக்காட்டிக்கொடுத்து மீளா நரகத்தில் இப்போதே தள்ளிவிடுவாய்போலிருக்கிறதே. இவர்கள் யாரோ சோதாக்கள் என்னைக் கண்டுபிடித்துக்கொடுத்துத் தாம் பணம் பறிக்கவே இம்மாதிரி தேடியலைகிறுர்களா!"என்கிற சந்தேகம்

வேறு உண்டாகிவிட்டதால் மேல்குறித்தவாறு ப்ரார்த்தனையைச் செய்துவிட்டு நடக்கவாரம்பித்தாள்.

அந்த சோதாக்கள் இவளுடைய ப்ரார்த்தனையை இந்தி பாஷையில் கேட்டும் தியங்கவில்லை. "இவள் அம்ஸாதோஷியாகத் தானிருக்கவேண்டும். இதுவும் ஒரு வேஷமோ, என்னவோ? எதற்கும் நாம் உடனே அந்த சினிமா கம்பெனிக்குத் தந்தியடித்து அவர்களை இந்த மடத்திற்கு வரும்படியாகச் செய்துவிடவேண்டும். அதுவரையில் நாம் இங்கேயே ரோந்து காத்திருந்து இவளை ஓடி விடாமல் பார்க்கவேண்டும்.........கோபூஜையின்போதே இவளை நன்றாகப் பார்த்துக்கொண்டேன். ஆகையால், இந்த சந்தேகம் நிவர்த்தியாகும்வரையில் நாம் இந்த இடத்தைவிட்டுப் போகக் கூடாது" என்று பேசிக்கொண்டார்கள்.

இதற்குள் நொண்டிநொண்டி நடந்து செல்லும் சுசீலாவின் பாடு திடுகிடாய்த்துத் திணறுகிறது. தான் வெளியில் போனால் தன்னைத் தொடர்ந்து இவர்கள் வந்துவிட்டால் என்ன செய்வது? ...இப்போது எங்கே எப்படி மறைந்து தப்புவது என்று பார்த்தாள். சடக்கென்று இருட்டாக உள்ள இடத்தில் மாட்டுக்கொட்டையில் புகுந்து ஓரமாக ஒட்டிக்கொண்டு உட்கார்ந்தாள். மாடுகள் முட்டி விடுயே என்கிற பயங்கூடத் தெரியவில்லை. இந்த அல்பர்களிட மிருந்து தப்பித்துக்கொண்டால்போதும் என்று எண்ணினாள்.

பரிசுத்தமான நிலைமையில் நிர்ப்பயமான மனத்துடன் கீதா பாராயணத்தை நிம்மதியாகக் கேட்டுக்கொண்டிருந்த தருணம் தெளிந்த குளத்தில் எருமை மாடுகள் இறங்கிக் கலக்கிக் குழப்பி விடுவதுபோல் இச் சம்பவத்தினால் மனத்தின் நிர்மலம் மாறி திக்கு திக்கென்ற பயமும் பதற்றலும் ஒருமாதிரியான பீதியும் உண்டாகி விட்டதால், அதே கீதாபாராயணத்தின் இனிய நாதம் காதில் முன்போல் ஏறவே இல்லை. அந்த ஆனந்த உணர்ச்சி உண்டாகவு மில்லை. அத்தனைக்கத்தனை பயந்தான் தலைதூக்கி நின்றது. எங்கே அந்த சோதாக்கள் இங்கும் வந்துவிடுவார்களோ...என்ற ஒரே எண்ணத்துடன் நாலாபுறமும் பார்த்தபடியே இருட்டில் ஒட்டிக் கொண்டிருந்தாள்.

ப்ரார்த்தனையின் க்ரமங்கள் முடிந்ததும் ஒரு நிசப்தம் நிலவியது. ஆனால், வெறும் பேச்சுக்குரல்கள்மட்டும் கேட்டுக்கொண்டே இருந் தன. ஸுசீலாதான் எழுந்து வெளியேவரலாமா, வேண்டாமா...என்ற தீர்மானமே புரியாதிருந்தாள். நேரமோ ஏறிக்கொண்டுபோகிறது.

மடத்தின் ப்ரதான பெரிய ஸ்வாமிகள் ப்ரதிதினமும் இரவில் படுக்கைக்குப் போவதற்கு முன்பும் அதிகாலையில் எழுந்திருந்த உடனேயும் ஒவ்வொரு பசுமாட்டுக் கொட்டகையிலும் வந்து சகல மான பசுக்களையும் தடவிக்கொடுத்து வணங்கி வாலைத்தடவிக் கண் களில் ஒற்றிக்கொண்டுதான் செல்வது வழக்கம். அன்றும் மணி 10 அடித்ததும் கையில் ஒருசிறிய லாந்தர்விளக்குடன் ஒவ்வொரு கொட்டகையாய் வருகையில் அந்தக் கொட்டகைக்கு வந்தார்.

தூரவரும்போதே விளக்கின் வெளிச்சத்தைக் கண்டு ஸுசீலா நடுநடுங்கிப்போய் அந்த சோதாக்கள்தான் தேடிக்கொண்டு வந்து விட்டார்களோ என்று எண்ணித் திடுக்கிட்டு எழுந்து ஓடுவதற்கு எத்தனிக்கையில் மடத்து ஸ்வாமிகளே வருவதைக் கண்டதும் சில விநாடிகள் ஒன்றுமே தோன்றாத ப்ரமை பிடித்தவள்போல் நின்றாள்...தான் இங்கு பதுங்கியிருப்பதைப் பார்த்து அவர் என்ன நினைப்பாரோ என்று ஒருபுறம் சரீரமே கிடுகிடுடென்று நடுங்கி ஏதோ செய்கிறது. சொல்ல முடியாத அபாரமான சங்கடத்துடன் சுவருடன் சுவராக ஒட்டிக்கொண்டு தடுமாறி மூக்காடும் விலகிப் போய் நின்றாள்.

ஸ்வாமிகள் பசுக்களை எல்லாம் தடவிக்கொடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு கோடியில் வரும்போது இவள் நிற்பதைக்கண்டு திடுக்கிட்டு சிறிது நின்று பார்த்துப்பின் "நீ யாரம்மா! இந்த ராத்திரியில் இந்த கொட்டிலில் இருட்டில் தனிமையில் ஏன் இப்படி நிற்கிறாய்? வெளியே வா...உனக்கு என்ன வேண்டும் கேளு. பால் வேண்டுமா....அல்லது பசுமாடு வேண்டுமா? நீ இங்கு இந்நேரம் இப்படி நிற்பதை பார்த்தால் பாலை இச்சித்தோ, பசுமாட்டை அபேக்ஷித்தோ நீ ஏதோ தவறான எண்ணத்துடன் நிற்பதாகத் தெரிகிறது. அம்மணீ! அப்படி நீ நினைத்திருப்பதானால் அந்த எண்ணத்தை அடியோடு விட்டுவிடு. தாராளமாய் பகிரங்கமாய் ராஜபாட்டையில் உன் அபிலாஷையைக் கூறிப் பெற்றுக்கொள் ளம்மா!......ஆசை என்கிற நெருப்புப்பொறிதான் மனித வாழ்க்கையை எரித்துவிடுகிறது. ஒரு பொறிக்கு இடங்கொடுத்தால் அது ஓராயிரம் ஆசைப்பொறிகளைக் கிளறிவிட்டு பெருந் தீயை மூட்டி மனித சமுதாயத்தையே நாசம் செய்துவிடும்" என்று ஸ்வாமி சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் இவள் உள்ளத்தில் அடிபாதாளம் வரையில் பாய்ந்து துளாவி வதைக்கிறது. இந்த வார்த்தைகளின் உண்மையை நினைக்க நினைக்க அவள் இதயம் பிளந்துவிடும்போல் ஒரு அதிர்ச்சி உண்டாகியது. பாழாய்ப் போன சினிமாமோகமாகிய ஆசை என்னும் நெருப்பில் காலை வைத்ததன் பலனல்லவா இன்று என் வாழ்க்கை அடியோடு எரிந்து நாசமாகிவிட்டது. என் செய்கையை யறிந்தே சுட்டிக் காட்டுவது போலல்லவா இருக்கிறது?" என்று எண்ணியபடியே ஒரு க்ஷணம் சிந்தித்தாள்.

இதற்குள் ஸ்வாமிகள் விளக்கை வைத்துவிட்டு வெளியே தாண்டிச் சென்றார். ஏதோ ஒரு விதமான ஆவேசம் வந்தவளாய் "ஸ்வாமீ! ஸ்வாமீ! திருடவோ பாலைப் பருகவோ ஆசைப்பட்டு வரவில்லை. தயவுசெய்து ஒரு தனி இடத்திற்குச் சென்று என் முறையீட்டைக் கேட்கவேண்டும், நான் மகா பாவி....சண்டாளி, கொலைகாரி, பதிதை"...என்று மூச்சு விடாது ஆவேசத்துடன் கூறியதைக்கேட்ட ஸ்வாமி ஒரு தனி இடத்திற்கு அவளை அழைத்துச் சென்றார்.



தன்நிறை அழிந்த நிலையில் ஊசீலா ஸ்வாமிகளின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தப்பின், "ஸ்வாமீ! ஸ்வாமீ! இந்த பதிதையின் வேண்டுகோளுக்கு மனமிரங்கி விடையளித்து ரக்ஷிக்க வேண்டும். உலகத்தில் எத்தகைய கொலைப் பாதகங்களைச் செய்து விட்டாலும் அதற்கு தண்டனை விதித்துவிட்டால் அதோடு அவன் மன்னிக்கப்படுவதுபோல், மற்ற எந்த விதமான குற்றத்தையும் செய்தால் மன்னிப்பு உண்டா கிடையாதா ஸ்வாமீ! சொல்லுங்கள்" என்று பரிதாபமாய்ப் புலம்பிக்கொண்டே கேட்டாள்.

விவரம் புரியாத ஸ்வாமி ஆழ்ந்த யோசனை செய்தபடியே "அம்மணி! மன்னிப்பு என்கிற பதத்தின் உண்மை தத்துவத்தை முதலில் அறிந்துகொண்டுவிட்டால் பிறகு குற்றமே யாரும் புரிய

...ட்டார்கள். அதாவது மனிதன் செய்த குற்றத்தை மனிதனே பார்த்து தண்டிப்பதோ, மன்னிப்பதோ உலக மக்களுக்கு ஒரு பாடம் கற்பித்து அவர்கள் அக் குற்றத்தைச் செய்யாதிருப்பதற்காகக் கையாளும் முறையேயன்றி அது உண்மையில் செய்த பாவத்திற்குச் சரியான மன்னிப்பே யல்ல. எத்தகைய மனிதருக்கும் ஒரு சிறிய பாபமாயினும் சரி, பெரிய பாபமாயினும் சரி, ஜகத்ரட்சகனின் ஸன்னிதானத்தின்முன்பு அதற்குள்ள தண்டனைகளை அனுபவித்தே தீரவேண்டும் என்பதுதான் உண்மைத் தத்துவம். இகலோகத்தில் ஏதோ தண்டனை விதித்தாயிற்று, இதோடு செய்த பாவம் மறைந்துவிட்டது என்பதே கிடையாது.

உதாரணமாக, ஒரு மனிதனுக்கு கெட்ட ரோகம் ஏதாவது வந்தால், அந்த ரோகத்தின் நிலையறிந்து கடும்பத்தியமிருந்து கசப்பு மருந்துகளைச் சாப்பிடுவதால் அந்த கொடிய நோயிடமிருந்து தற்சமயம் தப்புகிறான். நோயே வராதவிதத்தில் முதலிலிருந்து ஆகார ஆசார நியமங்களில் பழகிக்கொண்டு கடைசிவரையில் நல்ல திடகாத்ர ஆரோக்யத்துடன் இருந்தால், அதுதான் பாவமே செய்யாத நல்ல தூயமார்க்கத்தில் வாழ்க்கை நடத்தும் உத்தமர்களின் செய்கையைப் போன்ற சீலமுள்ள சிறப்பான முறையாகும்....

முதலில் அலட்சியமாக இருந்து வ்யாதியை வரவிட்டு, பின் வளரவிட்டு, அதன் பின்னர் அதை ஒழிக்க அரும்பாடு பட்டாலும் வ்யாதியைத் தீரத் துலைத்து ஆரோக்யமாய் சுகமாய் வாழமுடியாது. அக்னிபகவான் ஆட்கொள்ளும்போதுதான் வ்யாதியும் கூட எரிந்துபோகும். அதுபோலத்தான் மற்ற விஷயமும்.'' என்று சொல்வதைக் கேட்டு,நடுங்கும் சரீரத்துடன் ஸுசீலா முன்னிலும் பதினாயிரம் மடங்கு ஆவேசத்துடன் தனது சரித்திரம் பூராவும் ஒரு அக்ஷரம்கூட விடாது சகலத்தையும் சொல்லிப் பின் ''ஸ்வாமீ! பயங்கரமான பலவித பாதகத்தைச் செய்துவிட்ட சண்டாளியாகிய என்னை இனிமேல் அந்த கொலைபாதகச் சினிமாக்காரர்கள் கையில் காட்டிக்கொடுக்கக்கூடாது. இந்த தோட்டத்தில் குப்பை வாரி சாணி தட்டியாவது நான் என் பாவப் பிறவியின் மிச்ச நாட்களைத் துலைக்கிறேன். இனிமேல் நான் ஆகாயவாணி, பூமாதேவி சாட்சியாக உலக இன்பம் எதிலும் கனவில் கூட நினைத்து உழலமாட்டேன். இதை நம்புங்கள், இது சத்யம்'' என்று கதறினாள்.

இந்த அதிஆச்சர்யமான வரலாற்றைக் கேட்ட ஸ்வாமிக்கு நம்பிக்கையே கொள்ளவில்லை. ''இவள் விபசாரியா! சினிமா நடிகையா! பெற்றோருக்கு த்ரோகம் செய்த பாதகியா! இந்த விஷயமே உண்மையாக இருக்குமா! இதுவும் ஒரு கட்டுக்கதையாக இருக்குமா!'' என்று ஒருவிதமான சந்தேகம் உண்டாகியதால் பதிலே சொல்லாமல் சில வினாடிகள் நின்றார்.

இந்த நீண்ட மவுனத்தின் நிலை பெரிய காளாக்னியால் ஸுசீலாவை எரித்துத் திடுக்கிட்டு அலறச்செய்தது. 'ஐயோ! என்

பதில் சொல்லவில்லையோ தெரியவில்லையே...ஸ்வாமீ! ஸ்வாமீ! இந்தப் பாவிக்குப் பதில் சொல்ல மனமிரங்கவில்லையா! எத்தனையோ மலைமலையான பாதகத்திற்கு மத்தியில் அகப்பட்டுத் திண்டாடும் இச் சண்டாளிக்கு, அலை கடலில் தத்தளிக்கும் ஆத்மாவுக்கு ஒரு மரக்கலம் கிடைத்ததுபோல், தங்களுடைய பாத கமலங்கள் கிடைத்துவிட்டன என்று சத்தியமாக நம்பி நான் எனது அவகேடான செய்கையை ஆதியோடந்தம் வெட்கம், மானம் முதலியவைகளை விட்டுச் சொல்லிவிட்டேன். பயித்தியக்காரத் தாயாரையும் அந்தகனான தந்தையையும் நான் கண்டு ஒரு முறையாவது தரிசித்து அவர்களுக்குப் பணிவிடை செய்து பின் என்னுயிரை நான் தற்கொலையால் போக்கிக்கொண்டாலும் பாதகமில்லை. என்னைச் சூழ்ந்துள்ள விபத்தைத் தாண்டி ஜெயிக்கப் புகலிடமளித்து ரக்ஷிக்க வேண்டும். புத்திகெட்டு வழி தவறிவிட்டதால் இப்படியே அதபாதாளத்தி லழுந்தாமல் மறுபடி புத்திவந்து நன்னெறியுடன் வாழ வழிகாட்ட வேண்டும். இச்சமயம் என்னைக் கைவிடக்கூடாது" என்று கண்ணீர் வழியக் கதறிக் கூறினாள்.

"பெண்ணே! நாளைக்காலை உனக்கு ஆண்டவன் பதிலளிக்கச் செய்வான்." என்று கூறியவாறு விருவிரென்று போய்விட்டார். இச்செய்கை ஸுசீலாவை அப்படியே அக்கினி குண்டத்தில் தூக்கி எறிவதுபோலிருந்தது.

## 21

சினிமாதியேட்டரின் வாசலில் அம்ஸாதேவியின் விதவிதமான உருவங்கள் கொண்ட விளம்பரப் பலகைகள் ஆகாயத்தை யளாவி நிற்பதைப் பார்த்துக்கொண்டே வந்த ஸுசீலாவின் தாயார் தீயை மிதித்தவள்போல் துள்ளியவாறு ப்ரமித்து நின்றாள். ஏற்கெனவே மூளை கலங்கிப் பயித்தியக்காரியாய் அலைகிறவளுக்கு தன் மகளின் உருவத்தை தற்செயலாகப் பார்த்ததும் பெற்ற பாசத்தின் வாத்ஸல்ய உணர்ச்சி பொங்கிவிட்டதால் "என் கண்மணி! என் ராஜாத்தி! ஸுசீலா...ஸுசீலா! என்னை விட்டுவிட்டு இத்தனை நாள் இங்கேயா நிற்கிறாய்?...ஐயையோ! என் கண்மணி ஸுசீலா ஒருத்தியா இத்தனை இடத்தில் ஒரே சமயத்தில் நிற்கிறாள்?" என்று கூவிக்கொண்டே தன் கைகளுக்கெட்டிய உருவப்பலகைகளைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டுக் கண்ணீர் வடிக்கிறாள்.

அடுத்த நிமிஷமே "ஐயயோ! பஞ்சுபோல் வளர்த்த என் செல்வக்கிளி கட்டைபோலாகிவிட்டாளே!...ஐயா...அம்மா...இதோ பாருங்கள். என் ஸுசீலா கட்டையாகிவிட்டாளா தொட்டுப் பாருங்கள்...வாருங்களேன்! ஐயோ! இதென்ன சிரிப்பு. இதென்ன கும்மாளம்...என் கண்மணியே! கற்பகமே...ஸுசீலா! ராஜாத்தியே! ...பஞ்சுபோல உன் உடம்பு, கட்டைபோல ஏன் ஆச்சு?...என்று பலாக்கணம் பாடும் ராகத்தில் பாடி யழுவதைக்கண்ட வேடிக்கை பார்க்கும் கூட்டங்கள் கடகடவென்று சிரித்தார்கள்.

"ஐயோ பாவம்! பயித்தியக்காரி. உம்...இவளுடைய மகள் ளோ என்னவோ அந்த அம்ஸாதேவி? பெற்றோரைக்கூட த்ரோகம் செய்துவிட்டு வந்த படுபாவி அந்த அம்ஸாதேவியாக இருக்கும். அதான் இவள் இப்படி மூளை கலங்கிக் கத்துகிறாளோ என்னவோ" என்று ஆளுக்கொருவராகத் தோன்றியவாறு சொல்லிக்கொண்டே சிலர் சென்றார்கள்.

பின்னும் சில வம்பர்கள் பயித்தியக்காரியின் வாயைக்கிளறி "இவள் உன் மகளா! சினிமாவில் சேர்ந்து ஆடுகிறாளா?...அம்ஸா தேவி என்பது அவள் பெயரா?" என்று கேட்டதுதான் தாமதம் பயித்தியக்காரி பெரிதாகக் கூச்சலிட்டு "சினிமாவா....ஐயயோ! பாழும் சினிமாவைக் கொளுத்திவிடுங்கள்; எரித்துவிடுங்கள். என் கண்மணியை சினிமா தூக்கிக்கொண்டு போய்விட்டது...என் ராஜாத்தி இல்லையே!"...என்று தேகங்குலுங்கக்குலுங்க அழுது துடிக்கும் காட்சி கல்நெஞ்சரையும் கரைந்துருகச் செய்தது.

முன்பொரு நாள் அம்ஸாதேவி நடிக்கையில் உண்மையான காட்சியை தத்ரூபமாக எடுப்பதற்காக நிஜமான பைத்தியங்களைச் சேர்த்து அழைத்துச் சென்றதாயும் அங்கு அம்ஸாதேவி தன் தாயின் நிலையைக்கண்டு கதிகலங்கி மூர்ச்சையாகிவிட்டதாயும் அந்த ஒரு சம்பவத்தினால் உண்டாகிய பூகம்பத்தின் நிகழ்ச்சிதான் அம்ஸாதேவியின் வாழ்க்கையையே மாற்றிவிட்ட விவரமும் நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

அன்று அங்கு ஏற்பட்ட அமளிதுமளியில் பயித்தியங்கள் ஓடிவிட்டார்கள். அவர்களுடன் இவளும் வெளியே சென்றவள் தெருத்தெருவாய் ஓடி அலைந்து இந்த சினிமா கொட்டகைக்கு வந்து தற்செயலாகப் பார்த்ததால் இம்மாதிரி கண்ணீர் விட்டுக் கலங்கியவாறு அசந்து நின்றுவிட்டாள். "ஸுசீலா....ஸுசீலா" என்று அவள் அழைக்கும் த்வனியைக் கேட்டு சிலர் கண்ணீர் விட்டுப் பரிதாபப்பட்டார்கள்.

நல்லதுவரினும் தீயதுவரினும் எப்போதும் ஒன்றன்பின் ஒன்றாக வருவது வழக்கம். அதேபோல் சினிமா விளம்பரப்படத்தைப் பார்த்து கலங்கிக் கண்ணீர் விடுகையில் அரையணாபுத்தகம் விற்கும் பையன் ஒருவன் பெரிய குரலில் "சினிமா நடிகையின் மறைவு, புத்தகம் அரையணா! அரையணா. அம்ஸாதேவி என்கிற சினிமா நடிகை முதலாளியையும் டைரெக்டரையும் படுகாயப்படுத்திவிட்டு ஓடிவிட்டாள். அந்த சரித்திரப்பாட்டு அரையணா"......என்று கத்தியவாறு பாடவும் தொடங்கிவிட்டான்.

பயித்தியத்தின்முன்பும் ஒரு பெருங் கூட்டம், பாடகனின் முன்பும் ஒரு பெருங் கூட்டம் கூடிவிட்டது. ஒரு காலத்தில் ஸுசீலாவுக்குப் பாட்டுக் கற்றுக் கொடுத்த பெரியவருடைய சம்ஸாரம் இந்த ஊருக்கு ஏதோ காரியமாக வந்திருந்தவள், வீதியில் செல்கையில் இந்த பெருங்கூட்டதைப் பார்த்துச் சற்று ஒதுங்கும்போது

பயித்தியக்காரி "ஸுசீலா! ஸுசீலா" என்று பெருங்குரல் பாய்ச்சி கதறும் குரல் கேட்டுத் திடுக்கிட்டாள்.

பாவி ஸுசீலாவின் பெயரைக் கேட்டாலே அந்தம்மாளுக்கு அசாத்யகோபமும் எரிச்சலும் உண்டாகும். தன் மகனுடைய வாழ்வையே இந்தப் பாவிதான் பாழாக்கிச் சிறைக்கும் அனுப்பித் தன்னை வயிறெரியச் செய்துவிட்டாள் என்று அந்தம்மாள் மனத்திற்குள் அடங்காத ஆத்திரம் கொண்டிருந்தாள். சுந்தரத்தினால் ஸுசீலாவின் வாழ்வு பாழாகியதா! ஸுசீலாவினால் சுந்தரத்தின் வாழ்வு பாழாகியதா அது யாருக்குத் தெரியும்? இருவருடைய வாழ்வையும் விதி என்கிற சத்ருதான் இழுத்துப் பாழாக்கிச் சின்னாபின்னமாகச் சிதறவடித்தது என்பதுதான் உண்மையாகும். இப்போது இந்த சந்தர்ப்பத்தையும் விதிதான் ஒன்று கூட்டி வைத்தது என்றால் மிகையாகாது.

இருவரும் தமது வயிற்றில் பிறந்த மகனையும், மகளையும் உயிருடனே பறிகொடுத்த பாவிகளாவார்கள். ஒருவரை யொருவர் பார்த்துப் பல வருஷங்களாகிவிட்டன. ஸுசீலாவின் பிரிவால் அவள் தாயும் தந்தையும் உயிருடனே சவம்போலாகிவிட்ட செய்தியும் இந்தம்மாளுக்குத் தெரியும். எத்தகைய மேன்மையான குடும்பத்தில் பிறந்து எத்தனை உயர்ந்த முறையில் வாழ்க்கை நடத்திய உத்தமி இன்று நடுத்தெருவில் பல போக்கிரிகளும், சோதாக்களும், சோம்பேறிகளும், வம்பர்களும் சுற்றிக்கொண்டு கைதட்டிச் சிரித்து வேடிக்கைபார்க்கும் விதியமைந்துவிட்டதைப் பார்த்த ஸாரதாம்பாளுக்கு எத்தனை ஆத்திரமும் வயிற்றெரிச்சலும் இருந்ததோ அத்தனைக்கும் மத்தியில் பச்சாத்தாபமும் பெண்களுக்குள்ள இயற்கையான கருணை நிறைந்த அன்பும் 'ஐயோ பாவம்! இவள்கதி இப்படியா ஆகிவிட்டது?' என்கிற பரிதாபமும் உண்டாக்கித் திக்குமுக்காடவைத்தது.

இந்தப் பயித்தியக்காரியைவிட என் நிலைமையே தேவலையே: விதியே! நீ இப்படியா பரிபவப்படுத்தி வேடிக்கைப் பார்க்கிறாய்? சரியான தண்டவாளத்தில் ரயில் செல்லாமல் பாதை தவறும்போது ரயிலிலுள்ள எத்தனை பேர்களுக்கு உயிர்ச்சேதம், பொருள் சேதம், அங்கஹீனம், அனர்த்தம் எல்லாம் உடனே விளைந்துவிடுவதுபோல் அந்தப் பாவிப்பெண் தன்னுடைய பெண்தர்மமாகிய தண்டவாளத்தின்மீது வாழ்க்கை என்கிற ரயிலைச்செலுத்தாமல் கோணவழியில் புகுந்துசென்றதின் வினைவல்லவா இந்தக் குடும்பமே நாசமாகி நரகக்குழிக்குச் சமமாகிவிட்டது. ஒரு த்ரோகியின் செய்கையால் எத்தனை பயங்கரம்? எத்தனை பாதகம்?" என்று தனக்குள் எண்ணி க்ஷணநேரம் தவித்தாள்.

சில சோதாப்பயல்கள் ஒரு கல்லை எடுத்து அந்தப் பயித்தியக்காரியின்மீது போட்டார்கள். அதையும் அவள் லக்ஷ்யம் செய்யாமல் புலம்புகையில், பாட்டுப்புத்தகம் விற்கும் பையனின் குரல் கேட்டதும், சடக்கென்று எழுந்து அங்கு ஓடி அந்தப் பையன் பாடுவதற்

சரியாக' 'என் கண்மணியே! ஸுசீலா...என் செல்வக்கிளியே சுசீலா!'' என்று கூடப் புலம்பவாரம்பித்ததைக் கேட்டுக் கொல் லென்று சிரித்தார்கள்.

இந்த கோரமான காட்சியைக்கண்ட ஸாரதாம்பாளின் உள் ளம் துடிதுடித்தது. தானும் அங்கு வேடிக்கை பார்ப்பதுபோல் நிற்க மனமின்றி அக்கூட்டத்தை மெல்லக் கலைத்துக்கொண்டு அந் தப் பயித்தியக்காரியின்முன்பு சென்று நின்று ''அம்மணீ! என்னைத் தெரிகிறதா?...நீங்கள் என்னோடு வாருங்கள். இதென்ன நடுத் தெருவில் கூத்து? வாருங்கள்'' என்று கையைப்பிடித்துத் தானே வலிய இழுத்தாள்.

தான் பார்த்துப் பழகிய முகமாகையால் அவளைப் பார்த்ததும் பெயர் சொல்லத் தெரியாமல்''நீ...நீ...ங்கள்''...என்று உளறினள். ...''ஆம் நான் உங்கள் சிநேகிதை சாரதாம்பாள்தான். வாருங்கள் ...சற்று விலகி நில்லுங்கள். ஐயோ பாவம்! காலக்கூத்தின் கொடுமையால் இந்தம்மாளின் கதி இப்படியாகியது. இதைக் கண்டு இப்படியா கூட்டம்போட்டுப் பரிகஸிப்பது? நம்முடைய கதி நாளை என்னவாகும் என்பதை நாமறிந்தோமா! இன்று பிறரை இகழ்ந்து ஏளனம் செய்யும் நம்மையெல்லாம் இறைவன் பார்த்துக் கொண்டுதானிருக்கிறன். நாம் மனிதர்களாகவிருந்தும் மனிதரை மனிதர் பார்த்துச் சிரிக்கிறோம், ஆனால், தெய்வம் நம்மைப் பார்த் துச் சிரிக்கும் என்பதை மறக்கக்கூடாது. உலகமெலாம் ஒரு குடையின்கீழ்தான் நிற்கிறது. அக்குடையை சர்வ வியாபியான பரந்தாமன்தான் பிடிக்கிறன். அவன் கண்களை நம்மால் மூடிவிட முடியாது. பாழும் சினிமாக்கம்பெனி தோன்றியதன் பலன் இந்த கதியில் விட்டது. இன்னும் எத்தனைக் குடும்பங்களில் எத்தனை பெற்றோர்கள் இம்மாதிரி கதறிக் கண்ணீர் வடிக்கிறார்களோ யார் கண்டது?

மக்களின் அறியாமையை ஒழித்து அறிவை வளர்ப்பதற்காக உண்டாகும் உத்தமக் கலையை சில பாவிகள், அறிவையே ஒழித்து அதபாதாளத்தில் தள்ளி நாசமாக்கிவிடும்படியாக நடப்பதால் கலைக்கே ஆபத்தும் அவதூறான பெயரும் அலறிப்புடைக்கும்படி யான பயமும் உண்டாகிவிடுகிறது. தேவருக்கே அடிமை செய்வ தற்காக ஆதியில் மிகப் புனிதமான யோகினிகளைக்கொண்டு ஆரம் பித்த ஒரு வகுப்பினர் இன்று எத்தனை கேவலமாக மதிக்கும்படி யும், பேசும்படியும், தேவடியாள் என்கிற பெயரைச் சொல்லித் திட்டுவதற்கு உபயோகமாகும் வகையில் கொண்டுவந்து விட்டது விதி.

அதுபோலத்தான் சிறந்த கலை கலை என்று பெயரை வைத்து இக் கலையினல் உலகத்தையே உத்தாரணம் செய்துவிடலாம். உலக மக்களின் வாழ்க்கையையே, லக்ஷ்யத்தையே சீர்திருத்தியமைத்துப் புனித வாழ்வும் அமர வாழ்வும் பெற்று வாழும்படிச் செய்துவிட லாம். உதாரணப் பெண்களாகவும் புருஷர்களாகவும் பிறர் போற்றி

நடக்கச் செய்துவிடலாம்...என்றெல்லாம் பறைசாற்றி ஆரம்பி
இன்று நம் கண்ணால் காண்பது என்ன? காலக் கண்ணாடியால்
நாம் காணும் விசித்திரங்கள் விபரீதங்கள் படுதோல்வியின் பயங்கர
உறுமல்கள் எத்தனை? சற்று யோசித்து நன்றாகச் சிந்தித்துப்
பாருங்கள். இந்தம்மாளுக்குப் பயித்தியம் பிடிப்பதற்கும் இவர்
களின் புருஷனுக்குக் கண்ணவிந்து கபோதியாய்ப் பிச்சைக்காரர்
களுடன் திரிவதற்கும் காரணகர்த்தாவான பிசாசு சினிமா என்
கிற பாதகமேயாகும். என் வயிறு பற்றி எரிகிறது. சிரிக்கிறீர்
களே சிரிப்பு?" என்று உள்ளத்தில் துடிதுடிக்கும் ஆத்திரத்தைக்
கொட்டி வயிறெரியக் கூறியவாறே இந்தப் பயித்தியக்காரியைக்
கட்டாயமாகக் கட்டிப்பிடித்து ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு
சென்றுவிட்டாள்.

இதைப்பார்த்தும் கேட்டும் நிற்கும் ஜனங்களில் ஆச்சரி
யத்தால் சிலர் ப்ரமித்தார்கள். சிலர் கேலியாகச் சிரித்தார்கள்.
சிலர் இவ்விஷயத்தை மிகமிக உண்மையானது என்று முழுமனத்
துடன் ஆதரித்துப் பேசினார்கள். உலகம் பலவிதமல்லவா! அதை
அடக்கியாளும் சக்தி கடவுளின் கையிலிருக்கிறதேயன்றி மனிதர்
களின் கையில் ஏது?

---

## சிறந்த கைங்கர்யம்

உத்தம த்யாகமூர்த்தியான மகாத்மாஜீயின் ஜீவிய சரித்திரத்தை
ஆதியோடந்தம் விடாமல் ஹரிகதா ரூபத்தில் கவியோகி ஸ்ரீ சுத்தானந்த
பாரதியார் அவர்கள் எழுதிக்கொடுத்ததை மோகினி காரியாலயத்தார் அச்
சடித்துப் புத்தக ரூபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். சுமார் 350 பக்கங்
களுக்கு மேலுள்ள இப் புத்தகத்தின் விலை. ரூ. 3—8—0 (மூன்று ரூபாய்
எட்டணா) ஆகும்.

இந்த சிறந்த புத்தகத்தை ஸ்ரீ யோகியார் மகாத்மாஜி ஸேவா
சங்கத்தின் இலவசச் சம்பள நிதிக்காகவே எழுதி உதவியிருக்கிறார்.
மகனீயர்கள் இப் புத்தகத்தை வாங்குவதால் ஒரு மகானின் சரிதையை
நாம் என்றும் ஆதரிக்கும் முறையில் பாராயணம் செய்வதுபோல்
வைத்துக்கொள்வதுடன், மகாத்மாஜீ ஸேவா சங்கத்தின்மூலம் பல ஏழை
மக்களுக்கு பேருபகாரம் செய்யும் சிறந்த கைங்கர்ய பலன் உண்டாகும்.
மோகினி வாசக மகனீயர்களும் இதரர்களும் இந்தத் திருப்பணிக்குத்
தம்து பரிபூரண ஆதரவளித்து என்றும் அழியாத உபகாரத்தைச் செய்ய
வேண்டுமாய் சங்கத்தின் ஊழியர்களான நாங்கள் தாழ்மையுடன் கேட்டுக்
கொள்கிறோம்.

இப்புத்தகம் வேண்டுவோர் ஜகன்மோகினி காரியாலயத்திற்கு எழு
திப் பெற்றுக்கொள்ளலாம்.

மகாத்மாஜீ ஸேவா சங்கத்தினர்.

# மகாத்மாஜி ஸேவா சங்கம்

## திருவல்லிக்கேணி

ஸ்ரீ கோசாரியனின் திருவருளால் சென்றவருஷம் மார்ச்சு மாதம் 7-ம் தேதியன்று ஸ்ரீமதி ருக்மிணி லக்ஷ்மீபதியின் தலைமையில் ஸ்ரீமதி அம்புஜம்மாள் அவர்கள் ஆரம்பித்துவைத்த மகாத்மாஜி ஸேவா சங்கம் ஆகிய குழந்தைக்கு இம்மாதம் சரியாக ஓராண்டு பூர்த்தியாகி, 25-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீமதி குட்டியம்மாளு அம்மாள் மாதவ மேனன் M. L. A. அவர்கள் தலைமையில் திருவல்லிக்கேணி வெங்கட் ரங்கம்பிள்ளைத் தெருவிலுள்ள வஸந்த பங்களாவில் ஆண்டு நிறைவு விழா வெகுவெகு சிறப்பாயும் பெருந்திரளான கூட்டத்தின் ஆரவாரத் துடனும் நடைபெற்றது.

சங்கத்து பாலிகா கழகத்துச் சிறுமிகள் ஸேவாசங்கத்தின் சிறப்புப் பாடலை மனோகரமான நாட்டியத்துடன் ஆரம்பித்து வெகு அழகாக ஆடினார்கள்.

ஸ்ரீமதி குட்டியம்மாளு அம்மாள் சங்கத்தின் ஒருவருஷ சேவையைப் பாராட்டியும் சங்கங்களின் அவசியத்தைப் பற்றியும் சங்கத்தின்மூலம் எத்தகைய சிறந்த அறிவும் அனுபவ ஞானமும் பெறலாம் என்பது பற்றி யும் முற்காலத்திய சிறந்த கொள்கைகள் இக்காலத்திலும் அவச்யம் வளரவேண்டும் என்றும் தற்கால நாகரீகத்தில் முற்கால சிறப்பு மக்கு கிறது என்றும் வெகு விரிவாகப்பேசி சபையோரை மகிழவைத்தார்கள்.

ஸ்ரீமதி சி. ஸரஸ்வதியம்மாள் வெண்கலமணிபோன்ற தமது த்வனி யில் பொருக்கு மணிகள்போன்ற பதப்ரயோகங்களுடன் சங்கத்தின் ஆரம்பம்முதல் இன்றுவரையில் அது ஆற்றியுள்ள திருப்பணிகளைக் குறிப்பிட்டுப் பாராட்டி வெகு அத்புதமாகப் பேசினார்கள்.

பாலிகா கழகத்தின் சிறுமிகள் "புத்தி வந்தது" என்கிற நாடகத்தை மிகச் சிறந்த முறையில் நடித்து சபையை மகிழ்வித்தார்கள். இதில் ஸ்ரீ யோகி சுத்தானந்தபாரதியார் எழுதிய மகாத்மாஜியின் சரித்திரத்தில் ஒருபகுதியை ஹரிகதா ரூபத்தில் புகுத்தியிருந்ததும், அக் கதையின் ஜீவ சக்தியால் விரோத பாவத்தையும் மாற்றி சமரச பாவத்தை உண்டாக் கிச் சுகப்படும்படியான ஒரு அபூர்வ கட்டத்தையும் நாடகத்திலேயே நாட்டியத்தையும் புகுத்தி நாடகம் மிக ஸ்வாரஸ்யமாக இருக்கும் படிச் செய்திருந்ததையும் சபையோர்கள் அதி ஆனந்தத்துடன் ரஸித் தார்கள். ஒவ்வொரு சிறுமியும் வெகு திறமையாயும் தத்ரூபமாயும் உணர்ச்சியுடனும் நடித்தாள்.

ஸேவா சங்கத்தின் இசை கோஷ்டியினர் அருமையாகப் பாடியபிறகு சங்கத்தின் உபதலைவி காயனபடு கீர்த்தனபடு ஸ்ரீமதி C. ஸரஸ்வதிபாய் அவர்கள் அம்ருதவர்ஷம் பொழிவதுபோல் தமது மெருகிட்ட தனி பந்தா வில் அபூர்வமாய் சொல்மாரி பெய்து வந்தனோபசாரம் செய்தார்.

பாலிகா கழகத்துச் சிறுமிகள் நாட்டியத்துடன் ரகுபதிராகவ ராஜாராம் என்ற மகாத்மாவின் மந்திரப் பாடலைப் பாடி ஆனந்தமாகக் கும்மி கோலாட்டத்துடன் விழாவைப் பூர்த்திசெய்தார்கள்.

நமது சங்கத்தின் அங்கத்தினர்கள் சிலர் இவ்விழா சிறப்புற நடப்ப தற்கு பரம ப்ரீதியுடன், உள்ளார்ந்த அன்புடன் ஒத்துழைத்ததைக் குறிப் பிடாமலிருக்கமுடியாது. விழாவை மிகச்சிறப்பாக ப்ரகாசிக்கச் செய்வதற்கு முக்ய கருவிகளாகிய ஒலிப்பெருக்கி, ப்ரகாச விளக்குகள் இவ்விரண்டையும் தமது அன்புக் காணிக்கையாக சங்கத்தின் கமிட்டி அங்கத்தினராகிய ஸ்ரீமதி M. O. ஜானகியம்மாள் செய்து உதவியளித்தார்.

நாடகத்திற்கான கதையை ஸ்ரீமதி வை. மு. கோ. [illegible] ஸ்ரீமதி A. ஸரோஜாபாய் வசனங்களமைத்து நாடகமாகச் சொல்கொடுத்து வெகு புத்திசாலித்தனமாயும் சங்கத்தின்பால்கொண்ட அ[illegible]புடனும் நடிக்கச்செய்தார்.

பாலிகா கழகத்துச் சிறுமிகளைக் கொண்டு முக்ய பாடல்களை நாட்டியமாய் மிகச் சிறப்புடன் பாவங்களமைத்து சொல்லிக்கொடுத்து ஆடச் செய்தார் ஸ்ரீமதி நீலா சுப்ரமண்யம் அவர்கள்.

நாடகத்திலேயே பாத்திரமாக நடித்த ஒரு சிறுமி வெகு அத்புதமாய் நாட்டியம் செய்தாள். விழாவின் மங்களகரத்தையும் முன்னிட்டு சந்தன புஷ்ப தாம்பூல வகையராக்களை வழக்கம்போல் தமது சொந்த கைங்கர்யமாக ஸ்ரீமதி கண்ணம்மாள் ராஜகோபாலனும், ஸ்ரீ வை. மு. கோவும் சேர்ந்து நடத்தினார்கள்.

விழா மிகச்சிறப்பாக நடப்பதற்கு ஸ்ரீமான் ரங்கநாதம் செட்டியார் அவர்களும், அவரது தர்மபத்னி ஸ்ரீமதி வேதவல்லியம்மாள் அவர்களும் அன்புடன் வஸந்த பங்களாவை உதவி மகிழ்வித்தார்கள்.

மேற்குறித்த சகல அன்பர்களுக்கும் விழாவை தலைமைதாங்கி நடத்திய தலைவிக்கும் பங்கெடுத்துக்கொண்ட சகல சகோதரிகளுக்கும் பாலிகாகழகத்துச் சிறுமிகளுக்கும் சேர்ந்து ஸ்ரீமதி வை. மு. கோ. அவர்கள் வந்தனோபசாரம் கூறியபிறகு, தாம்பூலம் வழங்கப்பட்டது.

இத்தகைய அருமையான சங்கத்தின் வருஷாந்திர அறிக்கை அச்சாகி அங்கத்தினர்களுக்குமட்டும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதுமிகவும் பெரிதாகவிருப்பதால் நமது மோகினியில் அப்படியே ப்ரசுரிக்கமுடியவில்லை. முக்ய ஸாரத்தைமட்டும் தருகிறோம்.

சென்ற வருஷம் சுமார் 70 அங்கத்தினர்களின் ஆதரவையும் அன்புபலத்தையும் கொண்டு ஆரம்பித்த இச்சங்கத்திற்கு இப்போது 300 அங்கத்தினர்களுக்குமேல் ஆதரவளித்திருக்கிறார்கள். அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகள் அனேகமாய் நமது மோகினியில் ப்ரசுரித்திருக்கிறோம். சென்ற ஒருவருஷத்தில் சங்கத்தில் நித்யப்படி வகுப்புகள், ப்ரதி வெள்ளிக்கிழமை பஜனைகள், இதைத்தவிர முக்யமான பண்டிகைகள், பெரியோரின் தினங்கள், தேசீய விழாக்கள், சத்காலக்ஷேபங்கள், சிறந்த உபன்யாஸங்கள், சிறுவர்களின் களியாட்ட விழாக்கள், சங்கீத கச்சேரிகள், பரிக்ஷைகள், போட்டிகள்முதலியவைகள்—52 வகையராக்கள்—நடந்தேறியிருக்கின்றன. ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு இலவசச் சம்பளம் கொடுத்து வருகின்றது. ஒரு ஏழைச் சிறுமிக்கு நர்ஸ் தொழில் பழக உதவியளித்தது. மற்றொரு ஏழைப் பெண்ணுக்கு விவாகத்திற்குத் திருமங்கல்யமும் பட்டு ரவிக்கையும் வாங்கிக்கொடுத்தது. மற்றொருபெண் N. லக்ஷ்மி என்பவள் நமது சங்கத்திலேயே இந்தி வகுப்பில் படித்து, இப்போது சங்கத்திலேயே கீழ்வகுப்புக்கு உபாத்தியாயினியாயிருந்துவருகிறாள். அவளுடைய மேல்வகுப்புப் படிப்புக்கான சம்பளம், புத்தகம் முதலியன சங்கம் உதவிவருகிறது.

சகோதரிகள் இச்சங்கத்திற்குப் பூர்ண ஆதரவளித்து இக்குழந்தை செழுசெழு வென்று வளருவதற்கான உதவி புரியவேண்டுமாய் மிகத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

“கோதா நிலயம்”
4 சுங்குவார் தெரு,
29—3—49.

வை. மு. கோதைநாயகி
G. R. ஜெயலக்ஷ்மி
காரியதரிசிகள்.

1823148
56

## ...தமாஜ் ஸேவா சங்கம்











(1) சங்கத்தில் பூஜாவிக்ரகமும், படங்களும். (2) ரேடியோ இசைக் ...ாஷ்டியினர். (3) கீதா பாராயணம். (4) ஊர்வலக்காட்சி. (5) ராம்துன். ...ங்கத்தின் விசேஷ நடவடிக்கைகளில் பலவற்றை வை. மு. ஸ்ரீ. போட்டோ ...த்து நமது வெள்ளிவிழா மலரில் பிரசுரித்து நேயர்களை மகிழ்வித்திருக்கிறார். ...லேயுள்ள படங்களில் 1, 3, 4, 5, மஹாத்மாஜியின் சிரார்த்த தினத்தன்று ...க்கப்பட்டவை.

---

**சென்னை ரேடியாவில் நமது சங்க நிகழ்ச்சிகள்.**

3 - 4 - 49— 1 முதல் 1 - 30 வரை— புதுவருடக் கொண்டாட்டம்

7 - 4 - 49— 7 - 30—7 - 45 P. M. இசைக் கோஷ்டியினர்.

<u>கேட்டு, அபிப்ராயங்களை எழுதுங்கள்</u>

வெள்ளிவிழாமலர் பல அன்பர்களுக்குக் கிடைக்காத குறையை
தீர்க்க, அதில் வெளியான அற்புத நவீனம் அமரத்யாகி தனிப் புத்தகமாக உயரிய கிளேஸ் பதிப்பு வெளியாகி இருக்கிறது.



# அமரத்யாகி

10 படங்களுடன்
ரூ. இரண்டு.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
*Managing Editor:* V. M. SRINIVASAN, M.A., B.L.,